# உதயன்

34 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 065 வள்ளுவர் ஆண்டு 2044 தை 17 புதன்கிழமை (30/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




ஆசி.– இலங்கை வீரர்கள் சமரசம் 23

இலங்கையை காப்பாற்ற அமெ. –இந். கூட்டுச் சதி 08





அமெ. 'சைபர்' பிரிவை பலப்படுத்தும் பென்டகன் 09

விண்ணுக்கு குரங்கை அனுப்பியது ஈரான் 10



# நாட்டை இந்தியாவிடம் அடகு வைத்துள்ளது அரசு

## ஐக்கிய தேசியக் கட்சி சாடுகிறது

கொழும்பு, ஜனவரி30

ஜெனிவா கூட்டத் தொடரில் இந்தியாவின் முழு ஆதரவைத் தமக்குப் பெற்றுக்கொள்வதற்காக சம்பூர் அனல் மின் நிலையத்தை இந்தியாவுக்கு அரசு இலஞ்சமாகக் கொடுத்துள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான இந்த இராஜதந்திர இரகசிய இணக்கப்பாட்டுக்கமையவே சம்பிக்க ரணவக்கவின் அமைச்சுப் பதவியையும் அரசு பறித்துள்ளது. இந்த இரகசியத்தை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அம்பலப்படுத்தியது. பார்க்க பக்கம் 04

> "நீங்கள் ஜெனிவா கூட்டத்தொடரில் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் - என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவிடம் இரகசிய இராஜதந்திர இணக்கப்பாடொன்றைச் செய்துள்ளார்."

## குளத்தில் மூழ்கி சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், ஜன.30

14வயதுச் சிறுவன் ஒருவன் குளத்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். அவனது சடலம் கரையொதுங்கிய நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது.

சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் நிக்சலன் (வயது 14) என்ற சிறுவனே குளத்து நீரில் மூழ்கி உயிரிழந்தவனாவான்.

வழமையாக கந்தரோடை உப்புக்குளம் பகுதிக்குச் சென்று வரும் இந்தச் சிறுவன் நேற்று முன்தினமும் நண்பகல் அவ்வாறே சென்று குளத்து நீரில் இறங்கி விளையாடியுள்ளான். இதன் போதே அவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சிறுவனைக் காணாது பெற்றோர் தேடியுள்ளனர். நேற்றுக் காலை உப்புக்குளக்கரையில் சிறுவனின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த 4 86 36)

## அரசமைப்பில் திருத்தம் ஆராய குழு நியமனம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30

அரசமைப்பில் திருத்தம் செய்வது குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. நாடாளுமன்றம் மூலம் இந்தக் குழு நியமிக்கப்படும். இதற்கான பரிந்துரைகளை அமைச்சரவையே வழங்கும்.

நேற்றுமுன்தினம் மாலை அலரிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

குற்றப் பிரேரணை விசாரணை தொடர்பில் குறைபாடுகள் நிலவுவதால் அரசமைப்பில் திருத்தம் செய்யப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். பார்க்க பக்கம் 04

# இலங்கை மீது விரைவில் பொருளாதாரத் தடை

## எச்சரிக்கிறது பிக்குகள் முன்னணி

கொழும்பு, ஜன. 30

இலங்கையின் தற்போதைய மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உயர்மட்டக் குழுவொன்று தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. ஆனால், இங்கு நிலைமை படுமோசமாகவுள்ளது.

எனவே, மார்ச் மாத ஜெனிவாத் தொடரின்போது அந்தக்குழு இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரம் உள்ளிட்ட முக்கிய தடைகளுக்கான சட்ட ரீதியிலான பரிந்துரைகளை முன்வைக்கும் பார்க்க பக்கம் 04

# மாத்தளனுக்கு 5 படகுகளுடன் திடீரென வந்த சிங்கள மீனவர்

## அப்பகுதி மக்கள் திரண்டு எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவு மாத்தளன் பகுதிக்கு தென்னிலங்கையிலிருந்து 3 லொறிகளில் திடீரென வந்திறங்கிய சிங்கள மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழில் செய்ய முயன்றபோதும், மாத்தளன் பகுதி மீனவர் சங்கங்களின் கடும் எதிர்ப்பினால் அவர்களின் முயற்சி கைவிடப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில், தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்கள மீனவர்கள் அத்துமீறிச் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கொக்கிளாய், நாயாற்றுப் பகுதிகளில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த சிங்கள மீனவர்களுக்கு மேலதிகமாகச் சட்ட விரோதமான சிங்கள மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாத்தளன் பகுதிக்கு திடீரென 3 லொறிகளில் 5 மீன்பிடிப் படகுகளுடன் சிங்களக் குடும்பங்கள் வந்தன. தாம் 1983ஆம் பார்க்க பக்கம் 04

# கோப்பாயில் இளம் தாய் கிணற்றில் சடலமாக மீட்பு

## சந்தேகத்தில் கணவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.30

கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து இளம் தாய் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவரது கணவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்மன் கோயில் வீதி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சுரேஸ் கஜனிழி (வயது 23) என்ற இளந்தாய் ஒருவரே இவ்வாறு கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் ஒருவயதுடைய குழந்தையின் தாயாவார்.

அவர் வசித்து வந்த வீட்டுக்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட கிணற்றிலிருந்தே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இவருக்கும் கணவருக்கும் இடையே தகராறு இருந்து வந்ததாக அவர்களது உறவி பார்க்க பக்கம் 04



கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்றுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர் ஆஸ்திரேலிய எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் ஜூலி பிஷொப் தலைமையிலான குழுவினர். (த 6)

# படுகொலைச் சட்டமே 'ஷரீ ஆ' சட்டம்; சவூதிக்கு எதிராகவே பிரேரணை தேவை

## ஜாதிக ஹெல உறுமய சீற்றம்

கொழும்பு, ஜன.30

முஸ்லிம்களின் ஷரீ ஆ சட்டத்தை 'படுபயங்கரமான படுகொலைச் சட்டம்' என வர்ணித்துள்ள ஜாதிக ஹெல உறுமய, மனித உரிமைகளைப் பற்றி பிதற்றிக்கொள்ளும் அமெரிக்கா, ரிஸானா நபீக்கை படுகொலை செய்த சவூதி அரேபியாவுக்கு எதிராகத்தான் ஜெனிவாவில் பிரேரணை கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, தேசிய கீதம் பெரும்பான்மை இனத்தவர்களின் மொழியிலேயே இசைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் அந்தக் கட்சி, [illegible] போசனையை அ[illegible]க்கு எதிரான நடவடிக்கை என்றும் கண்டித்துள்ளது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் குழு நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தியது. இதன்போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த [illegible] அமெரிக்க 'திரிசூல குழு' கொழும்பு நிர்வாகத்துக்கு எதிராக ஜெனிவா தொடரில் மீண்டும் பார்க்க பக்கம் 04

# நெத்தலி, பருப்பு, பயறுக்கும் அமைச்சர்கள் ஆச்சரியமான அமைச்சரவை இலங்கையில்

கொழும்பு, ஜன.30

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சிகளும், அரசியல் நோக்கர்களும் பல கோணங்களில் நகைச்சுவை கலந்த கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், இலங்கை அரசின் அமைச்சரவையை 'உலகிலேயே ஆச்சரியமான அமைச்சரவை' என வர்ணித்துள்ள ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத், பருப்பு, நெத்தலி, அரிசி, கடலை, கல் ஆகியவற்றுக்குக்கூட அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என்றும் கிண்டலடித்துள்ளார்.

அரசின் விலைப்பொறிமுறை மக்களின் சந்தோஷத்தைச் சூறையாடியுள்ள நிலையில், விநோத நடவடிக்கைகளுக்கு அமைச்சரொருவர் நியமிக்கப்பட்டுள்ளமையானது இந்த அரசின் விநோதச் செயல் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

[illegible] பார்க்க பக்கம் 04

## பிரி. வெளியுறவு அமைச்சர் முல்லைத்தீவு செல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கை அரசு மீதான சர்வதேச நெருக்கடிகள் வலுப்பெற்றுவரும் நிலையில், பிரிட்டன் வெளிவிவகார [illegible] பேர்ட் நாளை வியாழக்கிழமை இலங்கைக்கு வருகிறார். இலங்கை பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேசங்களில்

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற 107 பேர் தண்டமாக செலுத்தினர் 59 இலட்சம் ரூபா

யாழ்ப்பாணம்,ஜன.30

கொழும்பிலிருந்து வந்த விசேட மின்சாரசபைக் குழுவினரின் திடீர் சோதனைகளில் கடந்த வாரத்தில் குடாநாட்டில் 107 பேர் சிக்கினர். இவர்களிடம் நீதிமன்று ஊடாக 59 இலட்சத்து 39 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது.

இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார் யாழ்.சுன்னாகம் மின் பொறியியலாளர். எஸ்.ஞானகணேசன். இதன் பின்பு நேற்று முன்தினம் கொழும்புத்துறை பகுதியில் 45 பேர் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றத்துக்காக 29 இலட்சத்து 67 ஆயிரம் ரூபா செலுத்தியுள்ளனர்.

பருத்தித்துறையில் 17 பேர் கைதாகி அவர்களிடமிருந்து 21 இலட்சத்து 39 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.நகர் பகுதியில் 4 பேர் கைதாகி உள்ளனர். இவர்களிடம் இருந்து 5 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் மின்கம்பங்களில் இருந்து சட்டவிரோதமான, ஆபத்தான முறையில் மின்சாரம் பெற்ற குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறையில் 24 பேர் மின்மானியில் மோசடி செய்தமைக்காக 7 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாவை தண்டமாகச் செலுத்தியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-13)

வலி.வடக்கில் விடுவிக்கப்படாத பகுதிகளில்

## மூன்று மாதங்களில் மீள்குடியமர்வு என்ற அமைச்சரின் வாக்குறுதி காற்றில் பறந்தது

வலி,வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சில கிராம சேவையாளர் பிரிவுகள் 3 மாதங்களில் விடுவிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதும் குறிப்பிட்ட காலம் முடிந்தும் அந்தப் பகுதி இராணுவத்தின் பிடியிலேயே உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்ட உறுதிமொழியை வழங்கியிருந்தார். ஆனால் இதுவரையில் குறித்த பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

அந்தப் பகுதிகளில் மீளக் குடியமர்வுக்காக பதிவுசெய்துள்ள மக்கள் இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் உயர்பாதுகாப்பு வலயமாகவே இருக்கின்றன. இதனால் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் நீண்ட காலமாகத் தங்கியுள்ளனர்.

இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதற்காக பலவேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவே இல்லை.

இந்த நிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது விடுவிக்கப்படாத 24 கிராமசேவகர் பிரிவுகளும் எப்போது விடுவிக்கப்படும் என்று மக்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் 3 மாதங்களுக்குள் மேற்படி பிரதேசங்கள் விடுவிக்கப்படும். அதன் போது நீங்கள் மீளக்குடியமர்ந்து கொள்ளலாம் என்று பதிலளித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவுற்று 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அறிவிக்கப்பட்ட பிரதேசம் மீளக் குடியமர்வுக்காக விடுவிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை இதனால் அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வதற்காக காத்திருந்த மக்கள் தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர். (ஜ-5)

## இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

அரியாலையில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

ஏ-9 வீதி, அரியாலையைச் சேர்ந்த கோபாலராஜா உதயசீலன் (வயது-27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

யாழ்.ஆரியகுளம் சந்தியை அண்மித்து கைத்தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை நடத்திவந்த இவர் பின்னர் மற்றொருவருக்கு அந்த விற்பனை நிலையத்தை விற்பனை செய்துள்ளார். எனினும் அதற்கான பணம் உதயசீலனுக்கு முழுமையாக இன்னும் செலுத்தி முடிக்கப்படவில்லை என்பதை உறவினர்கள் தெரிவித்தனர்.

கடன்தொல்லை இவரது மரணத்துக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே சடலம் மீட்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. (த-4)

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரனின் பதவி திடீரென பறிப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய பா.ஜெயகரன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேச சபைகளின் நிதிகள் அரசால் மீளப் பெறப்படுகின்றது என்ற செய்தி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியதன் பின்னணியிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேச சபைகள், நகர சபைகள் என்பவற்றின் மூலம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட 560 மில்லியன் ரூபா நிதி அரசால் மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயினும் அரச தரப்பினர் வசமுள்ள பிரதேச சபைகளின் நிதி மீளப் பெறப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த ஆண்டு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி வெளியானதை அடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் உடனடியாக பொறுப்புக்களை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஒப்படைக்குமாறு உதவி ஆணையாளர் ஜெயகரனுக்கு அறிவுறுத்தல் கடிதம் வழங்கப்பட்டது.

அத்துடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்குச் சென்று பொறுப்புக்களை உடனடியாக ஏற்குமாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய பா.ஜெயகரனுடன் பலமுறை தொடர்புகொள்ள முயன்றபோதும் அவரது தொடர்பு கிடைக்கவில்லை. (த-5)

## மகாத்மா காந்தி நினைவு நாள் இன்று

யாழ்ப்பாணம், ஜன.30

மகாத்மா காந்தியின் 65 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அலுவலகத்தில் விசேட நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக சங்கச் செயலாளர் அறிவித்துள்ளனர். (ஜ-16)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 30

மாதகல் பானாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தின சங்காபிஷேக நிகழ்வு நாளை வியாழக்கிழமை, முற்பகல் 9 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி, விஷேட பூசை வழிபாட்டுடன் அம்பாள் உள்வீதி, வெளி வீதி உலா வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (16)




ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக நேற்று கொழும்பில் கறுப்பு ஜனவரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக பண மோசடி

## வழக்கின் சந்தேக நபர்களில் ஒருவருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.30

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஒருவரிடமிருந்து பணத்தைப் பெற்று ஏமாற்றிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில், சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க கோரும் பிணை மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி, பளையைச் சேர்ந்த சீலன் டினேஸ் என்பவரிடம் இருந்தே 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் பெறப்பட்டு அவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி இடம்பெற்றது.

வத்தளை மாபோளையைச் சேர்ந்தவர்களான லாசடு ஆன் விற்ரா, தங்கநாயகம் மோகன் லால் ஆகிய இருவரிடமுமே பணத்தை கொடுத்ததாக சீலன் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டது. அதனடிப்படையில் விசாரணை மேற்கொண்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸார் கடந்த செப்ரெம்பர் மாதம் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையிலேயே இரண்டாவது சந்தேக நபர் சார்பாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த மன்று பிணை அனுமதி வழங்கியது. அதன்படி ஒரு இலட்சம் ரூபா ரொக்கப்பிணையிலும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல மன்று அனுமதியளித்தது:

தவிர சந்தேக நபர் தனது கடவுச்சீட்டை கிளிநொச்சி நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்றும் மாதாந்தம் முதலாம், 15 ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது. (ஜ-4)

## தனது பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 5 வருடம் ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம்,ஜன.30

பதின்ம வயதுச் சிறுமிகள் இருவரை பாலியல் துஸ்பிரயோகம் செய்யமுற்பட்ட பிரஸ்தா சிறுமிகளின் தந்தைக்கு ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறை விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று.

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

2006 -2007 காலப்பகுதியில் பதின்மவயதுடைய இரண்டு சிறுமிகளையும் பாலியல் துஸ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளார் அவர்களது தந்தை. அவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபரின் தந்தையைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டு யாழ்.மேல்நீதிமன்றில் விசாரணை நடைபெற்றது.

அதன்போது குறித்த தந்தை தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதன்போது குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் அதனை சிறுவர் இல்லத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள அவரது சிறுமிகளுக்காக அந்த இல்லத்துக்கு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

தவிர ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட காலச் சிறைத் தண்டனையும் விதித்தது நீதிமன்று. (ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிலாக்கண்டியில் சம்பா நெல் அறுவடை

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டி வயல் பிரதேசத்தில் இந்த வருடம் முதன் முறையாக பயிரிடப்பட்ட சம்பா இன நெல் உற்பத்தியாளங்களின் வயல் விழா கடந்த வாரம் நாவற்குழி மற்றும் கோயிலாக்கண்டி பகுதிகளில் நடைபெற்றது.

கோயிலாக்கண்டி மத்தி சிதம்பர சுப்பிரமணியம் ஆலய முன்றலில் நா.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு நெற்செய்கையாளர்களைப் பாராட்டியதாக கமக்கார அமைப்பின் செயலாளர் த.தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (த-9)



கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலைக்கென்று பல லட்சம் ரூபா செலவில் கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தை பாடசாலையின் பழைய மாணவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான க.கேதீஸ்வரநாதன் அமைத்து வழங்கியுள்ளார். புதிய கட்டடத்தை கேதீஸ்வரநாதன் தம்பதிகள் மங்களவிளக்கேற்றித் திறந்து வைத்தனர். (த-17)

## வாழைக்குலைச் சந்தையில் இப்போது 'டிஜிற்றல்' தராசு

யாழ்ப்பாணம், ஜன.30

சுன்னாகம் வாழைக்குலை விற்பனைச் சந்தையில் நிறுத்தல் அளவைகளுக்கென 'டிஜிற்றல்' தராசு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த 'டிஜிற்றல்' தராசுகளைப் பயன்படுத்துவதன் மூலம் நிறைகளைச் சரியாகக் கணிப்பிட முடிவதால் பயனாளிகள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.

இந்தச் சந்தையில் முன்னர் வாழைக்குலைகளின் நிறையை அளவிடுவதற்கு மேடைத் தராசுகளே பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்த மேடைத் தராசுகள் மூலம் நிறுத்தல் அளவீடுகளில் வழுக்கள் ஏற்படுவதாக மக்கள் பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டினர்.

இதனை அடுத்தே 'டிஜிற்றல்' தராசுகளை சந்தையில் பயன்படுத்துவதற்குச் சபை தீர்மானித்ததாகத் தலைவர் தெரிவித்தார். (த-17)

## 175 குடும்பங்களுக்கு தெல்லிப்பழையில் உதவி

யாழ்ப்பாணம், ஜன.30

சேவாலங்கா மன்றத்தினால் 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கடந்த வருடம் தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த 175 குடுங்களுக்கு 10 மில்லியன் ரூபா வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்ட வலி. வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 175 குடும்பங்களுக்கு இந்த வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வாழ்வாதாரத் திட்டத்தில் விவசாய உள்ளீடுகள், கால்நடை வளர்ப்புக்கான உதவி, நீர்ப்பம்பிகள், சிறு வியாபாரத்துக்கான உதவி, கிணறு துப்புரவு மற்றும் காசுக்கான வேலைத் திட்டங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள் மூலம் அவர்கள் தாமாகவே தொழில் முயற்சிகளை மேற்கொண்டு அன்றாட தேவைகளை நிறைவேற்றப் போதுமான வருமானத்தைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விவசாய உள்ளீடுகளைப் பெற்றவர்கள் தமது வீட்டுக் காணிகளில் வீட்டுத் தோட்டத்தை மேற்கொண்டு அதனூடாகச் சிறு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் கால்நடை வளர்ப்புக்கான உதவிகளைப் பெற்றவர்கள் இறைச்சி, பால் என்பவற்றைக் கால்நடைகளில் இருந்து பெற்றுத் தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளவும் சிறுவியாபாரத்துக்கான கடன் உதவிகளைப் பெற்றவர்கள் ஒரு சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள ஏதுவாகவும் இந்தத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிணறுகளைத் துப்புரவு செய்து குடிதண்ணீர் வசதியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. (த-14)

# 19 ஆயிரத்து 89 மீனவருக்கு யாழில் எரிபொருள் மானியம்

### கடற்றொழில் திணைக்களம் தகவல்

*யாழ்ப்பாணம், ஜன.30*

*யாழ்.மாவட்டத்திலுள்ள 14 கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 19 ஆயிரத்து 89 பேருக்கு மானிய எரிபொருள் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

இவற்றில் பிளாஸ்ரிக் படகுகள், மரத்தில் இயந்திரம் பூட்டப்பட்ட படகுகள், ஒரு நாள் கலங்கள் ஆகியவற்றுக்கு இவ்வாறு மானிய எரிபொருள் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என யாழ்.மாவட்டக் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டக் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளான ஆழியவளை, தாளையடி, பருத்தித்துறை கிழக்கு, பருத்தித்துறை மேற்கு, காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு, சண்டிலிப்பாய், சுழிபுரம், ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, யாழ்ப்பாணம் மேற்கு, யாழ்ப்பாணம் கிழக்கு, சாவகச்சேரி ஆகிய பிரிவுகளில் உள்ள மீனவர்களுக்கே மானிய எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் எரிபொருள்கள் விலை ஏற்றப்பட்டன. இதனைய்டுத்து மீனவர்களின் நன்மை கருதி கடற்றொழில் திணைக்களத்தால் மானிய எரிபொருள் முத்திரைகள் வழங்கப்பட்டன.

பிளாஸ்ரிக் படகுகளுக்கு 9 ஆயிரத்து 375 ரூபா பெறுமதியான முத்திரையும், மரத்தில் இயந்திரம் பூட்டப்பட்ட கலங்களுக்கு 9 ஆயிரத்து 375 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒருநாள் கலங்களுக்கு 19 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியாக முத்திரையும், பலநாள் கலங்களுக்கு 31 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான முத்திரையும் வழங்கப்பட்டன.

இவற்றில் 14 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளில் உள்ள பிளாஸ்ரிக் கலம் உபயோகிப்போரில் 16 ஆயிரத்து 409 பேருக்கும் மரத்தில் இயந்திரம் பூட்டப்பட்ட கலம் உபயோகிப்போரில் 2 ஆயிரத்து 131 பேருக்கும். ஒருநாள் கலம் உபயோகிப்போரில் 279 பேருக்கும், பலநாள் கலம் உபயோகிப்போரில் 270 பேருக்கும் கடந்த வருடம் மானிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மீன்பிடிக் கலங்கள் வருடாவருடம் புதுப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் அவை தொழிலில் ஈடுபட வேண்டும்.

பதிவு செய்த இலக்கம் கலத்தில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான கலங்களுக்கே மானிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.இந்த வருடமும் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மானிய முத்திரைகள் வழங்கப்படும் - என்றார். (த-13)

## நிகழ்வுகள் இன்று

**கட்டடத் திறப்பு விழா**

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் 120 ஆவது ஆண்டு நிறைவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் தமிழ் காண்டம் சிறப்பிதழ் வெளியீடும் முற்பகல் 10 மணிக்கு வித்தியாலயத்தின் புதிய மண்டபத்தில் பாடசாலை அதிபர் கே.சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

**கூட்டம்**

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

★ ★ ★

வடமராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்குவலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

## வெள்ளங்கரை மயானத்தை அண்டியதாக கொல்களம்

யாழ்ப்பாணம்,ஜன.30

வல்வெட்டித்துறை நகர சபைக்கு சொந்தமாக வெள்ளங்கரை மயானத்தை அண்டிய பகுதியில் கொல்களம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் மாதாந்தக் கூட்டம் சபையின் தலைவர் ந.ஆனந்தராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக வல்வெட்டித்துறை நகரசபைக்குச் சொந்தமான கொல்களம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொல்களத்தை வெள்ளாங்கரை மயாணத்தை அண்டிய பகுதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதுவரை தற்காலிக ஏற்பாடாகக் கரவெட்டிப் பிரதேச சபை கொல்களத்தை பயன்படுத்த அனுமதிக்குமாறும் அதற்குரிய கட்டணமாக மாட்டிறைச்சிக் கடை குத்தகையில் 10 வீதத்தைச் சபைக்குச் செலுத்துவதாகவும் கரவெட்டிப் பிரதேச சபையிடம் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியைத் தற்காலிக ஏற்பாடாக கரவெட்டிப் பிரதேச சபையின் கொல்களத்திலிருந்து மாட்டிறைச்சியைக் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்குமாறும் கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைவிட வல்வெட்டித்துறை மத்திய பஸ் நிலைய சிற்றூண்டிச்சாலை சபைத் தீர்மானத்தின்படி வல்லை சனசமூக நிலையத்துக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. இதனை இரத்துச் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் முடிவை சபை ஏற்றுக் கொள்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(த-8-14)

## கடைகளின் முன் நிழல் கூரைகளை நேற்று அகற்றியது மாநகர சபை

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.நவீன சந்தைப் பகுதியில் சில கடைகளின் முன்பாக கூரையுடன் இணைத்து அமைக்கப்பட்டிருந்த நிழற் கூடாரங்களை யாழ்.மாநகர சபை நேற்று அகற்றியது. இதனால் கடைஉரிமையாளர்களுக்கும் யாழ். மாநகர ஆணையாளர் தலைமையிலான குழுவினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

யாழ். நவீன சந்தைப் பகுதியில் முன்னர் சைக்கிள் தரிப்பிடம் அமைந்திருந்த இடத்துக்கு அருகில் இருந்த கடைகளின் கூடாரங்களே இவ்வாறு நேற்று அகற்றப்பட்டன.

யாழ்.நகரைச்சுத்தப்படுத்த வேண்டும் என்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்றும் ஆணையாளர் தலைமையிலான குழுவினரால் கடை உரிமையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அந்தக் நிழற் கூடாரங்களுக்கும் தொடர்பில்லை என்று கூறும் கடை உரிமையாளர்கள் உண்மையான காரணம் என்னவென்று கூறப்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.

இந்தக் கடைகளின் முன்பாக உள்ள சிறு வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மட்டுமே போய்வர முடியும். பெரிய வாகனங்களின் போக்குவரத்து அதில் இடம்பெறுவதற்கு ஏற்ற இட வசதியில்லை.

கடைகளுக்கு உள்ளேயும் வெயிலின் தாக்கம் உள்ளமையினால் கடைக்காரரும் அங்கு செல்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர மழை காலங்களில், மழைநீர் கடைகளுக்கு உட்புகும் வகையிலேயே கடைகளின் அமைப்பு உள்ளது. பாதுகாப்புத் தேடுவதற்காகவே நிழல் கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

இதனை அகற்றுமாறு



தைப்பொங்கலுக்கு முன்னர் மாநகர சபையினர் உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்தனர். ஆனால் அதற்கான காலவரையறை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையிலேயே நேற்று அங்கு சென்ற மாநகர ஆணையாளர் தலைமையிலான குழுவினர் நிழல் கூடாரங்களை அகற்றியுள்ளனர். அதன் போதே இருதரப்பினருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது.

குறித்த கடைகளின் உரிமையாளர்களை மாநகர அலுவலகத்துக்கு வந்து தமது பிரச்சினைகளைத் தெரிவிக்குமாறு கூறப்பட்டதை அடுத்து அவர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

கடைகளின் முன்பாக குறித்த அளவில் நிழல் கூடாரம் அமைக்க மாநகர சபை அனுமதி வழங்குவதாகத் தம்மிடம் தெரிவித்ததாக கடை உரிமையாளர்கள் கூறினர். (த-4-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரி. வெளியுறவு...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
வந்தடைந்ததும் அவர் முதலில் முல்லைத்தீவுக்குச் செல்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகளின் விதிமுறைகளை மீறி இலங்கை அரசு, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவி நீக்கியது. இதனால் இந்த ஆண்டு இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை வேறுநாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று பல்வேறு நாடுகள் கோரின. அத்துடன் பிரிட்டன் மகாராணியாரே மாநாட்டை ஆரம்பித்து வைப்பது வழக்கம். ஆனால் அவரும் பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெற்றால் அதில் கலந்துகொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட்டின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது.

இலங்கைக்கு நாளை வருகைதரும் பேர்ட் முல்லைத்தீவுக்கு முதலில் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதுடன் அங்கு நடைபெறும் நிகழ்வொன்றில் பங்குபற்றவுள்ளார். பின்னர் அன்று இரவு கொழும்பு திரும்பியவுடன் அரசதரப்புத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்பின்னர் வெள்ளிக்கிழமை, லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த நிலையத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலிலும் அவர் பங்குபற்றவுள்ளார். பின்னர் அவர் பிரிட்டன் பயணமாவார். (த-5)

## நெத்தலி...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
ளைப்பாதுகாப்பதற்கான பொறுப்பு சொய்ஸாவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மாற்றங்கள் உலகில் வேறெங்கும் நடைபெறாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது நேற்றுமுன்தினம் அரசால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் குறித்தே அதிகமாகக் கருத்து வெளியிடப்பட்டது.

அரசு ஏன் இந்தத் திடீர் மாற்றத்தைச் செய்தது? அதற்கான காரணங்கள் என்ன? இது போன்ற விடயங்களை விவாதித்த விஜித்த ஹேரத் இதன்போது புட்டுவைத்தார்.

''நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அமைச்சரவை மாற்றம் செய்யப்படுவதுதான் சாதாரண நடைமுறையாகும். ஆனால் எமது நாட்டில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு சோரம்போகின்றவர்களுக்குப் பதவிகளை வழங்கத்தான் அமைச்சரவை மாற்றப்படுகின்றது.

இந்த அமைச்சரவை மாற்றம் குறித்து அரசதரப்பினர் பல்வேறு கதைகளைக் கூறிவருகின்றனர். அரசுக்கு வக்காளத்து வாங்குபவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கே இம்மாற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளது என்று நாம் உறுதியாகக் கூறுகின்றோம். கடந்த முறை நடைபெற்ற அமைச்சரவை மாற்றமும் இதே நோக்கிற்றான் இடம்பெற்றது.

வனப் பாதுகாப்பு ஒரு அமைச்சரிடமும், வனவிலங்குப் பாதுகாப்பு மற்றுமோர் அமைச்சரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இம்முறை விலங்குகளை சொய்ஸாவிடம் ஒப்படைத்து வனம் சுசிலுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எவ்வித தூரநோக்கமுமின்றியே இவ்வாறு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நாடு அதலபாதாளத்தை நோக்கிச் செல்லாது தடுப்பதற்கு இந்த அமைச்சரவை குழாமுக்கு முடியுமா?

அதேவேளை, குற்றப்பிரேரணையை கையளித்த பவித்திராவுக்கு மின்சக்தி, எரிசக்தி பதவி வழங்கப்பட்டு அவரின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், குற்றப்பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டு அவரின் அதிகாரங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

அப்போதைய சூழ்நிலையில் உதவிபுரிந்தவர்களுக்கு கைமாறாகத்தான் இந்த மாற்றங்கள் அமைச்சரவையால் நிகழ்த்தப்பட்டுள்ளன. மாறாக மேற்படி துறைகள் சார்ந்த விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கல்ல. அதுகுறித்து அரசுக்கு அக்கறையுமில்லை.

ஏன் அவசர அவசரமாக அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டுள்ளது? இதுகுறித்து அறிந்துகொள்வதற்கு மக்கள் ஆர்வமாக உள்ளனர். அமைச்சர் ஒருவர் பலவீனமாகவோ அல்லது தனது அமைச்சுப் பதவியை சரிவர நிறைவேற்றாததாலேயோ இந்த மாற்றம் நிகழ்த்தப்படவில்லை. சிலர் வகிக்கும் அமைச்சுப் பதவிகளின் பிரிவுகளைப் பிரிக்கவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது. பந்துலவின் கல்வியமைச்சுப் பதவி இரண்டாகப் பிரிக்கப்பட்டமை இதற்குச் சான்றாகும்.

பாடசாலைச் சீருடை விநியோகம் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவொன்றுக்கு அமைச்சரவைக் கூட்டத்தின் போது கல்வியமைச்சர் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். இதற்குப் பதிலடியாகவே அவரிடமிருந்து கல்விச் சேவை பிரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தற்போது புதிய அமைச்சரொருவரும் நாட்டில் இருக்கின்றார். ஐ.தே.கவிலிருந்து அரசுப்பக்கம் தாவியவருக்கு சீனிக்கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அரிசி, பருப்பு, நெத்தலி, பயறு, கல், தேங்காய் ஆகியவற்றுக்குக்கூட அமைச்சர்கள் நியமிக்கப்படக்கூடும். இது ஜம்போ அமைச்சரவை மட்டுமல்ல, இழுத்தால் நீண்டுகொண்டே செல்லும் 'இலாஸ்டிக்' ஜம்போ' அமைச்சரவையாகும்- என்றார். (த-சி)

## படுகொலைச்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
மொருமுறை பிரேரணை கொண்டுவரப்படவுள்ள விடயத்தை உறுதிப்படுத்தியது தெரிந்ததே.

அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு எதிராக அரச பங்காளிக்கட்சிகளும், கடும்போக்குடைய சிங்களப் பேரினவாத அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்க இராஜதந்திரக்குழுவின் மேற்படி கருத்து தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரிடம் கருத்து கேட்கப்பட்டது. இதன்போது அமெரிக்காவின் அறிவிப்பை வன்மையாகக் கண்டித்த அவர், இலங்கையின் தற்போதைய நிலைவரங்களையும் எடுத்துரைத்தார்.

இந்த நாட்டில் புலிகள்தான் அசம்பாவிதங்களைப் புரிந்தனர். தமிழ், முஸ்லிம், சிங்களம் எனப் பாகுபாடின்றி அனைவருக்கும் எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். தீவிரவாதத்துக்கு எதிராகக் குரல்கொடுத்தவர்களை மரணப்படுக்கையில் இருத்தினர்.

போருக்குப் பின்னர் தற்போதைய அரசு நாட்டில் பல துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. சிங்களப் பகுதிகளை விட தமிழர் பகுதிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்றும் மேதானந்த தேரர் கூறினார்.

எனவே, இலங்கையில் இவ்வாறு நல்லெண்ண செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் தறுவாயில், அரசுக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவருவதை அனுமதிக்க முடியாது. புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்குப் புரியாதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அமெரிக்காவோ அல்லது இதர நாடுகளோ மனித உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றன. ஆன்ால், சவூதிக்குப் பணிக்குச் சென்ற ரிஸானா நபீக் கழுத்து துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். மிகவும் கொடூரமான முறையில் கழுத்து வெட்டப்பட்டுள்ளது. கழுத்தை வெட்டிக்கொலை செய்யுமாறு எவருமே கூறவில்லை எனவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், முஸ்லிம்களின் 'சரி ஆ' சட்டமானது படுகொலைச்சட்டம் எனக் குறிப்பிட்ட அவர், இவ்வாறு மனிதப் படுகொலை புரியும் சவூதிக்கு எதிராகத்தான் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஜெனிவாவில் பிரேரணை கொண்டுவரவேண்டுமென்றும், மாறாக இலங்கை போன்ற நாடுகளுக்கு அல்லவென்றும் சுட்டிக்காட்டினார்.

**தேசிய கீதச் சர்ச்சை**

ஒரு நாட்டில் பெரும்பான்மையாக வாழும் இனத்தின் மொழியிற்றான் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும். அதுதான் வழமையும் கூட.

திருகோணமலையில் நடக்கும் சுதந்திர தின விழாவில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டால், மஹியங்கனையில் நடக்கும் நிகழ்வுகளின்போது வேடுவ மொழியில் தேசிய கீதம் இசைக்கவேண்டிய நிலை ஏற்படும்.

அரசின் நல்லெண்ண செயற்பாடுகளைத் திசைதிருப்பும் யோசனையே இதுவாகும். தமிழர்களுக்கு எதிரானவர்கள் அல்லர் நாம். ஏனைய விடயங்களிலும் தமிழர்களுக்கு இடமளிக்க வேண்டும். ஆனால், தேசிய கீதம் ஒரு மொழியிற்றான் இருக்க வேண்டும், இசைக்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார் எல்லாவல மேதானந்த தேரர்.

## மாத்தளனுக்கு..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
ஆண்டுக்கு முன்னர் அந்தப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து அவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சித்தனர்.

இதற்கு அந்தப் பகுதி மக்களுடன் மீனவர் சமாசங்களின் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் சிங்கள மீனவர்கள் கடலில் இறங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் தென்னிலங்கையிலிருந்து வந்தவர்கள் 1983ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மாத்தளன் பகுதியில் இருந்தமைக்கான காணி உறுதிகளையும் காண்பித்துள்ளனர்.

எதிர்வரும் 8ஆம் திகதி கடல் தொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளதாகவும் இதன் போது இந்தச் சிங்கள மீனவர்களை தொழில் செய்ய அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பது எனவும் மாத்தளன் மீனவர்கள் தெரிவித்தனர்.

அதுவரையில் புதிதாக வந்த சிங்கள மீனவர்கள் கடலுக்குள் இறங்கித் தொழில் செய்யக் கூடாதென்றும் அவர்களின் படகுகளை இரணைப் பாலைப் பகுதியில் பாதுகாப்பாக வைப்பது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே தொழில் செய்ய அனுமதிக்கப்பட்ட 57 சிங்கள மீனவர்களின் படகுகள் தவிர்ந்த ஏனைய படகுகளுக்குப் புதிதாக அனுமதி வழங்குவதில்லை என்று முல்லைத்தீவு மீனவர் சமாசங்கள் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-400)

## இலங்கை...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
அபாயமுள்ளது என்று தேசிய பிக்குகள் முன்னணி நேற்று அதிர்ச்சித்தகவல் ஒன்றை வெளியிட்டது.

நாட்டின் பொருளாதாரம் மீது தாக்குதல் நடத்துவதற்கான ஆயுதங்களை அரசே சர்வதேசத்துக்கு வழங்குகின்றது என்று அம்முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின்போது மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படும் என அமெரிக்கா விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏகாதிபத்திய நாடுகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான கதவைத் திறந்துவிட்டதே இந்த அரசுதான் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம், ஊடக அடக்குமுறை, மோசடியான தேர்தல், வெள்ளைவான் கலாசாரம் ஆகியவற்றால் அரசுக்கு சர்வதேச ரீதியில் தற்போது பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட விடயங்களை மையமாக வைத்துத்தான் இலங்கை விடயத்தில் சர்வதேசம் ஊடுருவுகின்றது. எனவே, சர்வதேசம் நாட்டை இறுக்குவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொடுப்பதே இந்த அரசுதான். அரசுப்பக்கம்தான் முழுக்குற்றமுமுள்ளது.

அதேவேளை, நாட்டின் அரசமைப்பை எட்டி உதைத்து தீவிரவாத அமைப்பைப் போன்று அரசு செயற்படுகின்றது. புலிகள் அரசமைப்பை நிராகரித்ததுபோல்தான் இவர்களும் செயற்படுகின்றனர். நாட்டில் நீதித்துறையில் சுயாதீனமுள்ளது என்று சொல்வதற்குக் கூட அரசுக்குத் தற்போது சந்தர்ப்பமில்லை. பிரதம நீதியரசர் பதவிக்கு வேறொருவரை நியமித்திருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால், மொஹான் பீரிஸை நியமித்ததன் மூலம் குற்றப்பிரேரணைக்கான உண்மையான அர்த்தத்தை அதாவது, பழிவாங்கல்கள் என்பதை அரசு உறுதிப்படுத்தியுள்ளது. குற்றப்பிரேரணை விவகாரத்தில் மும்முரமாகச் செயற்பட்ட அமைச்சர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குழுவொன்று தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இந்நிலையில், நாட்டில் மனித உரிமை நிலைமைகள் படுமோசமாகவுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு அந்தக்குழு மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவாத் தொடரின்போது பொருளாதாரத் தடை உள்ளிட்ட முக்கியமான தடைகளை இலங்கைக்கு எதிராக விதிப்பதற்குத் தேவையான சட்டரீதியான பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

அதன் பின்னர் இதுகுறித்துக் கலந்துரையாடப்பட்டு இலங்கை தொடர்பில் சர்வதேசம் காத்திரமானதொரு முடிவு எடுப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளைக் கையாளலாம் - என்றார். (த-சி)

## கோப்பாயில்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
னர்கள் தெரிவித்தனர். அவருடைய கணவர் பிறிமோர் இடத்தில் மறைந்திருந்த வேளை அயலவர்கள் அவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் உறவினர்கள் மேலும் கூறினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டதுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்து உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

(த-4-78-ரி)

## அரசமைப்பில்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
இந்தியாவில் 99 தடவைகளுக்கு மேல் அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட்டுவிட்டது. எந்த நாட்டிலும் நிரந்தரமான அரசமைப்பு கிடையாது. தேசிய பிரச்சினை இருப்பதாகக் கூறப்படுகிறது. அதேபோன்று அரசமைப்பில் மாற்றமும் வலியுறுத்தப்படுகிறது.

இதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைத்துள்ளோம். அந்தத் தெரிவுக்குழுவில் சகல கட்சிகளும் பங்களிப்புச் செய்யவேண்டும். இதன்மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் - என்றும் ஜனாதிபதி கூறினார். (த-சி)

## நாட்டை ...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
அத்துடன், மீண்டும் ஒரு பென்னம் பெரிய அமைச்சரவைப் பட்டாளத்தை உருவாக்கி, உலகிலேயே மிகப்பெரிய அமைச்சரவையைக் கொண்ட நாடு என்ற சாதனையை அரசு நிலை நாட்டியுள்ளது

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச் செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இந்தியாவின் முழு ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவுக்கு இலங்கை அரசு இலஞ்சம் வழங்கி உள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சம்பூர் அனல்மின் நிலையத் திட்டத்தை இலஞ்சமாகக் கொடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி, சம்பூர் அனல்மின் நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு மின்சக்தி, எரிசக்தி அமைச்சராக உள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க தடையாக இருக்கின்றார். எனவே, அவரது அமைச்சுப் பதவியைப் பறித்து சம்பூர் அனல்மின் நிலையத் திட்டத்தை நாங்கள் உங்களுக்குத் தருகிறோம். இதற்குப் பதிலாக நீங்கள் ஜெனிவா கூட்டத்தொடரில் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் - என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவிடம் இரகசிய இராஜதந்திர இணக்கப்பாடொன்றைச் செய்துள்ளார்.

இந்த இணக்கப்பாட்டிற்குப் பலிக்கடாவாக்கப்பட்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் மின்சக்தி, எரிசக்தி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளது.

**சாதனை படைத்துள்ளது அரசு**

ஏற்கனவே பெரிதாக இருந்த அமைச்சரவையில் மாற்றம் செய்து இப்போது அதை மாபெரும் அமைச்சரவையாக அரசு மாற்றியுள்ளது. இதனூடாக ஆசியாவில் மட்டுமல்ல, உலகிலேயே மிகப் பெரிய அமைச்சரவையைக் கொண்ட அரசு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு சாதனை படைத்துள்ளது.

சீனி நுகர்வின்போது 75 சதவீதமானவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறான நிலையில், சீனிக் கைத்தொழில் அபிவிருத்திக்கு அமைச்சரொருவரை அரசு நியமித்துள்ளது!

நாட்டின் முக்கிய துறைகளான நெல், தேயிலை, தென்னை, இறப்பர் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்குப் புதிய அமைச்சுகளை நியமிக்கலாம். ஆனால், முக்கியமான துறைகளை விடுத்து சீனிக் கைத்தொழில் அபிவிருத்திக்கு அரசு அமைச்சரொருவரை நியமித்துள்ளது.

**அரசாங்கமே அமைச்சரவை ஆகிவிட்டது!**


நாட்டின் அத்தியாவசிய துறைக்கு அமைச்சை நியமிப்பதைத் தவிர்த்து தேவையில்லாதவற்றுக்காக அமைச்சுப் பதவியை அரசு நியமித்துள்ளது. இது தொடர்ந்தால் கோவா, உருளைக்கிழங்கு, வெண்டிக்காய் முதலான மரங்களின் அபிவிருத்திக்கும் புதிய அமைச்சுகளை அரசு நியமிக்கும்.

மீண்டுமொரு பென்னம்பெரிய அமைச்சரவையை நியமித்ததன் மூலம் அரசிலுள்ள பெரும்பான்மையானோர் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர். இதனூடாக அரசே ஒரு அமைச்சரவையாக மாறியுள்ளது - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவலைகள்

## அமரர் கதிரவேலு குணசேகரம்



தோற்றம்
11★06★1953

மறைவு
30★01★2011

சொல்லாமல் சென்ற
இடம் தான் எங்கே
எல்லையில்லா அன்பைத்
தந்து விட்டு
எல்லை கடந்து
சென்றதெங்கே
உங்கள் பிரிவு
எங்களை வாட்டுகின்றது
ஆறவில்லை எங்களுக்கு
உங்கள்பிரிவுத் துயர்....

குடும்பத்தினர்.
மரைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
T.P.0778894334

---

# மரண அறிவித்தல்

## கணபதி தம்பிப்பிள்ளை



உடுவிலைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தம்பாலை யை வசிப்பிடமபாகவும் கொண்ட கணபதி தம்பிப்பிள்ளை நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் பாசமிகு கணவரும், மாசிலாமணி, சின்றல்லாதேவி, தவமலர், இராசேந்திரம், யோகராணி, சிவசுப்பிரமணியம், சாம்(வேவி), இந்திராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகம்மா, புஸ் பமலர், விமலாதேவி, ஸ்ரீகரதாஸ், வரதராசா, செல்வரத்தினம், காலஞ்சென்ற யோகராசா ஆகியயோரின் அன்பு மாமனும்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தம்பாலையில் உள்ள அவரது இல் லத்தில் இன்று(30.01.2013) புதன்கிழமை பி.ப.2.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக தம்பாலை இந்து மயானத்தக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தம்பாலை , அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம் (வேவி) பசுபதி



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், மல்லாவி, வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம்(வேவி) பசுபதி நேற்று(29.01.2013) செவ்வாய்க் கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-சேதுப்பிள்ளை தம்ப தியரின் மகளும், முருகேசு-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பசு பதியின் பாசமிகு மனைவியும், சுந்தரலிங்கம்(மகாரம்பைக்குளம்), தர்ம லிங்கம்(முகத்தான்குளம்), பாக்கியம்(நெடுந்தீவு), சிவசுப்பிரமணியம் (செட்டிகுளம்) ஆகியோரின் அருமைத் தங்கையும் வசந்தகுமாரி( யாழ். இந்துமகளிர் கல்லூரி), விஜயகுமாரி(லண்டன்), பங்கஜகுமாரி(வவு/ நெளுக்குளம், கலைமகள் மகாவித்தி.), உதயகுமாரி(பிரதிக் கல்விப்பணிப்பாளர், வவுனியா வடக்கு), மனோகரன்(ஹொலண்ட்), சற்குணதேவி (லண் டன்), கிருபாகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்தி ரபாலன்(கரைச்சி பிரதேச சபை), கிருபாகரன்(லண்டன்), சசி குமார்(அதிபர், சேமமடு சண்முகானந்தா மகாவித்தியாலயம்), விவேகா னந்தராசா(வவுனியா), கௌதமி(ஹொலண்ட்), கருணாதனன் (லண் டன்) லிமனகலா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிறையாளன், அருண்யா, பிரியந்தினி, கீர்த்தனன், அபிஷனா, அஸ்வின், திவியுகன், அர்ச்சிகன், அதியுகன், அபியுதா, மிசான், அபிஷாலினி, அக்ஷயா, அர்ச் சகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

பசுபதி 00447438587038
வசந்தகுமாரி 077 9641750
உதயகுமாரி 077 4400015
பங்கஜகுமாரி 077 6015481

தகவல்:
குடும்பத்தினர்.

---

# பஸ் நிலையம் திறப்பு

கிளிநொச்சி, ஜன.30

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் புனரமைக்கப்பட்ட பஸ் நிலையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமரர்களான இராஜதுரை தங்கச்சியம்மா தம்பதிகளின் நினைவாக அமைக்கப்பட்டு போரின் போது சேதமடைந்த இந்த பஸ் நிலையக் கட்டடம் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த இடம்பெயர்வு காலத்துக்கு முன்பு பரந்தன் பிரதான பஸ் நிலையத்துக்கான புதிய கட்டடத்தை ஆர்.வி.பந்தல் சேவை உரி மையாளர் விஜயரட்ணம் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணித்திருந்தார். ஆனால் கடந்த போரின் போது அது சேதம டைந்தது. தற்போது சேதமடைந்த குறித்த பஸ் நிலையக் கட்டடம் புனரமைக்கப்பட்டு பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியில் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் இதனை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

பரந்தன் நகரமானது பூநகரி வீதி, முல்லைத்தீவு, பரந்தன் வீதி ஆகியன சந் திக்கும் ஒரு மையப்பகுதியாக விளங்குகின்றது.

ஆனால் போருக்குப் பின்னர் பஸ் நிலையம் இல்லாததால் பயணிகள் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது இந்தப் பஸ் நிலையம் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப் பட்டுள்ளமை பயணிகளுக்குப் பேருதவியாக உள்ளது என்று பலரும் கூறுகின்றனர்.

---

## German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் தினமும் Goethe in-stitute examக்கு ஏற்றவாறு German இல் இருந்துவந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். இம் முறை பரீட்சையில் 15 மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர். Miss.Kajenthini
10 Palaly Road,Jaffna. T.P 0771604823
(28899)(14)

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

190 ஆம் கட்டையடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் (கண்டி வீதிக்கு அண்மையில்)
4 ½ பரப்புக் காணியுடன் வீடு
உடன் விற்பனைக்குண்டு. விற்பனை
பெறுமதி- 35,000,00/= (முப்பத்தைந்து இலட்சம் ரூபா)
தொடர்பு :0774443556

## கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

## வீடு வாடகைக்கு தேவை

3பேர் கொண்ட அரச தொழில் புரியும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:0771632578

---

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி



மயிலிட்டி வடக்கை நிரந்தர வதிவிடமாகவும், நீர்வேலி வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி விநாயகமூர்த்தி நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், இளங்குமரனின் (ஜேர்மனி) அன்புத் தாயும், சுதர்சினியின் மாமியும், கஜானன், தனுசன், தருன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2013) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
இளங்குமரன்
(மகன்)

---

சிவமயம்

## உடுவில் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய

## தைப்பூசப் பெருவிழாவும் கலைஞர் கௌரவிப்பும்

நிகழும் நந்தன வருஷம் தைத்திங்கள் 17 ஆம் நாள் இன்று (30.01.2013) புதன்கிழமை மாலை 5 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்று அம்பாள் திருவீதியுலா வரும் திருக்காட்சி இடம்பெறும்.

### நிகழ்வுகள்:

**மங்கள இசை வழங்குவோர்:**
இணுவை என். ஆர்.கோவிந்தசாமி
புதல்வர் கோ. இரத்தினகுமார் குழுவினர்.

**கௌரவிப்பு:**
கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மங்கள இசை வழங்கி மகிழ்வித்த கோ. இரத்தினகுமார் அவர்களுக்கு இசைஞான அருவி எனும் பட்டம் வழங்கி பாராட்டிகௌரவித்தல்
பட்டம் வழங்கி வாழ்த்துப்பாமாலை பாடி கௌரவிப்பவர்:
வர்ணனைக் கலாநிதி மதுரகவி, காரை
எம்.பி.அருளானந்தன்
(பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்)
இன் குழல் வேந்தன் N.R.K. வாகீஸ்வரன் (வாகீசன்)
அவர்களின் புதல்வன் செல்வன் வா. திருத்தணிகன்
அவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தல்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தைப்பூசப் பெருவிழா உபயகாரர்
க. ஜெகதீஸ்வரன் குடும்பத்தினர்.
(28.778)(45.6.7)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி பேரின்பமலர் சண்முகம்

தோற்றம்
08.04.1950

மறைவு
01.01.2013

கடந்த 01.01.2013 செவ்வாய்க்கிழமை அமரத்துவமடைந்த எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (31.01.2013) வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அவரது இல்லத்திலும் பின்னர் கீரிமலை புனித தீர்தக்கரையிலும் நடைபெறும். சபிண்டீகரணக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரில் வந்து ஆறுல்கூறியோருக்கும் தொலைபேசிமூலமும், தபால்- தந்திமூலமும் ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், வேறுபல வழிகளில் உதவிகள்புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விறாச்சி,
உடுப்பிட்டி
0212263187

குடும்பத்தினர்

---

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா சிவகுரு



மட்டுவில் தெற்கு, வாகையடி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சிவகுரு நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவருகுருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் தம்பையா, காலஞ்சென்ற முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, செல்வமலர், செல்வசோதி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் கணேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமியும், கோபாலகிருஷ்ணன்- செல்வரஞ்சினி (பிரான்ஸ்), வசந்தகுமாரி, மகேந்திரன், கமலேஸ்வரன்- உமாபதி (பிரான்ஸ்), கோகுலகுமாரி- ஜெயசீலன், விமலேஸ்வரன் -தவாஞ்சினி (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் - சகிலா (பிரான்ஸ்), செல்வகுமாரி -தர்மகுலராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற துரையழகன் மற்றும் வரதன் -சுபஸ்ரிகா (சுவிஸ்), வனஜா -தர்மராஜா (இத்தாலி), துஸ்யந்தன்- சுகிர்தா (கனடா), அருந்ததி -நந்தகுமார், அனுசியா -நடேசகுமார், ஜசிகரன், அஜித் ஆகியோரின் பேர்த்தியும், டயானி- நியூரன் (பிரான்ஸ்), டனுஷன் (பிரான்ஸ்), டயூஷன் (பிரான்ஸ்), நிரஞ்சினி- யோகேஸ்வரன் (பிரான்ஸ்), பிரசாத், விதுசன் (பிரான்ஸ்), ஜெகதீசன் (பிரான்ஸ்), ஜெகதீபன், அனோஜா (பிரான்ஸ்), வானுஜா (பிரான்ஸ்), அக்ஷயா (பிரான்ஸ்), சாருஜன் (பிரான்ஸ்), சரன்ஜன் (பிரான்ஸ்), ஸ்ரிபன் (பிரான்ஸ்), சஜந்தினி (பிரான்ஸ்), அபிநாஸ் (பிரான்ஸ்), சஜன் (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), நிவேதன் (கனடா), சியோன் (கனடா), லதுர்சன் (கனடா), மிதுஷா (இத்தாலி), செந்தூரன் (இத்தாலி), நிவேதிகா, சங்கவிதன், பிரியங்கன், ஜெஸ்னிகா, ஜெஸ்ரின் ஆகியோரின் அன்பு பூட்டியும், பிரவீன் (பிரான்ஸ்), ரிஷானா (பிரான்ஸ்), விஷ்மிரா (பிரான்ஸ்), டிலானா (பிரான்ஸ்) ஆகியோரின் கொள்ளுப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2013) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு பிறந்த, பரணி நட்சத்திரம், (கிரக பாவம் 49) உடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொ.பே: 0711576097, 0774345654

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## வாகனம் தேவை

டிமோ பட்டா (அலுமினியப் பொடி) வாகனம் மாத வாடகைக்குத் தேவை.
தொடர்பு- 0771577424


# மரண அறிவித்தல்

## செல்லமுத்து சதாசிவம் (வீ.சி.ராசா)



சாவகச்சேரி வடக்கு, பெரியரசடியைச் சேர்ந்த செல்லமுத்து சதாசிவம் (வீ.சி.ராசா) கடந்த (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு, அன்னப்பிள்ளை மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் நடேசமுத்து (நெதர்லாந்து), சந்திராதேவி (கனடா), கிருஷ்ணமூர்த்தி (லண்டன்), கணேசமூர்த்தி (கனடா), பாஸ்கரமூர்த்தி(லண்டன்), சத்தியமூர்த்தி (லண்டன்), ஈஸ்வரமூர்த்தி(லண்டன்), சசீலாதேவி(கனடா), சர்வேஸ்வர மூர்த்தி (இலங்கை), ஆகியோரின் அன்புத் தந்தையும். மல்லிகாதேவி (லண்டன்), கனகரட்ணம் (ஓய்வு பெற்ற கிரா்ம சேவையாளர் -கனடா), மங்கை (லண்டன்), வசந்தா (கனடா), சுதா (லண்டன்), பவா (லண்டன்) கிளி (லண்டன்), கருணா (கனடா), ரதி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனும், அருள் (லண்டன்), பிரசாத் (லண்டன்), அகல்யன் (லண்டன்), சுமி (இலங்கை), கோபி (கனடா), சாலபன் (கனடா), சயந்தன் (லண்டன்), மகி (லண்டன்), மயூரி(கனடா), லகுணன் (கனடா), விசாகன் (லண்டன்), கல்யாணி (லண்டன்), அபிரன் (லண்டன்), பிரியவி (லண்டன்), விநோதன் (லண்டன்), வாகீசன் (லண்டன்), கானுஜா (இலங்கை) ஆகியோரின் பேரனும், ரேயா (லண்டன்), சியாரா (லண்டன்), அபிலாஸ் (இலங்கை), அஜீஸ் (இலங்கை) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2013.)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி மேற்கு ஒழுங்கை,
சாவகச்சேரி வடக்கு. (C/2834)(6)

தகவல்:
குடும்பத்தினர்.
0770275930,0772040520

# மரண அறிவித்தல்

## கணேசரட்ணம் ஞானரட்ணம்

*(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)*



யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி கோணந்தோட்டம் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசரட்ணம் ஞானரட்ணம் நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசரட்ணம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநீல கண்டர்- தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வ ராணியின் அன்புக் கணவரும் வித்தியா, பிரசாந் , விஜிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமாரி, பத்மகௌரி ஆகியோரின் சகோதரனும் இந்திராணி, செல்வராஜா, விவேகானந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2013) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணந்தோட்டம்,
கரணவாய்,கரவெட்டி.
T.P. 0213735180

தகவல்:
குடும்பத்தினர்.

# கோப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

பதிவு இல.: யா/1573, பதிவுத் திகதி: 1972.02.18

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான 18-45 வயதுக்குட்பட்ட தகுதி வாய்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி : களஞ்சிய மேற்பார்வையாளர்
சம்பளக் குறியீடு :207/12
சம்பள அளவுத்திட்டம் : 10200-90×10-100×10-12100 (66/2006 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை : 01

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறைக் களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறைக் களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர்(உ/த) சான்றிதழ் அல்லது க.பொ.த (உ/த) 03 பாடங்களில் சித்தியுடன் களஞ்சியப் பொறுப்பாளர் பதவி யொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் களஞ்சியப் பொறுப்பு கற்கைநெறி ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (சா/த)சான்றிதழ் அல்லது க.பொ.த(சா/த)கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

பதவி : எழுதுநர்
பதவி குறியீடு : 302/14
சம்பள அளவுத்திட்டம் : 9700-80×10 - 85×10-11350(66/2006 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை :01

அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணி யாளரின் 16ஆவது சம்பளத்திட்ட எழுது வினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த(சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- இப்பதவிக்கு மேலதிக தகைமையாக கணினி அறிவு எதிர்பார்க் கப்படுகின்றது.

பதவி : விற்பனை உதவியாளர்
பதவி குறியீடு : 308/17
சம்பள அளவுத்திட்டம் : 8950-65×10-70×10-10300(66/2006 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை :03

அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

ஆ) 08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

குறிப்பு:

* சங்கப் பணியாளர்களுக்கும் சங்க எல்லைப் பரப்புக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமைவழங்கப்படும்.
* சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
* சங்கங்களில் கடமையாற்றுவோர் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
* விண்ணப்பப் படிவங்களை சங்க அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் ரூபா 20.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
* பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழிற்தகைமைச் சான்றி தழ்கள் என்பனவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
இ.உ தயாசூரியன்
தலைவர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 2013.02.15

விண்ணப்பங்களைத் தயாரித்து கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ/து)
பருத்தித்துறைவீதி,கோப்பாய் தெற்கு,கோப்பாய்.

(28795)(5.6)


FUTUREWORLD

உங்கள் உள்ளம் கொள்ளை கொண்டவர்களுக்கு உயர்தரமான பரிசு

Authorised Reseller


விசேட காதலர்தின பரிசு அட்டை*

பெப்ரவரி 1ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை கொள்வனவு செய்யும் அனைத்து iPod அல்லது Mac களுக்கு சுரண்டும் அட்டையுடன் 20% விலை கழிவை மீள் பெற்றுக் கொள்ளுங்கள்




*நிபந்தனைக்குட்பட்டது

Love at first touch



With all music, movies and games available, an iPod is the perfect gift for your valentine

Love comes in all sizes



Thin. Light. Powerful. All new mac range. A gift they'll use happily ever after.

Give them a token of your love



From all new headphones to a wide range of accessories. Attractive, smart and fun to be with. Just like your valentine

COLOMBO 5 Showroom
Tel : 011 2 590 361

COLOMBO 7 Showroom
Tel : 011 2 314 748

KANDY Showroom
Tel : 081 2 201 099

JAFFNA Showroom
Tel : 021 2 219 655

www.futureworld.com.lk
info@futureworld.com.lk

Easy Payment schemes available.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மதிப்பிழக்கும் நிலையை வருந்தி அழைக்கும் திசை நோக்கிச் செல்வதா...?

"அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் மூவரின் அண்மைய இலங்கை விஜயம் திடீரென இடம்பெற்ற ஒன்றல்ல. அது வெளிவிவகார அமைச்சுக்கள் மட்டத்தில் நீண்ட காலத்துக்கு முன்பே திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்துபோகிறார்கள். போர் இடம்பெற்ற காலத்திலும் அவர்கள் அவ்விதம் வந்துபோனார்கள்" - என்று அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது கூட்டத் தொடர் இன்னமும் ஒரு மாத காலத்தில் ஆரம்பமாக உள்ள சூழமைவில், அமெரிக்க 'திரிசூல' குழுவின் இலங்கை விஜயம் ஊடகங்கள் மத்தியில் முக்கியத்துவம் பிடித்திருந்த பின்னணியில், ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளிவந்திருந்தது. அதனால் அமெரிக்க இராஜதந்திரிகளின் விஜயம் வழமைபோன்ற ஒன்றாக இருக்கலாம் என்பதான தோற்றப்பாடு உருவாகி இருந்தது.

ஆனால் அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி, அமெரிக்க 'திரிசூல' குழுவினரின் விஜயம் குறித்து பிரஸ்தாபித்துக்கொண்டிருந்த அதே வேளை, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஊடகவியலாளர்களை அழைத்து அக்குழுவினர் வட்டமேசைக் கலந்துரையாடல் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தனர். அந்தக் கலந்துரையாடலில் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்று, ஜனாதிபதியின் அலரிமாளிகை மாநாடு, அமைச்சரவை மாற்றம் தொடர்பான செய்திகளை எல்லாம் பின்தள்ளிவிட்டு நேற்றைய ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்துவிட்டது.

குறிப்பிட்ட அமெரிக்கக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருடனும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவுடனும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடனும் தனித்தனியாகப் பேச்சுக்கள் நடத்திவிட்டு யாழ்ப்பாணம் சென்றனர். யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் உட்படப் பல முக்கியஸ்தர்களைச் சந்தித்துவிட்டுக் கொழும்பு திரும்பியதும், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலும் அவர்கள் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் மற்றொரு தீர்மானம் கொண்டுவரப்படும் என்ற அவர்களது அதிரடி அறிவிப்பு, சற்றும் எதிர்பார்க்கப்படாததொன்றே. ஊடகங்கள் பரபரப்பாக நேற்று செய்தி வெளியிட இதுவே காரணம். போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கைப் படையினர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தும் வகையில் அந்தத் தீர்மானம் அமையும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசு அக்கறை காட்டாதிருப்பதாகவும், இந்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா தயாராகிவருவதாகவும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமீபநாள்களாக எச்சரித்து வந்துள்ளது. அதனை எவரும் பொருட்படுத்தவில்லை. இப்பொழுது அது உறுதியாகி விட்டுள்ளது.

இந்த முறை முன்வைக்கப்படவுள்ள இரண்டாவது தீர்மானம் முன்னைய தீர்மானத்தை ஒட்டியதாகவும் அதிக வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் அமையும் என அமெரிக்க இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். எனவே முன்வைக்கப்படவுள்ள புதிய தீர்மானம் இலங்கை அரசால் இலேசில் தட்டிக்கழிக்கக்கூடியதாக இருக்கப் போவதில்லை.

உத்தேச தீர்மானம் எதிர்வரும் மார்ச் மூன்றாவது வாரத்தில் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் வாக்கெடுப்புக்கு விடப்படும். தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு இலங்கைக்குப் போதுமான உறுப்பு நாடுகளின் ஆதரவு கிட்டுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. கடந்த வருடம் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகள் வாக்களித்தன. 15 நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகத் தீர்மானத்தில் இருந்த கடுமையான பதங்கள் நீக்கப்பட்டன. அதனால் இந்தியாவும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.

தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை அவகாசம் கொடுக்கப்பட்டது. உள்கட்டுமானப் பணிகள், கண்ணிவெடி அகற்றல், புனர்வாழ்வு, முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுதலை ஆகிய விடயங்களில் இலங்கை ஓரளவு முன்னேற்றம் காட்டினாலும், பிரதான விடயங்களில் - அமெரிக்கா உட்பட சர்வதேசம் எதிர்பார்த்த இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறும் கடப்பாடு, நல்லிணக்கம் என்ற செயற்பிரயோகத்துக்குள் அடங்கும் இனப்பிரச்சினைத்தீர்வு, காணாமற்போனோர் விவகாரம் ஆகிய விடயங்களில் இலங்கை அரசினால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. போரின் இறுதிப்பகுதியில் படையினரிடம் சரணடைந்தவர்கள், படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் ஒழுங்காகப் பதிவுசெய்யப்பட்டனர் என்றும் காணாமல் போனோர் என்று தற்போது எவரும் இல்லை என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கைவிரித்தமை, அரசு மீதான அமெரிக்கக் குழுவின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. தமது உறவுகள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள இயலாது இன்னமும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். அது குறித்து நல்லிணக்க ஆணைக்குழு முன் பெரும் எண்ணிக்கையான சாட்சியங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆகவே இவ்விடயமும் இலங்கைக்குப் பிரச்சினையாகவே இருக்கப் போகிறது.

ஆயினும் இத்தகைய நெருக்கடிகளை இலங்கை அரசு பாரதூரமான தொன்றாகக் கருதுவதாகத் தெரியவில்லை. இம்முறை ஜெனிவா மாநாட்டுக்கு எண்ணிக்கையில் குறைந்த சிறு குழு ஒன்றையே இலங்கை அனுப்பும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அமுனுகம கூறுகிறார். தலைக்கு மேல் வெள்ளம் போனால் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன என்ற நிலையில் இலங்கை அரசு இருப்பதாகத் தோன்றுகிறதோ என்று ஐயுறுவது தப்பல்லவே.

எவ்வாறு இருப்பினும், மனு நீதியும், மக்கள் நலனும் பேணாத அரசுகள் வெளிநாடுகளால் மட்டுமன்றி தத்தமது நாடுகளிலும் மதிப்பிழக்கும் நிலையைத் தாமாகவே வருந்தி அழைத்துக்கொள்வதுண்டு.

# சிறுவர்கள் பிறப்பைப் பதிவு செய்வதற்கு உரிய அதிகாரங்கள் பயன்படுத்தப்படவில்லை

## மேலதிக பதிவாளர் நாயகம் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்ட தொகைச் சிறுவர்கள் பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருக்கின்றமையானது, உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வசதிகள் என்பவற்றை அவர்கள் பயன்படுத்தவில்லை என்பது போல் தெரிகிறது.

இந்த வருடம் இப்படியான தொரு நிலை வராமல் அதிகாரிகள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் அதிகரித்துள்ளதாக யாழ்.மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செய்தி வெளியாகியிருந்தது. அது தொடர்பில் மேலதிக பதிவாளர் நாயகம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இது தொடர்பான புள்ளி விவரங்களைக் கொடுத்தவர்கள் பதிவுசெய்யப்படாமைக்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை. பெற்றோரின் அக்கறையீனமா? அல்லது அதிகாரிகளின் அசமந்தப் போக்கா? என்று தெரியவில்லை. வழங்கப்பட்ட அதிகாரங்கள், ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வசதிகள் என்பவற்றை உரிய அதிகாரிகள் பயன்படுத்தவில்லை போல் தெரிகிறது. இந்த வருடம் இது போன்ற நிலை ஏற்படாமலிருக்க வேண்டும்.

போர் காரணமாக மக்கள், பதிவாளர்கள், அலுவலர்கள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள் அடிக்கடி இடம்பெயர வேண்டியதாயிற்று. இதனால் பிறப்பு, இறப்பு கட்டளைச் சட்டத்துக்கு அமைய பிறப்புக்களைப் பதிவதற்காக மக்களைத் தேடிச் சென்று உதவ வேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்போது போதிய வசதிகள், பாதுகாப்புகள் இல்லாமையால் ஐ.சி.ஆர்.சி. இதனை ஆரம்பித்து வைத்தது. பின்னர் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்தன. நடமாடும் சேவைகள் நடத்தப் பட்டன.

பதிவாளர் நாயக திணைக்கள நடவடிக்கைகள் 1997 ஆம் ஆண்டு இலங்கையின் பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. ஆனால் போர் நிலை காரணமாக வடக்கில் அது செயற்படுத்தப்படவில்லை. 2010 இல் யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்களுக்கும் அது விரிவுபடுத்தப்பட்டது. பிறப்புச் சான்றுகள் கணினி மூலமாக வழங்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

பதிவுசெய்யப்படாத பிறப்புக்களைப் பதிவு செய்வதை அனுமதிக்கும் அதிகாரம் மாவட்ட காணிப்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டது. பதிவு செய்வதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லாத போது அனுமான வயதுச் சான்று வழங்கும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. காணிப் பதிவகங்களுக்கு கட்டட ஆளணி மற்றும் தளபாட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. காலம் கடந்த பிறப்பைப் பதிவு செய்வதற்கேற்றதாக 2008 இல் வழிகாட்டற் குறிப்பு மாதிரிப் படிவத்துடன் சுற்றறிக்கையும் பதிவாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டது.

வைத்தியசாலையில் பிள்ளை பிறந்தால் வைத்தியர் அதுபற்றி பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும். இதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வைத்தியசாலைகளுக்கு படிவங்கள் வழங்கப்படுகின்றன. வீட்டில் பிள்ளை பிறந்தால் பெற்றோர் அதுபற்றி பதிவாளருக்கும், கிராம அலுவலருக்கும் அறிவித்தல் வேண்டும். கிராம அலுவலர் தமது பிரிவில் நிகழும் ஒவ்வொரு பிறப்புத் தொடர்பாகவும், பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள 'பி 23' ஆம் படிவத்தின் மீதான அறிக்கையை பிறப்பு நிகழ்ந்து 7 நாள்களுக்குள் தாமாகவே உரிய பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

இவை உரிய முறையில் நடைபெற்றிருந்தால், பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கை கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் இது போன்ற புள்ளி விவரம் வெளியாக வாய்ப்பில்லை.

பிறப்பு நிகழ்ந்து மூன்று மாதங்களின் பின்னர் ஒரு வருடத்தினுள் பிறப்பை பதிவு செய்வதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் பிரதேச செயலருக்கும், உதவிப் பிரதேச செயலருக்கும், நிர்வாக உத்தியோகத்தருக்கும் உண்டு.

எனவே 2012 இல் பதியப்படவில்லை என அடையாளம் காணப்பட்ட பிள்ளைகளின் பிறப்பைக் கிராம அலுவலர் மூலமாக 2008 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுத்து, பிரதேச செயலக மட்டத்திலேயே அனுமதியளித்து பதிவு செய்ய முடியும். இதனால் 2013 இல் இவை பதிவு செய்யப்படாமல் விடுபடுவதைத் தவிர்க்க முடியும்-என்றுள்ளது.

(த-4)

# கிராம அலுவலர் சீருடை கொடுப்பனவு அதிகரிப்பு

வலி.வடக்கு,ஜன.30

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம அலுவலர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு 2013 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுற்றறிக்கை மூலம் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சீருடைக்கான கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவாக இருந்த போதிலும் தற்போது இந்தக் கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராம அலுவலர்கள் அதிக நன்மை அடைந்துள்ளார்கள். எதிர்காலத்திலேனும்

**எதிர்காலத்திலேனும் கிராம அலுவலர்கள் சீருடையுடன் தமது அலுவலகங்களிலும் மற்றும் நிகழ்வுகளிலும் இருக்க வேண்டும்**

கிராம அலுவலர்கள் சீருடையுடன் தமது அலுவலகங்களிலும் மற்றும் நிகழ்வுகளிலும் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதன் அடிப்படையில் இந்த அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-86)

# மாதாந்த உதவி பெறும் முதியோருக்கு பாஸ் புத்தகங்கள்

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை வங்கிப் பாஸ் புத்தகம் கிடைக்காத 154 பேரின் வங்கிப் பாஸ் புத்தகங்கள் பிரதேச செயலகத்துக்கு தேசிய முதியோர் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை, இன்று புதன்கிழமை அந்தந்த கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்படுமெனவும், சம்பந்தப்பட்ட பயனாளிகள் வங்கிப் பாஸ் புத்தகத்தைக் கிராம அலுவலரிடம் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-9)

# கைத்தொழில் துறையில் பயிற்சி தேவையானோர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம்,ஜன.30

'வறுமையற்ற ஓர் இலங்கை தேசம்' திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) நிகழ்ச்சித் திட்டத்தின் பயனாளிகளுக்குப் பயிற்சிகள் மற்றும் உதவிகள் தேவைப்படுவோரின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் கைத்தொழில் துறையில் பயிற்சி மற்றும் உதவிகள் தேவைப்படுவோர் இருப்பின் அவர்களின் விவரங்களையும், உள்ளூர் வளங்களைக் கொண்டு ஆரம்பிக்கக் கூடிய கிராமிய அபிவிருத்தி கைத்தொழில்கள் இருக்குமாயின் அவற்றின் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்.

தங்கள் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட பயனாளிகள் இது வரை மனைப் பொருளியல் அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்படாதவர்களாக இருத்தல் வேண்டுமெனவும் அறிவித்துள்ளார்.

(த-9)

# படிப்பகம் மீளத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

கதிரிப்பாய் வண்ணன் சனசமூக நிலையப் படிப்பகம் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்தச் சனசமூக நிலையம் இயங்க முடியாத நிலையில் இருந்து வந்தது.

தற்போது இந்த நிலையத்துக்குப் புதிதாக நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட்டதுடன் படிப்பகம் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டதாக வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

(த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வைபவத்தில் பரிமாறிய மதிய உணவில் புழுக்கள்!

## வவுனியா ஹோட்டலில் முறுகல் நிலை

நெளுக்குளம், ஜன.30

திருமண வைபவத்தையொட்டி வழங்கப்பட்ட மதிய உணவில் புழுக்கள் இருந்தமையால் பெரிய களேபரம் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

வவுனியாவிலிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றுமுன்தினம் திருமண வைபவம் ஒன்று நிகழ்ந்தது. அதன்போது மதிய உணவு பரிமாறப்பட்டது. சோற்றுடன் பரிமாறப்பட்ட கத்தரிக்காய் மற்றும் கோழி இறைச்சியில் புழுக்கள் இருப்பதை அவதானித்தனர் விருந்தினர்கள். பசியுடன் சாப்பிடச் சென்ற அவர்களுக்கு ஆத்திரம் வந்தது. சாப்பிடத் தயாரான அனைவரும் அருவருப்புடன் முகத்தைச் சுளித்தவாறு எழுந்து விட்டனர். இது தொடர்பாக வவுனியா நகரசபையின் சுகாதாரப் பகுதியினருக்கு அவர்கள் தெரியப்படுத்தினர்.

அதனையடுத்து அங்கு வருகை தந்த சுகாதாரப் பகுதியினர், உணவு வகைகளை ஆராய்ந்த பின்னர் அங்கு புழுக்கள் இருப்பதை உறுதிப்படுத்தினர்.



மேலும் திருமண வைபவத்துக்கு வருகை தந்த சுமார் 215 விருந்தினர்கள் மதிய உணவை உண்ண முடியாத அவல நிலையும் ஏற்பட்டது.

இந்தத் திருமண வைபவத்தை வவுனியா சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரே ஒழுங்கு செய்திருந்தார்.

இதேவேளை ஹோட்டல் நிர்வாகத்தினர் விருந்தினர்களுக்கான மதிய உணவை வழங்குவதற்கு மாற்று ஏற்பாடு எதையும் மேற்கொள்ளாததால் அங்கு முறுகல் நிலையும் ஏற்பட்டது. (க-402)

# தோல்வியில் முடிவடைந்த திருட்டு முயற்சி

முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடுவில் கடை ஒன்றின் கூரையைப் பிரித்து இடம்பெற்ற திருட்டு முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதி நள்ளிரவு வேளையில் இங்குள்ள வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் எரிபொருளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றிலேயே இந்தத் திருட்டு முயற்சி இடம்பெற்றது.

பிக்கப் வாகனம் ஒன்றில் வந்த திருடர்கள் அதனை மரத்தின் மறைவில் நிறுத்தி விட்டு வர்த்தக நிலையத்தின் கூரையைப் பிரித்து உள்ளேயிருந்த பொருள்கள்ள வெளியில் எடுத்து வைத்துள்ளனர். இதன்போது பொலிஸார் ரோந்து சென்றதால் அவர்களைக் கண்டதும் தாம் சென்ற வாகனத்தையும், பொருள்களையும் விட்டு விட்டு திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்கள் ஓடித் தப்பியுள்ளனர். பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-500)

# வவுனியாவில் பிச்சை எடுப்பவர்களால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள்

## அவர்களை அப்புறப்படுத்துமாறு கோரிக்கை

நெளுக்குளம், ஜன.30

வவுனியாவில் பிச்சை எடுப்பவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

வன்னியின் பல இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து வவுனியாவில் வாழுகின்ற சிறுவர்கள், பெண்கள் சிலர் தவிர தென்பகுதியிலிருந்து வந்த சிலரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

ஆனால் இவர்களின் செயற்பாடுகளால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

காலையில் பஸ்களுக்குள் ஏறி பிச்சை எடுக்கும் இவர்கள் பல்வேறு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பணம் சம்பாதிக்கின்றனர். பணம் கொடுக்க மறுக்கும் பயணிகள் மீது அவர்கள் கடும் வார்த்தைப் பிரயோகங்களை உபயோகித்து திட்டித் தீர்ப்பதால் பயணிகள் மன உளைச்சலுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**வவுனியாவில் வாழுகின்ற சிறுவர்கள், பெண்கள் சிலர் தவிர தென்பகுதியிலிருந்து வந்த சிலரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது.**

இது குறித்து பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் பஸ் நிலையத்தில் காவல் கடமையில் உள்ளவர்களும் விழிப்புணர்வுடன் செயற்பட்டு இந்தப் பிச்சைக்காரர்களை அப்புறப்படுத்துவதுடன் பயணிகளின் நலனையும் பேணுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-402)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் இயங்காத 6 பாடசாலைகள்

அக்கராயன், ஜன.30

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஆறு பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

பூநகரியிலுள்ள முத்துக்குமாரசாமி வித்தியாலயம், செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை, பொன்னாவெளி அ.த.க.பாடசாலை, முகமாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், குஞ்சுக்குளம் கணேசவித்தியாலயம், கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயம் என்பனவே தொடர்ந்து திறக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

**30 ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி பயிலும் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் தற்போது 101 பாடசாலைகள் இயங்குகின்றன.**

30 ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி பயிலும் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் 101 பாடசாலைகள் தற்போது இயங்குகின்றன. கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் 40 பாடசாலைகளும் பூநகரியில் 24 பாடசாலைகளும், கண்டாவளையில் 24 பாடசாலைகளும் பளையில் 13 பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகளில் விஞ்ஞான, கணித, ஆங்கில பாடங்களுக்குரிய ஆசிரியர் தட்டுப்பாடு அதிகளவில் நிலவி வருவதைக் காண முடிகின்றது. சுமார் 380 ஆசிரியர்கள் வரை தேவையெனவும் தெரிய வருகின்றது.

பல பாடசாலைகளில் இடநெருக்கடி காரணமாக மரநிழலின் கீழ் வகுப்புக்கள் இடம்பெறுவதாகவும் அறிய முடிகின்றது.

கிராமப்புறப் பாடசாலைகளில் நிலவி வருகின்ற ஆசிரிய நெருக்கடி காரணமாக மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி வலய பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கு குறைபாடு உள்ளதாகவும் பாடசாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (க-18)

# நெற் பயிர்களுடன் களைகள் போட்டி அறுவடையில் வீழ்ச்சி

முல்லைத்தீவு, ஜன.30

இம்முறை காலபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த அறுவடை கிடைக்காதென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நெல்லுடன் போட்டி போட்டுக் கொண்டு களைகள் வளர்ந்து வருவதால் நெற்செய்கையில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித் துள்ளனர்.

களை நாசினிகளை மாறி மாறிப் பயன்படுத்திய போதிலும் களைகள் கட்டுப்படாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பெரிய எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட நெற்செய்கைக்கு பல்வேறு இடையூறுகள் காணப்பட்டன. மழை வெள்ளம், கட்டாக்காலி கால்நடைகள், யானைகள் என்பன நெற்பயிர்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தின.

தற்போது களைகளும் இந்த வரிசையில் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)




கனடா 'வாழவைப்போம்' அமைப்பினூடாக கிளிநொச்சியில் உள்ள மாற்றுவலுவுள்ளோரின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட கல்விக்கான உதவிகளை மாற்றுவலுவுள்ளோர்களுக்கான ஓய்வகம் அமையவுள்ள இடத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வழங்குகின்றார். (க-426)

# நோயாளர்களின் நலன் கருதி வவுனியா மருத்துவ மனையில் விதிகள்

நெளுக்குளம், ஜன.30

வவுனியா மருத்துவமனை வளாகத்தினுள் மருத்துவமனை நிர்வாகத்தினரால் பல்வேறு விதிமுறைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கையடக்கத் தொலைபேசி பாவித்தல், மதுசாரம் பாவித்தல், வெற்றிலை, புகையிலை பாவித்தல் உட்பட பல்வேறு செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை வளாகத்தினுள் வைத்து சிலர் மதுவை அருந்துவதால் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. வெற்றிலை பாவித்து விட்டுத் துப்புவதால் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் மருத்துவமனை விடுதிக்குள் கையடக்கத் தொலைபேசி பாவிப்பதால் சக நோயாளிகளுக்கும், ஏனையோருக்கும் இடையூறு ஏற்படுவதால் இதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலை பாவித்து விட்டுத் துப்புவதால் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.**

இதேவேளை பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை, குப்பை கொட்டுதல் என்பவற்றுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலை வளாகத்திற்குள் வைக்கப்பட்டுள்ள குப்பை கொட்டும் பெட்டிக்குள் கழிவுகளைப் போடுமாறும், வைத்தியர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நோயாளிகள் உணவை விடுதிக்குள் வைத்து அருந்துமாறும் மருத்துவமனை நிர்வாகத்தினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (க-402)

# பயனில்லாத குழாய்க் கிணற்றால் வவுனியா தேக்கவத்தையில் பாதிப்பு

நெளுக்குளம், ஜன.30

வவுனியா தேக்கவத்தை ஆலடிப்பகுதியில் உள்ள குழாய்க்கிணறு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அந்தப்பகுதி மக்கள் பாதிப்புகளை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் குழாய்க்கிணறு கடந்த 2 வருடங்களாக திருத்தப்படாத நிலையிலேயே உள்ளது. இதனால் வறட்சிக்காலப்பகுதியில் சுமார் 500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் நீரை பெறமுடியாது பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆலடிப்பகுதியில் ரயில் தண்டவாளத்திற்கு அருகே உள்ள பல குடும்பங்களின் வீடுகளில் கிணற்று வசதியின்மையால் இந்தக் குழாய்க் கிணற்றையே நீண்டகாலமாக நம்பியுள்ளன. இதனை எவரும் திருத்துவதற்கு முன்வராமையால் பயன்படுத்த முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

காலப்போக்கில் இது பாவனையில் இருந்து அப்புறப் படுத்தப்படும் நிலை உள்ளதால் இதனைத் திருத்தியமைத்து வழங்குமாறு பொதுமக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தருக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம்,ஜன.30

குடும்பத் தகராறு காரணமாக வாள் வெட்டுக்கு இலக்கான ஒருவர் கடந்த ஞாயிறு இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் யாழ். இராஜசிங்கம் வீதியில் வசிக்கும் ஜோசப் சில்வெஸ்ரர் (வயது- 43) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

அவரை வாளால் வெட்டியவர் தலைமறைவானதால் நேற்று மதியம் வரை கைது செய் யப்படவில்லையென யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.(த-ரி)



கொக்குவில் இந்துக் கல்லூரியில் சாரணர்களின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் பயிற்சிக் கூடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அதிபர் வி.ஞானகாந்தன் தலைமையில் கடந்த 27 ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. (த-17)

## சட்டவிரோத மின்சாரம்; நவாலியில் நால்வர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.30

நவாலிப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 4 பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்பாவனையாளர் அதிகரிப்புக்கு ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படாத பிரதேசங்களில் சட்டவிரோதமாக மின்சாரத்தை பெறுவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மின்சார சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 4 பேரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நவாலிப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த 4 பேரும் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.(த-14)

## வரணி வடக்கு வீடொன்றில் திங்கள் இரவு கொள்ளை

வரணி,ஜன.30

வரணி வடக்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கள் இரவு குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த த.சிற்றம்பலம் என்பவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

முகமூடி அணிந்த இரு இளைஞர்கள் கூரையின் மூலம் இறங்கி குடும்பஸ்தரை கதிரையில் இருத்தி ஒருவர் கத்தி முனையில் வைத்துக் கொண்டு அவரது மனைவியின் வாய்க்குள் சேலையைத் திணித்து விட்டுத் தாலி உட்பட 15 பவுண் நகைகளையும் 23 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் வீட்டில் இருந்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் பெற்றுக் கொண்ட பின்னரே இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை.(த-122)

# வடமராட்சியில் பல வீதிகள் மிக மோசமான கட்டத்தில்

### திருத்தி அமைக்க நடவடிக்கை இல்லை

வடமராட்சி,ஜன.30

வடமராட்சிப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான பல வீதிகள் மோசமாகப் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திருத்தியமைக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள 'பி', 'சி' தர வீதிகள் யாவும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானவையாகும். இந்த வீதிகளில் 90 வீதமான வீதிகள் மோசமாகப் பழுதடைந்த நிலையிலேயே இருந்து வருகின்றன.

குறிப்பாக பருத்தித்துறையிலிருந்து தொண்டமானாறு செல்லும் கடற்கரை வீதி, பருத்தித்துறை-மருதங்கேணி வீதி, மந்திகை-வல்லிபுரம் வீதி, மாலிசந்தி-உடுப்பிட்டி வீதி, நெல்லியடி திக்கம் வீதி, மாலிசந்தி-வியாபாரிமூலை வீதி, மாய்க்கிரான் - வல்லிபுரம் வீதி, தம்பசிட்டி- நாவலர் வீதி, பருத்தித்துறை-சாவகச்சேரி வீதி, அரசடி-சோளப்பு வீதி, கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடி-முதலைக் குழி வீதி, குஞ்சர் கடை- கல்லுவம் வீதி, மடத்தடி- தம்பசிட்டி வீதி ஆகிய வீதிகள் உட்பட ஏனைய பல வீதிகளும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன.

இந்த வீதிகள் சிலவற்றின் ஊடாக பிரதான இடங்களுக்கான பஸ் சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.

நகரங்களையும், கிராமங்களையும் இணைக்கும் இந்த வீதிகளை மக்கள் பெருமளவில் பயன்படுத்துவதுடன் அதிகளவில் வாகனங்களும் இந்தவீதிகள் ஊடாகச் சென்று வருகின்றன.

இந்தவீதிகளில் பருத்தித்துறை- சாவகச்சேரி வீதியில் மந்திகைச் சந்திக்கு அருகில் மதகுச் சுவர்கள், மாலிசந்தி- வியாபாரிமூலை வீதியில் உள்ள மதகு என்பன உடைந்துள்ள நிலையிலேயே வருடக்கணக்காக இருந்து வருகின்றன. மதகு உடைந் ததால் மாலிச்சந்தி- வியாபாரி மூலை ஊடாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடி யாதநிலை இருந்து வரு கின்றது.

கடந்த வருடம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பருத்தித்துறை- தொண்டமானாறு வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளதால் அதனைத் திருத்தி பஸ்கள், சிற்றூர்திகள் உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் சென்று வரக்கூடியதாக புனரமைத் துத்தரவேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எம்.எமிலியாம்பிள்ளை மற்றும் கரையோர பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

திணைக்களத்திடம் போதிய நிதி இன்மையால் திருத்த முடியவில்லை என வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரியினால் அப்போது பதிலளிக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தித் திணைக்களம் போதிய நிதியைப் பெற்று பழுதடைந்துள்ள இந்தவீதிகளைத் திருத்தி அமைத்து இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ள உதவுவார்களா எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். (த-8)

## 12 பொதுக் கிணறுகள் வலி.தெற்கில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 12 பொதுக் கிணறுகள் சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

சபைக்குச் சொந்தமான இந்தக் கிணறுகள் சிலவற்றை மக்கள் தமது தேவைக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என்று சபையின் தலைவர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.

தற்போது இந்தக் கிணறுகள் சபையின் உதவியுடன் அடிக்கடி துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான மக்கள் கிணறுகளை தமக்கெனத் தனித்தனியாக அமைத்துள்ளதால் இந்தப் பொதுக் கிணறுகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் மிகக் குறைந் துள்ளது என்றார் தலைவர். (த-17)

## தனங்களப்பு வீதி சேதம்; பயணிப்போர் பெரும் சிரமம்

தென்மராட்சி,ஜன.30

சாவகச்சேரி- மன்னார் மார்க்கத்தின் பிரதான வீதியாகத் திகழும் தனங்களப்பு வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

சாவகச்சேரியிலிருந்து 4 கிலோமீற்றர் தூரமான இந்த வீதி தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்களும் இந்தப் பகுதியில் உள்ள நெல் வயல்களுக்கு வாகனங்களில் செல்வோரும் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நாவற்குழியிலிருந்து கேரதீவு வரையிலான ஏ- 32 வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் மற்றும் இந்த வீதியில் உள்ள மார்க்கத்திலான இடங்களுக்குச் செல்லும் பயணிகளின் வாகனங்கள் சாவகச்சேரிக்கு வந்து தனங்களப்பு வீதியூடாகவே பயணத்தைத் தொடர்கின்றன.

இந்தவீதியில் பத்து மதகு கள் உள்ளன. அவற்றில் சில பழுதடைந்து எந்த நேர மும் போக்கு வரத்தை தடை செய்யும் அபாய நிலை யில் உள்ளது.

இந்தவீதியில் பத்து மதகுகள் உள்ளன என்றும் அவற்றில் சில பழுதடைந்து எந்த நேர மும் போக்குவரத்தை தடை செய்யும் அபாய நிலையில் உள்ளதால் அவற்றையும் புனரமைத்து வழ்ங்குமாறு உரிய அதிகாரிகளை மக்கள் கோரியுள்ளனர். (த-9)

## வறிய மாணவர்களுக்கு சமுர்த்தி உதவு தொகை

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் வறிய மாணவர்களுக்கு உதவு தொகை வழங்கலும், பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கலும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வறிய ஐந்து குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரங்களும், பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட 23 பயனாளிகளுக்கு சைக்கிள் வழங்கல், புலமைப்பரிசில் நிதி மற்றும் கற்றல் உதவு நிதி வழங்கல் போன்றவை இடம்பெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரினும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தத்தமது பிரிவுகளில் அதிக சேமிப்புக்களை சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கும் இந்த நிகழ்வில் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## சித்திரைப் புத்தாண்டின் பின்பே நயினைக்கு கடற்பாதை சேவை

யாழ்ப்பாணம்,ஜன.30

நயினாதீவுக்கும் குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் இடையிலான கடற்பாதைச் சேவை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு பின்னரே ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்தக் கடற்பாதைச் சேவை இந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப் படும் என்று ஏற்கனவே கூறப் பட்டிருந்தது.

இந்தக் கடற்பாதைச் சேவை இந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்படும் என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்தது.

தற்போது கடற்பாதைக்கான உபகரணங்களைச் சீர் செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இதனைவிட பாதையைக் கடற்கரைக்குக் கொண்டு வந்து பயணிகள் இலகுவாக ஏறக்கூடியவாறு இறங்கு துறைத் தளத்தை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இரண்டு துறைகளிலும் இந்த தள வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்தப் பணிகள் நிறைவடைய இன்னும் மூன்று மாதங்கள் எடுக்கும்.

இதனால் இந்தக் கடற்பாதைச் சேவை சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்படும்.-என்றார். (த-17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டார் சிறையிலுள்ள தமிழக மீனவரை மீட்க நடவடிக்கை

கட்டார் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளிநாடு வாழ் இந்தியர் நல அமைச்சர் வயலார் ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மீனவர்களை மீட்பது பற்றி கட்டார் தூதருடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. போலி விசா மூலம் வெளிநாட்டில் தங்குவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் அவர் குறிப்பிட்டார். (வ)



டில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பை பார்வையிட்ட பிரதமர் மன்மோகன்சிங், இராணுவ வீரர்களைச் சந்தித்து உரையாடினார்.

### தெலுங்கானா குறித்து வாக்குறுதி

## ஏமாற்றிய சிதம்பரம், ஷிண்டே மீது விசாரணைக்கு நீதிமன்று உத்தரவு



ஹைதராபாத், ஜன.30

தெலுங்கானா தனி மாநிலம் அமைப்போம் என்று பொய்யான வாக்கு றுதி கொடுத்து ஏமாற்றிய மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம் மற்றும் சுஷில்குமார் ஷிண்டே ஆகியோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யு மாறு பொலிஸாருக்கு ஆந்திர மாநில ரெங்கா ரெட்டி மாவட்ட நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

ரெங்காரெட்டி மாவட்ட நீதிமன்றத்தில் ஆந்திர பிரதேச இளநிலை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பதை தாமதிக்கும் வகையில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து முன்னாள் உள்துறை அமைச்சரும் தற்போதைய நிதி அமைச்சருமான ப.சிதம்பரம் மற்றும் தற்போதைய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே ஆகியோர் ஏமாற்றியுள்ளனர். எனவே இருவர் மீதும் நடவடிக்கை தேவை என்றும் வலியுறுத்தப்பட்டது. அந்த மனுவை விசாரித்த ரெங்காரெட்டி மாவட்ட நீதிமன்றம், மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம் மற்றும் சுஷில்குமார் ஷிண்டே ஆகியோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்ய அனுமதி அளித்தது.

## கூடங்குளத்தின் பாதுகாப்பு; விஞ்ஞானிகள் ஆராய்வு

கூடங்குளம், ஜன.30

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் விரைவில் மின் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ள நிலையில், இந்திய , ரஷ்ய விஞ்ஞானிகள் கூடங்குளம் அணு மின் நிலையத்தின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து இறுதிக்கட்ட ஆய்வை ஆரம்பித்துள்ளனர்.

நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் ரூ.13 ஆயிரத்து 500 கோடி மதிப்பீட்டில் தலா 1000 மெகாவாற் உற்பத்தித் திறனுள்ள இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி கூடங்குளம் அணு மின் நிலையத்தில் மின் உற்பத்தி ஆரம்பிக்கும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியிருந்தார். ஆனால் அணு சக்தி ஒழுங்கு முறை வாரியத்தின் அனுமதி கிடைக்காததால் மின் உற்பத்தியை குறித்த நேரத்தில் ஆரம்பிக்கவில்லை.

இந்தநிலையில் முதல் அணு உலையின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்த ரஷ்ய விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் கூடங் குளம் சென்றனர். அவர்கள் இந்திய விஞ்ஞானிகளுடன் இணைந்து அணு உலையின் பாதுகாப்பு, அதற்காக அமைக்கப்பட்டுள்ள டீசல் ஜெனரேற்றர்கள், அணு உலையை குளிர்விக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்த ஆய்வுகள் ஒரு வாரத்துக்கும் மேல் நீடிக்கும் என தெரிகிறது.

மேற்படி ஆய்வின் போது எடுக்கப்படும் புள்ளி விவரங்கள் இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை வாரியத்துக்கு அளிக்கப்படும். ஏற்கெனவே மின் உற்பத்தியை ஆரம்பிக்க கூடங்குளம் அணு மின் நிலையம் இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை வாரியத்திடம் அனுமதி கோரியுள்ளது. (வ)

# இலங்கையைக் காப்பாற்ற அமெ.- இந்தியா கூட்டுச்சதி

### பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் கண்டனம்



சென்னை, ஜன.30

போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து இலங்கையை காப்பாற்ற அமெரிக்கா - இந்தியா கூட்டுச்சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இவ்வாறான போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் சில வல்லரசுகளின் துணையுடன் இலங்கை அரசு போர்க்குற்ற விசாரணையிலிருந்து தப்பி வருகிறது.

இலங்கைப் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் முடிவடையவிருக்கும் நிலையில், அந்தநாட்டின் மீது போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு உண்மையான முயற்சிகளை நடத்தாமல், சொந்த இலாபத்தை கருத்தில் கொண்டு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் செயற்படுவதும், அதற்கு இந்தியா துணை போவதும் கண்டிக்கத்தக்கது.


இலங்கைக்கு எத்தனையோ வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் அது திருந்துவதற்கோ அல்லது வருந்துவதற்கோ அறிகுறிகள் தென்படவில்லை.

எனவே, இனியும் அந்த நாட்டுக்கு அவகாசம் தராமல் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தில் இலங்கை மீது உடனடியாகப் போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியாவே கொண்டுவருவது தான் சரியானதாக இருக்கும்.

அதனை நடைமுறைப் படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தி எதிர்வரும் முதலாம் திகதி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (வ)

## மக்களின் நிதியில் தாஜ்மஹால்

### ஷாஜகானைக் கண்டிக்கிறார் அமைச்சர்



ஆந்திரா, ஜன.30

மக்களின் நிதியில் தாஜ்மஹாலை அமைத்த ஷாஜகானுக்கு உத்தரப் பிரதேச மாநில அமைச்சர் அசம்கான் கண்டனம் தெரிவித்தார். உலக அதிசயங்களில் ஒன்றாகப் புகழப்படும் தாஜ்மஹால் மக்களின் நிதியைப் பயன்படுத்தி ஷாஜகான் அமைத்துள்ளார். இவ்வாறு மக்கள் பணத்தைச் செலவிட்டு மனைவிக்காக தாஜ்மஹாலை கட்ட அவருக்கு என்ன உரிமை இருந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

உத்தரப் பிரதேச மாநிலம், முஷாபர் நகரில் நடைபெற்ற பயனாளிகளுக்கு நிதி வழங்கும் நிகழ்வில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது: கோடிக்கணக்கில் மக்கள் பணத்தைச் செலவிட்டு முன்னாள் முதல்வர் மாயாவதி பூங்காக்களையும், சிலைகளையும் அமைத்துள்ளார்.

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலை கூட, கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிட்டு, தனது அருமை மனைவிக்காகக் கட்ட ஷாஜகானுக்கு எந்த உரிமையும் இல்லை என்றார். (வ)

## தி.மு.கவை கேலி செய்யும் வகையில் அழகிரி ஆதரவாளரால் சுவரொட்டி

### காட்டத்தில் கருணாநிதி




சென்னை, ஜன.30

தி.மு.க. தலைமையைக் கேலி செய்யும் வகையில் சென்னை நகர் முழுவதும் மு.க.அழகிரியின் ஆதரவாளர் ஒருவர் ஒட்டியிருந்த சுவரொட்டிகள் குறித்து அறிந்து கொண்ட தி.மு.க. தலைவர் கருணாநிதி கடும் கோபம் அடைந்துள்ளார்.

மத்திய அமைச்சரும் தென்மண்டல அமைப்புச் செயலாளருமான மு.க.அழகிரியின் பிறந்த தினம் இன்றாகும். அழகிரியின் பிறந்த தினத்தை சிறப்பாகக் கொண்டாட மதுரை தி.மு.கவினர் பல வேறு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் மு.க. அழகிரியின் ஆதரவாளர் ஜி.வெங்கட் என்னும் ஜி.வி. ரமணா என்பவர் சென்னை நகர் முழுவதும் 3 வகையான சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார். அந்த சுவரொட்டிகள் அனைத்திலும் அழகிரியின் படம் இடம்பெற்றுள்ளதுடன், தி.மு.க. தலைமையையும் கேலி செய்யும் வகையில் உள்ளன.

சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்ட வாசகங்களாக,-

''கண்ணகி சிலம்பும், [illegible] வீழ்ந்தது வீழ்த்தியதா. அதுக்கும் மேல்.. அதுக்கும் மேல்... அண்ணன் உயிரில். இங்கே பரமசிவனும் இல்லை. நாங்கள் கருடனும் இல்லை. நடப்பது ராம நாடகமே'' என 3 வகையான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஸ்டாலின்தான் அடுத்த தலைவர் என்று கருணாநிதி திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், கருணாநிதியை கேலி செய்யும் வகையிலேயே குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று தி.மு.கவினர் கருதுகின்றனர். அந்தச் சுவரொட்டி விவகாரம் கருணாநிதிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் கடும் கோபமுற்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவில் பஸ்– ரயில் விபத்து

### 10 பேர் சாவு

பீஜிங், ஜன.30

சீனாவில் பயணிகள் பஸ்ஸும், சரக்கு ரயிலும் மோதிக் கொண்டதில் 10 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் வடகிழக்கு மாகாணமான ஹெய்லாங்ஜியாங்கில், ஹெய்ஹே நகரத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்த விபத்து நடந்தது.

ரயில்வே கடவையைக் கடக்க முயன்ற பயணிகள் பஸ் மீதே ரயில் மோதியது. அதில் 10 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

ரயில்வே கடவை கண்காணிப்பாளர் ரயில் வரும் தகவலை வாகனங்களுக்கு எச்சரிக்காததாலேயே விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## அமெரிக்க 'சைபர்' பிரிவை விரிவுபடுத்துகிறது பென்டகன்

வோஷிங்டன், ஜன.30

உலக அளவில் அமெரிக்காவின் கணினி வலையமைப்பைக் குறிவைத்துத் தாக்கும் அமைப்புகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் 'சைபர்' குழுவை விரிவுபடுத்த பென்டகன் முடிவு செய்துள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆண்டு கணினிகளை குறிவைத்து அனுப்பப்பட்ட 'வைரஸ்' மூலம், அமெரிக்காவின் புகழ்பெற்ற 'சவுதி அராம்கோ' என்ற எண்ணெய் நிறுவனத்தின், 30 ஆயிரம் கணினிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டன.

அதையடுத்து அமெரிக்காவின் கணினி வலையமைப்பை பாதுகாக்கும் வகையில் மூன்று வெவ்வேறான சைபர் குழுவினர் களமிறக்கப்பட்டுள்ளனர். சைபர் குழுவில் தற்போது 900 பேர் பணியாற்றுகின்றனர். இந்த எண்ணிக்கை 4000 ஆக அதிகரிக்கப்பட்டு செயல்திறனும் விரிவுபடுத்தப்படுகிறது- என்றுள்ளது.




## சாண்டோ மரியா தீ விபத்து

## ஆயிரக்கணக்கானோர் திரண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி

சாண்டா மரியா, ஜன.30

பிரேஸிலில் கேளிக்கை இரவு விடுதியில் நிகழ்ந்த தீ விபத்தில் 232 பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நேற்றுமுன்தினம் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் பல்வேறு இடங்களில் கூடி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கேளிக்கை விடுதியில் மது அருந்துபவர்கள் பணம் கொடுக்காமல் சென்றுவிடக் கூடாது என்பதற்காக முக்கிய வாசல் கதவுகளை பாதுகாவலர்கள் மூடிவிட்டனர். இதுவே உயிரிழப்பு அதிகமாக் காரணம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

உயிரிழந்தவர்களில்பெரும்பாலானவர்கள் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சுமார் 116 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இவர்களில்பெரும்பாலானவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதேவேளை, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான 'கவுண்ட்டவுன்' எனும் தொடக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்தது. எதிர்பாராத இந்த துன்ப நிகழ்வால் அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. பிரேஸில் ஜனாதிபதி தில்மா ரூசெப், சிலி நாட்டு பயணத்தை இடைநிறுத்தி விபத்து நடந்த சாண்டா மரியா நகருக்குத் திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸ் படையினர் வசம் வீழ்ந்தது திம்புக்டு நகரம்



பாமகா, ஜன.30

மாலியின் முக்கிய நகரான திம்புக்டுவை பிரான்ஸ் தலைமையிலான படையினர் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்டுள்ளனர்.

எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி நகர் பிரான்ஸ் படையினரிடம் வீழ்ந்ததாகப் பிரான்ஸ்-இராணுவ தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பிரான்ஸ் மற்றும் மாலி படையினர், மாலியின் வட பிராந்தியத்தை நோக்கி முன்னேறி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச படைகளின் வருகையை மாலி மக்கள் பெருமளவில் வரவேற்றுள்ளதுடன், வீதியில் இறங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் இஸ்லாமிய போராளிகள் மாலியின் வட பிராந்தியத்தை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

இருப்பினும் பிரான்ஸ் துருப்பினருடன் மாலி பாதுகாப்புப் படைத்தரப்பினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவிரவாதிகள் படிப்படியாக, வட பிராந்தியத்தில் தமது கட்டுப்பாட்டை இழந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆபாச இணையத்தளங்களை கட்டுப்படுத்த புதிய சட்ட வரைவு

### ஆராய்கிறது பிரிட்டன் அரசு

லண்டன், ஜன.30

பிரிட்டனில் ஆபாச இணையத் தளங்களை முடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் சிறுவர்கள் ஆபாச இணையத் தளங்களை பார்க்காத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாது விடில் இணையத் தளங் களின் கட்டண வழிமுறைகளை முடக்குவதற்கு வங்கிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படும் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்த சட்ட வரைவு ஒன்றை நிறைவேற்ற பிரிட்டன் அமைச்சரவை பரிசீலித்து வருகிறது. அந்தச் சட்ட வரைவு நடைமுறைப்படுத்தப்பட்டால் நூற்றுக்கணக்கான வயது வந்தோருக்கான இணையத் தளங்கள் முடங்கும் நிலை ஏற்படும்.

**பிரிட்டனில் இயங்கும் வயது வந்தோருக்கான இணையதளங்களின் ஆண்டு வருமானம் ஏறக் குறைய 180 மில்லியன் பவுண்டுகள் என்று குறிப்பிடப்படுகிறது.**

பிரிட்டனில் இருந்து இயங்கும் வயதுவந்தோருக்கான இணையதளங்களின் ஆண்டு வருமானம் ஏறக்குறைய 180 மில்லியன் பவுண்டுகள் என்று குறிப்பிடப்படுகிறது.

## சீனாவின் மிகப் பெரிய இராணுவச் சரக்கு விமானம்

### சோதனை ஓட்டம் வெற்றி



பீஜிங், ஜன.30

சீனாவின் மிகப் பெரிய இராணுவச் சரக்கு விமானத்தின் சோதனை ஓட்டம் வெற்றி அளித்துள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தில் அதிக எடையுள்ள இராணுவ டாங்கிகள் மற்றும் உபகரணங்களை விமானம் மூலம் எடுத்து செல்ல முடியும் என்று சீனா கூறியுள்ளது.

இதுவரை அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளின் இராணுவம் மட்டுமே இவ்வாறான மிகப் பெரிய சரக்கு விமானங்களை வைத்துள்ளன. அந்த விமானங்களின் மூலம் விரைவாகத் தமது துருப்புகள் மற்றும் இராணுவத் தளபாடங்களை இடமாற்றம் செய்து வந்தன.

அந்த வரிசையில் தற்போது சீனாவும் சேர்ந்துள்ளது. சீனாவின் தயாரிப்பான வை-20 என்று பெயரிட்டுள்ள இந்த விமானம், 66 தொன் பொருள்களை ஏற்றிக் கொண்டு 13 ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறக்கக் கூடிய திறன் படைத்ததாகும்.

## சோதனைச் சாவடி மீது தற்கொலை தாக்குதல்

### ஏமனில் 11 இராணுவத்தினர் சாவு

சனா, ஜன.30

ஏமனில் இராணுவ சோதனைச் சாவடி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 11 இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஏமனில் பழங்குடியினர் துணையுடன் அல்குவைதா தீவிரவாதிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஏமன் இராணுவத்தினரின் சோதனைச் சாவடி மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை மோதி தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 11 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 17 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## நோபலுக்கு நிகரான ஆசிய பரிசுத் திட்டம் தைவான் தொழிலதிபரால் உருவாக்கம்

தைபே, ஜன.30

நோபல் பரிசுக்கு நிகரான பரிசுத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு தைவானைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் நிதி உதவி வழங்கியுள்ளார்.

உலக அளவில் மிகுந்த மதிப்புள்ள பரிசாக நோபல் பரிசு விளங்குகிறது. சுவீடன் தொழிலதிபர் அல்பிரட் நோபல் அளித்த நிதியில் இந்தப் பரிசு நிறுவப்பட்டது.

அதற்கு நிகரான பரிசுத் திட்டம் ஒன்றை ஆசிய அளவில் ஒரு பரிசை நிறுவ தைவானைச் சேர்ந்த தொழிலதிபர் சாமுவல் ஜின் திட்டமிட்டிருக்கிறார்.

நிதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கால்பதித்துள்ள ருயன்டெக்ஸ் குழுமத்தின் நிறுவுநர் சாமுவல் ஜின் இது குறித்த அறிவிப்பை தைவானின் தைபே நகரில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

'டாங் பரிசு' எனப் பெயரிடப்பட்ட இந்த விருது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் டாங் பரிசு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வரும். மருத்துவம், சட்டம், சீனா தொடர்பான ஆராய்ச்சி, நீடித்த வளர்ச்சி ஆகிய நான்கு துறைகளில் பரிசளிக்கப்படும்.

ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் பரிசின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 22 கோடியாகும். நோபல் பரிசின் மதிப்பு சுமார் ரூ. 15 லட்சம்தான்.

இதுகுறித்து ஜின் குறிப்பிடுகையில்-

''எந்த நாட்டவரானாலும் இந்தப் பரிசுக்குத் தகுதியுடையவர். இந்தப் பரிசு விஞ்ஞான ஆராய்ச்சியை ஊக்குவித்து, உலக மக்கள் வாழ்வை மேம்படச் செய்யும். சீன கலாசாரத்தை அனைவரும் உணரச் செய்யும் என்று நம்புகின்றேன்'' என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதப் பிரசாரம் செய்த பாதிரியாருக்கு ஈரானில் சிறை

நியூயோர்க், ஜன.30

ஈரானில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்து வந்த அமெரிக்க பாதிரியாருக்கு 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் சட்டதிட்டங்களை மதிக்கவில்லை எனத் தெரிவித்தே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக அளவிலான மனித உரிமை, மதச் சுதந்திரத்தை ஈரான் தொடர்ந்து மீறி வருகின்றது.

மனித உரிமைக்கு மதிப்பளித்து பாதிரியாரை ஈரான் அரசு அதிகாரிகள் உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

# ஆஸியில் வெள்ளம்

## 4 பேர் சாவு; வீட்டுக் கூரைகளில் மக்கள் தஞ்சம்

குயின்ஸ்லாந்து, ஜன.30

ஆஸ்திரேலியாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் வீட்டுக் கூரைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு மாகாணங்களான குயின்ஸ்லாந்து மற்றும் நியூசவுத்வேல்ஸில் பெய்து வரும் பலத்த மழையால் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது.

குயின்ஸ்லாந்து மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு நான்கு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். ஒருவரின் உடல் பிரிஸ்பேனிலும், மற்றொருவரின் உடல் ஜிம்பீ என்ற இடத்திலும்



மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 1,200 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

காலநிலை சீரற்றுக் காணப்படுவதால் மீட்புப் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# திருட்டில் ஈடுபட்டவருக்கு துண்டிக்கப்பட்டது கை

## காணொலியை வெளியிட்டது ஈரான்

பாக்தாத், ஜன.30

திருட்டில் ஈடுபட்ட ஒருவரின் கையைத் துண்டிக்கும் காட்சியை ஈரான் வெளியிட்டுள்ளது.

அதற்கு மனித உரிமைகள் அமைப்புகள் கடும் கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளன.

ஈரானில், முஸ்லிம் மத சட்டங்கள் கடுமையாக பின்பற்றப்படுகின்றன. போதைப் பொருள் கடத்தல், கொலை போன்ற குற்றங்களுக்கு, பொது மக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது. கொள்ளை, திருட்டு போன்ற குற்றங்களுக்கு கை மற்றும் விரல்கள் துண்டிக்கப்படுகின்றன.

விரல் மற்றும் கையைத் துண்டிக்கும் இயந்திரத்தின்



படத்தை அந்த நாட்டு அரசு, பகிரங்கமாக வெளியிட்டுள்ளது.

தற்போது ஷிராஸ் மாவட்டத்தில் திருடன் ஒருவனின் கையை, நான்கு பேர் சேர்ந்து துண்டிக்கும் காட்சியையும் வெளியிட்டுள்ளது.

# விண்வெளிக்கு குரங்கை அனுப்பி வெற்றிகரமாக சோதனையிட்டது ஈரான்

தெஹ்ரான், ஜன.30

விண்வெளிக்கு குரங்கை அனுப்பி வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது ஈரான்.

ஈரான் கடந்த 2011ஆம் ஆண்டு விண்வெளிக்கு குரங்கை அனுப்பிச் சோதனை செய்தது. எனினும் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சியால் நேற்று முன்தினம் தலைநகர் தெஹ்ரான் விண்வெளி ஆய்வு மையத்தில் செலுத்தப்பட்ட கவோஸ்ஹர் ரொக்கெட் மூலம் பிஸ்காம் என்ற விண்கலத்தினுள் குரங்கை வைத்து விண்வெளிக்கு அனுப்பி வெற்றிகரமாக சோதனை செய்தது ஈரான்.

இது குறித்து ஈரான் இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

'''முதலில் நடத்திய சோதனை தோல்வியடைந்தது. இப்போது வெற்றி பெற்றுள்ளோம். அடுத்த எட்டு ஆண்டுகளுக்குள் ஷெரீப்பாஸ்ட் விண்கலம் மூலம் மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளது.



## பாப்பாண்டவரின் புறாவை கடித்துக் குதறிய கடற்பறவை

வத்திக்கான் சிற்றி, ஜன.30

வத்திக்கான் சிற்றியில் பாப்பாண்டவர் பறக்க விட்ட புறாவை, சீகல் எனப்படும் கடற்பறவை படுவேகமாக பாய்ந்து வந்து கடித்துக் குதறியது. அதைப் பார்த்து ஆசீர்வாதப்பர் அதிர்ச்சியடைந்தார்.

16ஆம் ஆசீர்வாதப்பர் வழக்கம் போல், பிரார்த்தனை உரையை நிகழ்த்தினார். அதற்கு முன்பாக புறா ஒன்றை பறக்க விட்டார்.

அப்போது சீகல் எனும் கடற்பறவை, படுவேகமாக பாய்ந்து வந்து தாக்கியது.

அதைப் பார்த்து கொண்டிருந்த அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து விட்டனர்.

புறாவைச் சரமாரியாக தாக்கி கடித்துக் குதறிய பின்னர் சீகல் பறவை அங்கிருந்து பறந்து சென்றது. அதைப் பார்த்த ஆசீர்வாதப்பர் அதிர்ச்சியடைந்தார்.


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இலங்கை தனியார் பஸ் சங்க உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர்

**பொ.கெங்காதரன்** அவர்களது சேவை மேன் மேலும் வளர அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

**அளவெட்டி தனியார் பஸ் சங்கத்தினர்.**

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

# கூறுவிலை கோரல்

## வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்

**TSEP** செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1) Desktop Computer – 05
2) Dot matrix Printer – 02
3) Roned Machine – 01
4) Duplo Machine – 01
5) Photocopier – 01
6) Filing Almirah – 05
7) Filing Cabinets – 02

மேற்படி பொருள்களை வழங்க முன்வருவோர் தமது கேள்விப்பத்திரங்களை மருதனார் மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலக நிதிக் கிளையில் 01.02.2013ஆம் திகதி காலை 10.00மணியிலிருந்து 19.02.2013 வரை அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா100/=ஐ செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

மூடிய கூறுவிலைகள் அனைத்தும் 20.02.2013 காலை 10.00மணிவரை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக நிதிக்கிளையில் ஏற்றுக்கொள்ளப்படும்.. கூறுவிலைகள் அனைத்தும் 20.02.2013 காலை 10.30மணிக்கு திறக்கப்படும். மேலதிக விபரங்களை 0212241573 இலக்க தொலைபேசியூடாக பெற்றுக்கொள்ளலாம்.


**செ.சந்திரராஜா,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**வலிகாமம்.**

28.01.2013

(C/6092)(2.6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில்
29.11.1965



விண்ணில்
01.01.2013

# துரைச்சாமி சந்திரபாலன்

நிகழும் நந்தன வருடம் மார்கழித்திங்கள் 17 ஆம் நாள் 01.01.2013 அமரத்துவமடைந்த எங்கள் குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.01.2013) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் மருதந்தெனி அம்மன் ஆலய மடத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர் சார்பாக
கதிரவேலு ஆறுமுகம் சதாசிவம்
(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம், பிரபல சோதிடர்)

2ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

(28868) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(08)

இது இரண்டாவது நிலை. இயந்திரங்கள் தோன்றின. துப்பாக்கி, அறுவடை செய்யும் மிஷின், பஞ்சைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் என இயந்திரங்கள் தோன்றின. 1896 இல் கார் வந்தது. இரும்பு, இறப்பர், பெற்றோலியம் போன்ற பொருள்களை மக்கள் உபயோகிக்கக் கற்றுக் கொண்டனர். தொழில் சாம்ராஜ்யங்கள் உருவாகின. நகரங்கள் தோன்றின. வங்கி, காப்புறுதி போன்ற புதிய நிறுவனங்கள் தோன்றின. வெற்றியும் பணமும் அதிக செல்வாக்கைப் பெற்றன. தொழில் அதிபர்களும் அரசியல் தலைவர்களும் முக்கியத்துவம் பெற்றார்கள்.

1925 - லிருந்து இன்றுவரை ஒரு புதிய மூன்றாவது நிலை உருவாகி வருகிறது. ஒரு பாதுகாப்பற்ற உணர்வு முன்னைவிட மக்களிடம் அதிகம் வளர்ந்திருக்கிறது. வேலை நிரந்தரமல்ல என்ற உணர்வு மக்களது மாறி வரும் தேவைகளால், தொழில் சாசுவதமல்ல என்ற உணர்வு, வுவுகணைகளையும் அணுகுண்டுகளையும் எண்ணும்போது வாழ்வு - குடும்பம் -சாசுவதமல்ல என்ற உணர்வு.

செல்வாக்கில் இடமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் தலைவருக்குப் பதில் 'மக்கள் சக்தி' அதிகம் மேவி நிற்கிறது. தொழில் அதிபர்களுக்குப் பதில் தொழில் நிர்வாகிகள் வந்துவிட்டார்கள், புதிய பொருள்களான கணினியும், குரோமோசோமை மாற்றி அமைக்கும் மருந்துகளும் வந்து கொண்டிருக்கின்றன. பெற்றோலிய எண்ணெய் விரைவில் தீர்ந்து போய்விடும் நிலையில் நிரந்தரமாகக் கிடைக்கும் சூரிய சக்தியையும், கடல் அலைகளையும் காற்றையும் உபயோகிக்க மனிதன் முயன்று கொண்டிருக்கிறான். நாள்பட்டுப் பயன்படும் பொருள்கள் போய், தூக்கி எறியும் பொருள்கள் மிகுந்துவிட்டன. அதாவது சவரக் கத்திபோய் ரேஸர் பிளேடுகள் வந்துவிட்டன.

உலகம் அமெரிக்காவாலும் ரஷ்யாவாலும் தீர்மானிக்கப்படுகிறது என்ற நிலை மாறி உலக செல்வாக்கு ஜப்பானாலும் சவூதி அரேபியாவாலும், தாய்வானாலும், தென்கொரியாவாலும் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதர்கள் செய்கிற வேலையைக் கார் தயாரிக்குமிடங்களில் அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மனித யந்திரங்கள் செய்கின்றன.

வீடு, வசதி என்ற கவலைகள் நீங்கிய மனிதன் ஆத்ம திருப்திதான் அவசியம் என்று பேசுகிறான். சமீபத்திய சர்வேயில் மக்கள் இந்த ஆத்ம நிறைவுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தெரிய வருகிறது. அமெரிக்காவில் வளர்ந்து வரும் யோக சாதன நிலையங்களும், இந்தியச் சாமியார்களது மடங்களின் வளர்ச்சியும் செல்வாக்கும் இதைக் கோடுபோட்டுக் காட்டுகின்றன.

ஜோன்ஸ் சாக் என்ற நோபெல் பரிசு பெற்ற விஞ்ஞானி கூறுகிறார்: ''மனிதமனம் ..... அதன் சக்தி- இன்னும் கண்டுபிடிக்கப்படாத விடயமாக இருக்கிறது!''

மனித வாழ்வில், இனி மனிதர்கள், மனித உறவுகளைப் பற்றி அதிகம் அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என்றும், சமாதானமாக வாழ வழி காண்பார்கள் என்றும் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இன்றிருக்கும் வுவுகணைகளையும் அணுகுண்டுகளையும் வைத்துக் கொண்டு பதினெட்டே நிமிடங்களில் உலகை பஸ்பமாக்கிவிடலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆகவே செய்திப் பரிமாற்றம், கருத்துப் பரிமாற்றம் மனம்விட்டு உண்மைகளைப் பரஸ்பரம் தெரிவித்துக் கொண்டு சேர்ந்து வாழ்தல் - இவை அதிக முக்கியத்துவம் பெற்றாக வேண்டும்.

உலகத்தோடு ஒட்டி ஒழுகல்தான் வாழ்க்கை. ஆகவே இந்த உலகம் எப்படி இயங்குகிறது. எப்படி மாறிவருகிறது என்பதை நாம் புரிந்துகொண்டால் தான் நம் வாழ்வை அதற்கேற்பச் சரி செய்து கொண்டு ஈடுகொடுத்து வாழ முடியும். நாம் எல்லோரும் அதில் கவனம் செலுத்தினோமானால் தான் எமது நாடும் எமது சமுதாயமும் ஜீவனுடன் அடுத்த தலைமுறையைச் சந்திக்க இயலும்.

**மாறுவதற்கு துணிவு உண்டா எம்மிடம்?**

மாற விரும்பாதவர்கள் 'எல்லாம் விதி, எல்லாம் தலையெழுத்து, அதன்படிதான் நடக்கும்' என்று விதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டுப் பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள், பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில் சுகம் இருக்கிறது!

மற்றும் சிலர், '' எங்கள் அப்பா இப்படி, எங்கள் தாத்தா இப்படி, இதெல்லாம் பாரம்பரிய விடயம். என்னால் எப்படி வேறுவிதமாக நடந்து கொள்ள முடியும்?'' என்று பாரம்பரியத்தின் மீது, ஜீன்கள் குரோமோசோம்கள் மீது பழியைப் போடுகின்றனர். நாம், இங்கே விதிக்குப் பதில், வேறு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து விட்டோம்! சந்தோஷப்படலாம்!

மற்றும் சிலர் மனவியல் அறிஞர் பிராய்டைத் துணைக்கு அழைப்பார்கள். ஏனெனில் இளமையில் - ஆறு வயதுவரை நாம் எப்படிப் பழக்கப்படுத்தி வளர்க்கப்பட்டோம் - பயமுறுத்தப்பட்டோம் -என்பதைப் பொறுத்துதான் எமது அணுகுமுறையும் வாழ்க்கை முறையும் அமைகிறது என்று பிராய்டு கூறி இருக்கிறார்.

சமுதாயவாதிகளையும், வழக்கறிஞர்களையும் கேட்கும் போது ''வளர்ந்த சூழ்நிலையில் அவன் பாதிக்கப்பட்டான்! திருடனானான்! கொலைகாரனானான்! சமுதாய விரோதி ஆனான்! அந்தச் சமுதாயத்தைக் குற்றக் கூண்டில் ஏற்றுங்கள்! ' என்று உணர்ச்சிப் பிரசங்கம் செய்வதுண்டு.

விதி, சூழ்நிலை, பாரம்பரியம், வளர்க்கப்பட்ட விதம் என்பனவற்றின் முத்திரைகள் எமது வாழ்வில் விழத்தான் விழுகின்றன.

வாழ்வு ஒரு சீட்டு விளையாட்டுப்போல. எமது சீட்டுக்களை நாம் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. அதே போல் எமது அப்பா, அம்மாவை, நாம் பிறந்த ஊரை, நாம் வளர்க்கப்பட்ட விதத்தை, எதிர்பாராது ஏற்படும் சம்பவங்களை எம்மால் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. கட்டுப்படுத்த முடிவதில்லை.

*எம்.எஸ்.உதயமூர்த்தி* (தொடரும்)

# கோமாதாவை வழிபடுவதன் மூலம் இயற்கை இடர், சூழல் பாதிப்பு ஏற்படா

## அவை மறைந்து போகும் என்கிறார் ஜாக்கிரத் சைத்தன்ய

யாழ்ப்பாணம்,ஜன.30

இந்துக்களின் கோமாதா வழிபாட்டினால் சூழல்பாதிப்பு, இயற்கை இடர்கள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய தீங்குகள் மறைந்து போகின்றன. அதனாலேயே தைப்பொங்கல் பண்டிகையின் மறுநாள் கோமாதா உற்சவம் இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது என்று வடமாகாண சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியர் பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோமாதா உற்சவம் அண்மையில் சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆன்மிகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே ஜாக்கிரத் சைத்தன்ய இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தைப்பொங்கல் பண்டிகையின் மறுநாள் பட்டிப்பொங்கலை இந்துக்கள் பசுவை தெய்வமாக நினைத்து பூசித்து வழிபாடு செய்கிறார்கள். வேத நூல்களில் பசுவில் முப்பத்து முக்கோடி தேவர்கள் எழுந்தருளி இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரபஞ்சத்தில் ஆசியைப் பெற்றுக் கொள்ள கோமாதாவை வழிபட்டாலே போதும். கோமாதா வழிபாட்டின் போது சூழல் பாதிப்பு, இயற்கை இடர்கள் என்பன ஏற்படமாட்டா. மழை உரிய காலத்தில் பெய்யும்.

ஒவ்வொரு வீட்டிலும் இந்துக்கள் பசுமாட்டை வளர்க்க வேண்டும். அப்போது தான் வீடு லட்சுமி கரமானதாக இருக்கும். கோமாதா மகாலட்சுமியாகப் போற்றப்படுகிறது. இன்றைய காலத்தில் பசுவை இறைச்சிக்காக வெட்டி உண்ணுகின்ற கொடிய கலாசாரம் ஆரம்பித்துள்ளது. எப்போது மனிதன் பசுவை வெட்டி உண்ண ஆரம்பிக்கின்றானோ அப்போதே மனிதனுக்கு புற்றுநோய்களும், உயிர் கொல்லி நோய்களும் சமூகத்தில் ஏற்படும் என்று சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. ஆகவே நாங்கள் அந்த ஒரு செயலைச் செய்யாது கோமாதாவைப் போற்றி வழிபடுவோமாக.

ஞாயிற்றுக்கிழமைகளில் கோமாதாவைக் குளிப்பாட்டி, விபூதி அணிவித்து கோ பூசை செய்து வழிபடலாம். பஞ்சகவ்வியம் என்கின்ற புனிதப் பொருள்கள் கோமாதாவில் இருந்தே பெறப்படுகின்றன. அப்படிப்பட்ட புனிதமான கோமாதாவைப் போற்றி நாமும் உயர்வடைவோம்.- என்றார். (எ-14)




டாக்டர் ஆ.பேரின்பநாதன் எழுதிய 'சிறுவர் துஷ்பிரயோகம்', 'மதுவும் அடிமை நிலையும்' எனும் இரு நூல்களின் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் 'சிறுவர் துஷ்பிரயோகம்' எனும் நூலின் முதற் பிரதியை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வெளியிட்டு வைக்க தாயகம் சிறுவர் இல்லத்தின் அதிபர் வி.ஸ்ரீதரன் பெற்றுக் கொள்கிறார். (எ-13-பி)

## புதிய அதிபர் நியமனம்

குருநகர்,ஜன. 30

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திருமதி ஜஸ்ரின் பிறின்சிலி கிறிஸ்ரபெல் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் தமது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் பாடசாலையின் அதிபர் மா. ஞானப்பிரகாசம் கடந்த வருடம் நவம்பர் 15 ஆம் திகதி தனது சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னரே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-51)

## தேசிய மட்டத்தில் மூன்றாமிடம்



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் செல்வன் ச.ஜீவதாஸ் சமுர்த்தி 'கெக்குழு' சிறுவர் கழக தேசிய மட்ட கலாசார இலக்கியப் போட்டியில் நாட்டார் பாடலில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். (எ-29)

# நூல்களை வாசிப்பதுடன் அவற்றை பேணிப் பாதுகாக்கவும் முன்வரவேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜன.30

நூல்களை வாசிப்பதுடன் அவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் முன்வரவேண்டும். சனசமூக நிலையங்கள் எழுத்தாளர்களால் வெளியிடப்படும் நூல்களை வாங்கி அனைத்து மக்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதுடன் அவற்றைப் பாதுகாத்து வருங்கால சந்ததியின் வாசிப்புக்கும் வழங்கவேண்டும். நூல்கள் ஒவ்வொன்றும் பெறுமதியானவை என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும்-என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தெரிவித்தார்.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி சனசமூக நிலையத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே துரைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சனசமூக நிலையங்கள் ஒரு கலைக்கூடமாக திகழ வேண்டுமானால் நூலகங்களை நிறுவி பல வகையான சஞ்சிகைகள் அந்தந்தக் காலங்களில் எழுத்தாளர்களால் வெளியிடப்படும் நூல்கள், மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் போன்றவற்றை நூல் நிலையங்களில் வைத்து அனைவரையும் வாசிக்கும் பழக்கத்துக்கு உட்படுத்த வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கு அவற்றின் செயற்பாடுகளில் மிகவும் கண்காணிப்புடன் உள்ளது. சனசமூக நிலையங்கள் நூலகங்களை அமைக்கும் சமயத்தில் அவற்றுக்கான தளபாடங்கள், புத்தகங்கள் போன்ற வசதிகளைச் செய்ய ஆயத்தமாக உள்ளது.- என்றார். (எ-9)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஏரம்பமூர்த்தி சமாதான நீதிவானாக கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



இவர் பெருந்தெருக்கள் திணைக்கள முன்னாள் ஒப்பந்தகாரர் ஆவார். அத்துடன் சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். (எ)

# செயலாளர் நியமனம்

வடமராட்சி,ஜன.30

வல்வெட்டித்துறை நகரசபையின் புதிய செயலாளராக கரவெட்டிப் பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றிய திருமதி கிரிஜா வாமதேவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நகரசபையில் முன்னர் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி எஸ். சந்திரமோகன் பதவியிலிருந்து இளைப்பாறிச் சென்றதையடுத்தே அந்தப் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-8)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்.வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகியம்மன் கோயில் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன் பரிபாலனசபையில் தலைவர்-கலக் விசுவநாதன், உபதலைவர்கள்-சி.ஸ்ரீஜீவா, சு.மகாராஜன், செயலாளர்-ந.புஷ்பகுமார், உபசெயலாளர்-கு.பிரசன்னா, பொருளாளர்-சி.கௌரீதரன் ஆகியோருடன் 12 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொண்டர் சபையின் தலைவர்- வே.சசிக்குமார், உபதலைவர்கள்- கு.சசிக்குமரன், சி.ரிசிகேஷன், செயலாளர்- சி.கிரிதரன், உப செயலாளர்- சி.பிரணவன், பொருளாளர்- சி.விஜயராகவன் ஆகியோருடன் 12 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021 567 1111
விநியோகம்: 021 567 7222
தொலைநகல்
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 2229731

மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா மொபைல்ஸ்' - மாலுசந்தி, அல்வாய்: 021 226 3206, 'நெல்லியடி மொபைல் ஸ்டோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தைப்பகுதி, மல்லாவி: 0778175116, 'கோபி வலைக்கிற்றி' - முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571, 'சுஜா ட்ராவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார்: 023 222 3311

## அளவீட்டுக் கருவிகள்

அபிவிருத்தி என்பது மக்களின் பொருளாதார கட்டமைப்பு மட்டுமன்றி வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இதில் ஏதேனும் ஒன்று குறையும் பட்சத்தில் அபிவிருத்தியின் பூரண தன்மை அற்றுப்போய் விடுகிறது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 30 ஆண்டுகால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப் பட்டு [இன்னமும் முகாம்களில் வாழ்வோர் தவிர] அங்கு அபிவிருத்திப் பணிகள் முழு வீச்சில் இடம்பெறுவதாகச் சொல்லப்படுகிறது.

அதுமட்டும் அல்லாமல் இந்த அபிவிருத்தி வேலைகளுக்கும், அதன் விரிவாக்கங்களுக்கும் இடையூறு வரும் வகையில் குறுகிய அரசியல் லாபம் கொண்டவர்கள் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் அரசு கூறும் அபிவிருத்தி என்பது வீதிகளையும், வர்த்தக நடவடிக்கை களையும் பொழுதுபோக்கு மையங்களையும் உருவாக்குவதில் மட்டுமே கவனம் செலுத்தப் படுவதாகத் தெரிகிறது. ஆனால் அபிவிருத்தி பற்றிய பிரசாரம், மக்கள் வாழ்வியலின் எல்லாக் கட்டமைப்புக்களிலும் பரிணமித்து உள்ளதாக காட்டப்படுகிறது.

இதற்கு வடக்குக் கிழக்கிலேயே தயார்படுத்தப் பட்ட அரசோடு கூட்டிணைவுக் கொள்கையுடைய சிலர் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் நாளாந்தம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் அபிவிருத்திகளை [வாகனங்களில் செல்லும் போது இருமருங்கிலும் அவர்களது கண்களில் படும்] பெரிதாகப் பேசிவருகின்றனர்.

மக்கள் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் உரிமைகள் பற்றி பேசுபவர்கள் மீதே அந்தச் சுயநல அரசியல் சாயம் இவர்களால் பூசப்பட்டு இருக்கிறது. குறைபாடுகளை வெளிக்கொண்டு வருவதன் மூலமே அபிவிருத்தி இலக்குகள் அடையாளப் படுத்தப்படுகின்றன என்பதை இவர்கள் ஏனோ மறந்திருக்கின்றனர்.

குறிப்பாக அரசின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் ஊடகங்கள் மீதும், 'நல்லிணக்கச் சூழலைக் குழப்ப முயற்சிக்கின்றன' என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

எல்லோரும் அறிந்த வகையில் மக்களிடம் இருந்தே ஊடகங்கள் வாயிலாகச் செய்திகள் வெளிவருகின்றன. அவர்கள் தமது நெருக்கடி நிலைமைகளை எடுத்துரைக்கும் சந்தர்ப்பங்களில் அவை செய்திகளாகின்றன. அந்தக் குறைபாடுகளை அபிவிருத்திக்கான இலக்குகளாக மாற்ற வேண்டியது அரசின் கடமை.


ஆனால், அரசு அதனைவிடுத்து குறைபாடு களைச் சுட்டிக்காட்டுவோர் மீது தனது வன்மப் பார்வையைச் செலுத்துகின்றது. அது மட்டுமன்றி தயார்படுத்தப்பட்ட சிலரது பின்னூட்டங்களையும், விமர்சனங்களையும் ஊக்குவித்து 'முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது' போன்று செயற்பட வைக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட கூட்டத்தின் வீடுகளும் முற்றங்களுமே முழுதளவிலான அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றன. மக்கள் குடிசைகளில் பல்வேறு நெருக்கடிகளோடு வாழும் நிலையில் இவர்களது வாகனங்களே அபிவிருத் தியை அளவிடுகின்றன.

# சுதந்திர இந்தியாவுக்கு கனவு கண்ட மகாத்மா

■ எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி

இன்று (30.01.2013) அண்ணல் மகாத்மா காந்தியின் 65 ஆவது சிரார்த்த தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.



காந்தியடிகளின் ஆன்மிக வாரிசு எனக்கருதப்பட்டவர் ஆச்சார்யா விநோபா. மராட்டிய மாநிலத்தில் பிறந்த விநோபாவே, பிரமச்சாரியாக இருந்து சமுதாயப்பணி ஆற்றியவர். சிறு வயதிலேயே விஞ்ஞான அறிவுடன் மெஞ்ஞான உணர்வும் வாய்க்கப் பெற்றவர்.

தமது இருபதாவது வயதில் மனதில் நிலவிய கடும் ஆன்மிக ஈடுபாடு காரணமாக, கடவுளைக் காணவேண்டும் என்ற மன உந்துதலால் வீட்டை விட்டு வெளியேறிய விநோபா 1916 இல் நேராக வரணாசியை (காசி) வந்தடைந்தார்.

அன்றைய செய்தித்தாளில் வெளிவந்த ஒரு செய்தி அவருடைய கண்ணில் பளிச்செனப் பட்டது. அது, அதற்கு முதல்நாள் காசிப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவில் மகாத்மாகாந்தி நிகழ்த்திய பேச்சின் சாராம்சம். அதை ஊன்றிப் படித்த அவர், கடவுளைத் தேடி இமயத்துக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டார். தனக்கு ஏற்ற குரு மகாத்மா காந்திதான் என்று தீர்மானித்த அவர் நேராக அகமதாபாத்தில் சபர்மதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள சபர்மதி ஆசிரமத்தைச் சென்றடைந்தார்.

தன்முன் நின்ற பிராமண வாலிபனைச் சோதிப்பதற்காக கழிவுகளை அள்ளி உரமாக்கும் பணியை அவனுக்கு அளிக்கிறார் காந்தி. அவனோ விருப்பு வெறுப்பின்றி அதைக் கனகச்சிதமாய்ச் செய்துமுடித்து விடுகிறான். இது அவரைப் பெரிதும் கவர்ந்தது. இவ்வாறு தான் விதி விநோபாவை யுக புருஷராகிய மகாத்மா காந்தியுடன் இணைத்தது.

ஆதாரக் கல்வி, வாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கைமூலம் கல்வி என்பதை வலியுறுத்திவந்த விநோபா ஆதாரக் கல்வியை விளக்குவதில் சிறந்த புலமை பெற்றவர். மகாத்மாவால் முதல் சத்தியாக்கிரகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆச்சாரியா விநோபாவே. அதுவரை பிரபலமின்றி ஆசிரமத்துக்குள்ளேயே தங்கிப் பணியாற்றிவந்த விநோபா, காந்திஜியால் அரசியலுக்கு இழுக்கப்பட்டார். நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலத்தைத் தானமாக வழங்கும் பூதான இயக்கத்தை ஆரம்பித்தவரும் விநோபாவே. காந்திய அரசியல் குறித்த அவரது கருத்துக்கள் பெறுமதி மிக்கவை; இவ்வேளைக்குப் பொருத்தமானவை.

காந்தியடிகள் ஒரு யுகபுருஷராக வாழ்ந்தார். கொழுந்து விட்டெரியும் குரோதத்தை அடக்கி கருணைமழை பொழிந்தார். ஒரு தனிச்சிந்தனைப் போக்குடன் செயற்பட்டார். அந்தச் சிந்தனைப் போக்கை நன்கு இனங்கண்டு கொண்டவர் விநோபா. சத்தியாக்கிரகம், சாந்தி சேனை, அஹிம்சை, ஆயுதம் இல்லா எதிர்ப்பு என பல்வேறு கோணங்களில் காந்தியை நோக்கும் விநோபா காந்தியின் அரசியல் போக்குக் குறித்துத் தெளிவாக எடுத்துரைத்திருந்தார்.

பாரத நாட்டுப் பண்பாட்டில் உள்ளார்ந்த வலிமை ஒன்றுண்டு. அதையே அன்றாடப் பொதுவாழ்வில் வெளிப்படுத்தும் வாய்ப்பு காந்திக்குக் கிட்டிற்று. இந்திய நாடு தன்னாட்சி பெறும் முயற்சியையே மனித இனத்துக்குச் செய்கின்ற சேவையாக அவர் எண்ணினார். அரசியலுக்குக் கூட ஒரு தார்மீக, ஆன்மிக வண்ணத்தைப் புகட்டினார். ஆதலால் அவர் இயக்கம் வெறும் அரசியல் இயக்கம் என்பதோ மையவில்லை. அரசியலில் சற்றும் பற்றில்லாத எண்ணிறந்த மக்கள் காந்தியின் வழியை நம்பினர்; பின்பற்றினர். காந்தியின் பார்வையில் அவருடைய அரசியல், அவர் தம் சத்தியநாட்டத்தின் ஓர் அம்சமாகவே இருந்தது. காந்திஜின் அரசியல், சத்தியத்தில் ஊன்றிநின்ற படியால் எதிரியின் அரசியலும் அதற்கமையவே ஆக வேண்டியதாயிற்று.

உண்மையாளர்களின் சொற்களில் எதிரிகள் உட்பட உலகத்தோர் எல்லோருக்கும் நம்பிக்கை உண்டாகிறது. காந்திஜியின் பேச்சில் இருபொருள் இராது. எது சொல்லாக வெளிப்படுகிறதோ அது அவர் மனத்திலும் இருக்கும். இதனால் பாரத நாட்டு மக்கள் மனத்தில் காந்திஜி மீது இந்த நம்பிக்கை பிறந்தது. அரசியல் தலைவர்கள் எப்போதும் இருபொருள் படத்தான் பேசுவார்கள் என்றே மக்கள் கருதிவந்தனர். மனதில் உள்ளதை உள்ளபடியே பேசுகின்ற வழக்கத்தைக் காந்திதான் தொடங்கி வைத்தார். இந்த மனிதரின் மனத்தில் உள்ளதுதான் வாய்ச்சொல்லாகவும் வரும் என்று மக்கள் மனத்தில் படிய ஆரம்பித்தது. இப்படியாக அவர் சொல்தான் வலிமை பெற்றுநின்றது. அந்தச் சொல்லின் வலிமையே அவருடைய முழு வலிமையுமாயிற்று.

காந்திஜியின் பணியெல்லாம் சமூகவியல் பணியே - மக்கள் பணியே. ஏனெனில் அவர் பணி மக்களை விழிப்படையச் செய்யும் முயற்சியே. நாடு தன்னாட்சி அடைவதற்காகச் செய்த பணியுமே சமூக இயல் சார்ந்ததேயாகும். அப்போது இந்திய நாட்டின் முக்கியமான பிரச்சினை நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பதே, சுதந்திரமில்லாதவன் செயலற்றவன். சுதந்திரம் இல்லாதவன் இருந்தும் இல்லாதவனே. ஆதலால் தான் நாட்டு விடுதலைக் காகக் காந்தி அரசியலில் இறங்கினார். வாழ்க்கையைப் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் உள்ள சிந்தனையை அவர் ஆய்ந்தார்; விமர்சித்தார். அதில் அரசியலுக்கு இயல்பாகவே ஓர் இடம் இருந்தது. ஆனால் அதற்கு முக்கியத்துவம் இல்லை. வாழ்க்கைச் சிந்தனையில் அரசியலுக்கும் ஏதோ சற்று இடம் உண்டு என்ற அளவில்தான், அவர் அரசியல் பிரச்சினைகளை அணுகினார்.

அரசியலுக்கு ஆன்மிக உருவம் தரும் சிந்தனையைக் காந்தி மேலும் தெளிவு பெறச்செய்தார். சத்தியம், அஹிம்சை ஆகியவற்றின் அடிப்படையில் தான் அரசியலும் நடக்க வேண்டும் என்று காந்தி கூறினார். தம்மைப் பொறுத்தவரை அரசியலை ஆன்மிக வடிவமாக்க அவர் எப்போதும் முயன்றார். அவர் மறைவுக்கு முன் சுயராஜ்யம் பெறும் காங்கிரஸின் 'தன்னாட்சி பெறும் முயற்சி நிறைவெய்திவிட்டது. காங்கிரஸை லோக் சேவைச் சங்கமாக உருமாற்றும் படி அவர் ஆலோசனை கூறினார். உலகச் சேவைக்கு ஒரு சங்கம் நிறுவ வேண்டும். காங்கிரஸைப் பொறுத்த வரையில் இதுவே அவர் எழுதிவைத்த 'உயில்' சாசனம். தம் மறைவுக்கு முன்தினம் அவர் அதைத் தயார் செய்தார். காங்கிரஸுக்கு அரசியல் சுதந்திரம் கைக்கெட்டியுள்ளது. ஆனால் இந்த நாட்டுச் சாமானிய மக்களின் பொருளாதாரச் சுதந்திரம், சமூகச்சுதந்திரம், அவர்களுடைய ஒழுக்கம் சார்ந்த சுதந்திரம் ஆகியவை பற்றிய பணி இன்னமும் செய்ய வேண்டி இருக்கிறது என்று அதில் குறிப்பிட்டிருந்தார். நாட்டுச் சேவைக்குக் கட்சிச் சார்பு, கொள்கைச் சார்பு ஆகியவற்றினின்றும் முற்றிலும் விடுபட்ட ஒரு குழு இருக்க வேண்டும் என்றும், அது கிராமங்களின் தன்னிறைவுக்காகப் பாடுபட வேண்டும், பணிசெய்ய வேண்டும் என்றும் காந்தி விரும்பினார்.

எனவே காந்திய அரசியல் என்பது வன்முறையினின்றும், அதிகார பலத்தினின்றும் விலகிய ஆன்மிக நோக்குடைய மக்கள்மைய சித்தாந்தம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். காந்தியடிகள் இன்று இல்லவிட்டாலும் இன்றைய தலைமுறையினர் அவருடைய சிந்தனைகள் மூலமே அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றுப் பசி வலிமை மிக்கது

மூலம்: மன்பிம
தமிழில்- வி.எஸ்.பி.

"ராஜபக்ஷ கூட்டுத்தாபனம் என்ற புல்டோசரின் பயணத்தை நாட்டின் பொருளாதாரம் மீது அழுத்தம் மேற்கொள்வதால் மட்டுமே தடுத்து நிறுத்த இயலும். வெளிநாட்டுக் கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு இந்த ஆண்டில் பெருந்தொகை நிதி அரசுக்குத் தேவைப்படுகிறது. இதன் காரணமாக இந்த ஆண்டில் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தொடர்பில் இலங்கை அரசு மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டி ஏற்படும். பொருளாதார ரீதியில் இலங்கை மீது அழுத்தம் மேற்கொள்ள இவ்விரு நாடுகளாலும் இயலும் என்பதே அதற்கான காரணம். ஜனாதிபதி மஹிந்த எதிர்நோக்கும் சிக்கல்கள் மற்றும் அவருக்குப் பின்னடைவை ஏற்படுத்தத்தக்க சிரமங்கள் குறித்து இவ்விரு நாடுகளும் தெளிவாக அறிந்திருக்கக் கூடும். இவ்விரு நாடுகளும் தத்தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதிலேயே கவனம் செலுத்தும் என்பதும் நிச்சயமானதொன்று. இலங்கை அரசிடமிருந்து தாம் எதிர்பார்ப்பதை அவர்கள் எவ்விதத்தில் வெளிப்படுத்தக்கூடும் என்பதற்கான பதிலுக்காக நாம் பொறுத்திருந்து தானாக வேண்டியுள்ளது."

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த வேளை, அதன் புலனாய்வுப் பிரிவின் தலைவராகக் கடமையாற்றிய அனுபவம் கொண்டவரும், தெற்கு ஆசியா தொடர்பான இந்திய புலனாய்வுத்துறை நிபுணருமான கேணல் ஹரிகரன் வெளியிட்டுள்ள கருத்து இது.

## கேணல் ஹரிஹரனின் பெறுமதிமிக்க கருத்து

இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கை வகுப்பாளர்களில் கேணல் ஹரிஹரனுக்கு முக்கிய இடமுண்டு. இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படை நிலைகொண்டிருந்த வேளை இலங்கையில் சேவையாற்றிய அனுபவம் காரணமாக அவரது அரசியல் கட்டுரைகளில் இடம்பெறும் இலங்கை குறித்த இந்தியாவின் பார்வை தொடர்பான கருத்துக்கள் பெறுமதிமிக்கவையாக அமைந்திருக்கும். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்ததன் பின்னர் கேணல் ஹரிஹரன் எழுதிய கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்தே, மேற்குறிப்பிட்ட கருத்தாகும். ஆனாலும் எவ்விதத்திலாவது ஜனாதிபதி மஹிந்த, ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து அகற்றி புதிய பிரதம நீதியரசரொருவரை நியமித்து நீதித்துறையைத் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தேயாவார் எனவும் கேணல் ஹரிஹரன் தமது அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமன்றி ஜனாதிபதி மஹிந்தவின் முடிவை எவராலும் தடுத்து நிறுத்திவிட இயலாதெனவும், நாட்டின் பொருளாதாரம் முற்று முழுதாக வீழ்ச்சியடைவதனால் மட்டுமே ஜனாதிபதி மஹிந்தவை அவரது போக்கிலிருந்து தடுத்து நிறுத்த இயலுமெனவும் அவர் தமது அந்தக் கட்டுரையில் விமர்சித்திருந்தார்.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், அரசின் அந்த நடவடிக்கையைக் கண்டித்து வெளியிட்ட கருத்தை, கேணல் ஹரிஹரனின் கருத்துடன் வைத்து ஒத்து நோக்குவது பொருத்தமானதாகும். அமெரிக்க ராஜாங்க திணைக்களப் பேச்சாளர், ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான அரசின் நடவடிக்கை, எதிர்காலத்தில் இலங்கையில் வெளிநாடுகளின் முதலீடுகளை அற்றுப்போகச் செய்யும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடுமெனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

## வெளிநாட்டு முதலீடுகளுக்கான நிபந்தனை

எந்தவொரு நாட்டிலும் வெளிநாடுகளின் முதலீட்டுக்கான முதலாவது நிபந்தனையாக, குறிப்பிட்ட அந்த நாட்டில் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுமொன்றாக அமைந்திருக்க வேண்டும் என வற்புறுத்துவதாக அமைகிறது. அத்தகைய நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடே வெளிநாட்டு முதலீட்டுக்கான ஒப்பந்தத்துக்குப் பாதுகாப்பளிக்குமொன்றாகக் கொள்ளப்படும். எதிர்காலத்தில் வெளிநாட்டு முதலீடொன்றை அரசு சுவீகரித்துக் கொள்ளுமானால், அதற்கெதிரான நடவடிக்கைக்கு நீதிமன்றத்தையே நாடியாக வேண்டும். ஆதலால் நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடே வெளிநாட்டு முதலீட்டுக்கான அத்தியாவசியமான நிபந்தனையாகும். இந்த நிலையில் வெளிநாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொண்டால் நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தில் வீழ்வது நிச்சயமே.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் பெற்றுக்கொள்ளத்தக்க விதத்தில், சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசு பெருந்தொகைக் கடனுக்காக விண்ணப்பித்துள்ளமை மற்றொரு முக்கியத்துவம் பெறும் விடயமாகும். 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கமைய செலவிடப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச செலவினங்களை மேற்கொள்வதற்காகவே இந்தக் கடன் கோரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இந்தக் கடனை வழங்க சர்வதேச நாணய நிதியம் மறுக்குமானால், செலவினத்துக்கான நிதி இன்மையால் அமைச்சுக்கள் மற்றும் அரசநிறுவனங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்க நேரிடும்.

சர்வதேச நாணய நிதியம் ஒருவேளை இந்தக்கடன்தொகையை வழங்க மறுக்கக்கூடும். இல்லையேல் சிலவேளை நாட்டு மக்களை வாழ்க்கைச் சுமையில் ஆழ்த்தும் விதத்தில் பல்வகை நிபந்தனைகளுடன் கடன் வழங்கவும் கூடும். இவற்றில் ஏதுவொன்று நிகழ்ந்தாலும் நாடு பொருளாதார நலிவுக்கு உட்பட நேரும். நாட்டு மக்கள் பொருளாதாரச் சுமையால் வருந்த நேரிடும்.

அத்தகைய நிலையில் நாட்டின் பொது மக்கள் [illegible] காலப் பகுதியில் இடம்பெற்றமை போன்று மரவள்ளிக்கிழங்கை உண்டு உயிர்வாழ நேரிடக்கூடுமா? அத்தகையதொரு நிலை ஏற்பட்டால் இன்றைய நிலையில் நாட்டு மக்களுக்கு மரவள்ளிக் கிழங்கு உண்டு ஜீவிக்கக்கூட வாய்ப்பிருக்காது. அவர்கள் மண்ணை உண்டுதான் உயிர் வாழ நேரிடும்.

" சீனி இல்லாமல் தேநீர் அருந்துவோம், மிளகாய் இல்லாமல் குழம்பு வைப்போம். அம்மையார் உத்தரவிட்டால், வைக்கோலைக் கூட நாம் உண்ணத் தயார்." சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசு, நாட்டை நிர்வகித்த வேளையில் அரசின் அடிவருடிகள் மேற்கண்டவாறு கோஷமிட்டே ஊர்வலங்கள் மேற்கொண்டதுண்டு.

"நாட்டுக்காக விஷமும் அருந்துவோம், உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் எம்மால் இருக்க இயலும். ஜனாதிபதி ஆணையிட்டால் வைக்கோலைக் கூட உண்ண நாம் தயார்"

எதிர்வரும் காலத்தில் நாட்டில் பசி, பட்டினி நிலை உருவாகும் வேளை, நாட்டுப்பற்றாளர் தரப்பினர் மேற்கண்டவாறு கோஷங்களிட்டு ஊர்வலங்களை நடத்தினாலும் ஆச்சரியமடைய முடியாது.

"பசி வரும் போது அன்பு பின்கதவால் ஓடிப்போய் விடும்" என்பது புதிதாகத் திருமணம் செய்து கொண்ட தம்பதியர் மத்தியில் நிலவும் ஒரு பேச்சுவழக்குக் கதை.

வயிற்றுப்பசி நாட்டின் மூலை முடுக்கிலுமுள்ள பொதுமக்களைப் பற்றிக் கொள்ளும் போது நாட்டுப்பற்று, சத்தமின்றி பின்கதவால் வெளியேறி ஓடித்தப்பிவிடும்.

## சிறிமாவோ அரசின் வீழ்ச்சிக்குக் காரணம்

1970-77 காலப் பகுதியில் பதவியிலிருந்த சிறிமாவோ தலைமையிலான அரசுக்கு இத்தகைய கதியே ஏற்பட்டது. பொது மக்களது வயிற்றுப்பசி உக்கிரமடைந்த வேளை, சமதர்மவாதம் பின்கதவால் ஓடித்தப்பியமை வரலாறு. மற்றெல்லா வற்றையும் விட வயிற்றுப் பசியே பலம் மிக்கது என்றொரு முதுமொழி வழக்கிலுண்டு .

1999 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளது தாக்குதலில் ஒரு கண் பார்வையை இழந்த சந்திரிகாவுக்கு ஆதரவாகத் திரண்ட பெண்கள், 2001 ஆம் ஆண்டில் வயிற்றில் பசி எடுத்த போது சந்திரிகாவை விரட்ட விளக்குமாற்றைக் கையிலெடுத்தனர். எனவே என்ன தான் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தினாலும் மக்கள் சக்தி, புல்டோசரைப் போன்ற அரச அதிகா[illegible] ஜனாதிபதி மஹிந்த[illegible] போசரைப் போன்று, தாம் எதிர்கொள்ளும் எந்தவொரு இடையூறையும் தரைமட்டமாக்கி வருகிறார்" என ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஊடகவியலாளர் விக்டர் ஐவன் வெளிநாட்டு ஊடகவியலாளரொருவரிடம் தெரிவித்திருந்தார்.

" ஜனாதிபதி மஹிந்த, தமக்கு எதிராக உருவாகும் தடைகளைத் தரைமட்டமாக்கப் பயன்படுத்தும் புல்டோசரால் சரத் பொன்சேகா நாசமுற நேர்ந்தது. பல்கலைக்கழகம் நலிவு கண்டது. பிரதம நீதியரசர் மட்டுமன்றி நீதித்துறையே நலிவுற்றது. தற்போது அடுத்து யாரை கட்டுப்படுத்தி நலிவுபடுத்தக் காத்திருக்கிறாரோ யாரறிவார்"

கேணல் ஹரிஹரனின் விமர்சனப்படி, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியுற வைக்க இந்தியாவும் அமெரிக்காவும் முயன்றால் அதன் பிரதிபலன் ஜனாதிபதி மஹிந்தவின் புல்டோசரில் அகப்பட்டு நெரிபட்டு இந்த நாட்டின் அப்பாவிப் பொது மக்களே வருந்த நேரிடும்.





இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கா குற்றம் சாட்டும்போது, 13 பிளஸ் குறித்து இந்தியா விமர்சிக்கும் போது, ஜனாதிபதி மஹிந்தவின் அரசோ, நாட்டுப்பற்று குறித்து 'பைலா' கீதம் இசைத்து வருகிறது.

## பொறுமை காத்த அமெரிக்காவும் இந்தியாவும்

சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூட இது குறித்து விமர்சித்து வருகின்றனர். அரசு மேற்கொள்ளும் தவறுகளுக்காக அப்பாவிப் பொது மக்களை வருத்துதக்கூடாதென்ற நிலைப்பாடு காரணமாகவே அமெரிக்காவும், இந்தியாவும் இதுவரை இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைப்பதைத் தவிர்த்து வந்தன. அது மட்டுமன்றி கடந்த மூன்று தசாப்த காலப் போரால் பாதிப்புக்குஉள்ளான நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவேண்டுமெனவும், அந்த நாடுகள் எண்ணின. பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளும் வேளை, இலங்கை அரசு கூடவே மனித உரிமைகளையும் மேம்படுத்த முயலும் என அந்த நாடுகள் எண்ணின. இலங்கைக்குக் கடனுதவி வழங்க வேண்டாம் என சர்வதேச நாணய நிதியத்தை, ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அழுத்தம் கொடுத்தவேளை, இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்கு ஆதரவாக பரிந்துரை செய்து கடனுதவி வழங்க வழி செய்தமையும் இதனாலேயே ஆகும்.

ஆனால் போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் கழிந்த போதிலும், இலங்கை அரசு தனது போக்கை மாற்றிக் கொள்ளாததால் மேற்கொண்டு இலங்கை அரசுக்கு வக்காலத்து வாங்க வேண்டியது அவசியமில்லையெனத் தற்போது அந்த நாடுகள் கருதுகின்றன.

எனவே தற்போது இலங்கை அரசின் பொருளாதாரத்தை சரிய வைத்து , நாட்டு மக்களை பசி பட்டினியால் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்து அரசை வழிக்குக் கொண்டு வர அமெரிக்காவும், இந்தியாவும் எண்ணுகின்றன போலும்.

கேணல் ஹரிஹரனின் கருத்து வெளிப்பாடும் இதனையே பூடகமாக வெளிப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

ஜனாதிபதியின் புல்டோசர் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்றல்ல. அது நாட்டு மக்களது வாக்குகள் என்ற எரிபொருளால் இயங்கும் ஒன்று. புல்டோசருக்கு எரிபொருள் வழங்குவோர் இந்த நாட்டின் பொது மக்களே. எரிபொருள் தீர்ந்து விட்டால் புல்டோசரின் சில்லுகள் அசையமாட்டா. நாட்டு மக்களின் கழுத்தைப் புல்டோசர் நெரிக்கும் நிலை ஏற்படும் போது , புல்டோசரைச் செயற்பட நாட்டு மக்கள் அனுமதிக்கப் போவதில்லை.

1977 ஆம் ஆண்டில் நாட்டு மக்கள் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் புல்டோசருக்குக் கழுத்தைக் கொடுத்து நிறுத்திய வேளையில் மஹிந்தவோ சமதர்மம் குறித்து பேசிக் கொண்டிருந்தார். " அரசுக்கு எதிரான சதிகாரர்கள் உள் நாட்டிலும் இருக்கக் கூடும். அவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க பிரதமர் பொறுப்பேற்க வேண்டும். அதற்காக நாட்டில் அவசரகால நிலையை பிரதமர் பிரகடனப்படுத்த வேண்டுமென நம்புகிறேன்." என 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 1976 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு மஹிந்த கருத்து வெளியிட்டிருந்தார்.

அன்று நாட்டின் சுபீட்சத்துக்காகச் செயற்படுவதாகக் கூறிக் கொண்டு நாட்டு மக்களது கழுத்தை புல்டோசரால் நசித்ததன் காரணமாக 1977 ஆம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக் கட்சி அரசு தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

இன்று வரலாறு மீண்டும் திரும்புகிறதா? என்பது குறித்து தற்போதுஞ்யும்கூறிவிட இயலாது.

ஆனாலும், ஏறக்குறைய ஒரு மாதத்தின் முன்னர் மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்ற அமைப்பு இலங்கை மக்களுக்கு கீழ்க்கண்டவாறான அபாய அறிவிப்பொன்றை விடுத்திருந்தது.

"தன்னிச்சைப்படி அதிகாரத்தைப் பயன்படுத்தும் ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்காதீர்கள். ஆட்சியாளர்களது தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச சமூகம் தண்டனை வழங்கத் தீர்மானிக்குமானால், அதனால் பாதிப்புக்கு உள்ளாகப் போவது ஆட்சியாளர்களல்ல, நாட்டின் பொது மக்களாகிய நீங்களே" அர்த்தமுள்ள இந்தக் கருத்து இன்றைய நிலையில் நாட்டு மக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதியின் விலை என்ன?

உடை வேண்டுமானால் அதற்கு ஒரு விலை கொடுத்து வாங்காமல் தங்க ஆபரணங்கள் அணிய விரும்பினால் அதற்கும் ஒரு விலை உண்டு. வீடு வாங்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும்.

இப்படிப் பௌதிகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் ஒரு விலை உண்டு. ஆனால் நிம்மதியை நீங்கள் விலை கொடுத்து வாங்க முடியாது. இங்கே விலை என்று சொல்வது கரன்சி நோட்டுக்களைக் குறிக்கும். கரன்சி நோட்டுக்களால் நீங்கள் எதையும் விலை கொடுத்து வாங்குவீர்கள். ஆனால் அமைதியை வாங்க முடியாது. நிம்மதியை வாங்க முடியாது. ஆனால் இந்த நிம்மதிக்கு ஒரு விலை உண்டு. அந்த விலை கரன்சி நோட்டுக்களல்ல. நற்செயல்கள் என்ற விலையைக் கொடுத்து நீங்கள் நிம்மதியை வாங்க முடியும்.

ஆம்...! எம்முடைய செயல்களின் காரணமாகவே எம்முடைய வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கிறது. அவன் மட்டும் ஏறி காரில் போகிறான். நான் வெயிலில் அலைகிறேன். கடவுள் இப்படிச் செய்யலாமா? என்று சிலர் கேட்கிறார்கள்.

அவன் பல அநியாய காரியங்களைச் செய்கிறான். நான் அப்படி எதுவும் செய்யவில்லை. ஆனால் அவனுக்குச் செல்வங்கள் குவிகின்றன. நான் வறுமையில் வாடுகிறேன். இது என்ன நியாயம்.கடவுளின் தீர்ப்பு இப்படியா இருக்கும்? இப்படிச் சிலர் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள். இந்தக் கேள்விகள் அனைத்தும் அறியாமை காரணமாகவே தொடுக்கப்படுகின்றன.

மனிதனின் ஆயுள் என்பது அதிக பட்சம் நூறுவயது. ஆனால் தங்கள் தவறான பழக்க வழக்கங்களால் மனிதர் அதனைக் குறைத்துக் கொள்கிறார்கள். இந்த நூறுவருடங்களில் இந்தப் பிரபஞ்சத்தின் இரகசியத்தை எவராலும் முழுமையாக அறிய முடியுமா...? சிந்தியுங்கள்! இந்த உலகம் என்பது பல கோடி காலங்களாக இயங்கி வருகிறது. அந்தக் காலகட்டங்களில் என்னென்ன நிகழ்ந்தன? எப்படியெல்லாம் மக்கள் வாழ்ந்தார்கள். இவை அனைத்தும் எமக்குத் தெரியாது. அப்படியிருக்க நூறு வருடங்களைக் கொண்ட இந்தக்குறுகிய வாழ்க்கையில் நாம் முழுமையாக எதையும் அறிய முடியாது. பல கோடி காலங்களில் உங்களுக்கு எத்தனை பிறவிகள் தோன்றின, நீங்கள் என்னென்ன செயல்களைச் செய்தீர்கள், இவையெல்லாம் உங்களுக்குத் தெரியாது. ஒரு விடயம் தெரியாது என்பதால் அந்தச் சம்பவங்கள் இல்லை என்று ஆகிவிடாது.

இரவில் நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன. ஆனால் பகலில் அவை எம் கண்களுக்குத் தெரிவதில்லை. பகலில் தெரியாததால் அந்த நட்சத்திரங்களே இல்லை என்று கூற முடியுமா? அதே போல் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதை உண்மை என்று நம்புகின்றோம். ஆனால் கடந்த காலங்களால் கணக்கற்ற பிறவிகள் உங்களுக்கு வந்திருக்கின்றன. அது மறைக்கப்பட்டிருகின்றது. உங்கள் நினைவிலிருந்து அது விலகியிருக்கிறது.

அப்படி விலகியிருப்பதாலே நீங்கள் பிறவிகள் எடுக்கவில்லை என்று சொல்ல முடியுமா? இந்த வினாக்களுக்கான விடைகளை யதார்த்தமாக நீங்கள் தெரிந்து கொண்டால் போதும் .நிம்மதியின் விலை என்ன? என்பதை நீங்களாகவே அறிந்து கொள்வீர்கள்.

கணக்கற்ற பிறவிகள் உங்களைக் கடந்து சென்றிருக்கின்றன. அந்தப் பிறவிகளில் செய்த செயல்களின் வடிவத்தையே நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் காணும் மனிதன் சொகுசு காரில் போகிறான் என்றால் அதற்குக் காரணம் உள்ளது. புண்ணியச் செயல்களை அவன் செய்திருக்கிறான். அதே மனிதன் மருத்துவ மனையில் நோயில் அவதியுறுகிறான் என்றால் அதற்கும் காரணம் உண்டு.

அதற்கான தீயவினைவுகளைக் கடந்த பிறவிகளில் அவன் செய்திருக்கிறான் என்பது பொருள். மிகப்பெரிய செல்வந்தனை நோய் வருத்துகிறது. செல்வம் இல்லாத வறுமையுடையவன் உடல் நலத்துடன் இருக்கிறான். இத்னை ஒப்பிட்டுப் பாருங்கள். உலக இரகசியம் கொஞ்சம் கொஞ்சமாக உயிர்களுக்குப் புரியும். கடவுள் கருணையே வடிவமானவர்.

அவருக்கு உயர்வு தாழ்வு என்ற பேதங்கள் எதுவும் கிடையாது. செல்வந்தன், பிச்சைக்காரன் என்ற வேறுபாடுகளை அவர் காண்பதில்லை. இங்கு வந்திருக்கும் எல்லோருமே நடிகர்கள் தான். அவரவர்களுக்கு ஒரு வேடம் கொடுக்கப்பட்டிருகிறது. அந்த வேடங்கள் கூடக் காரண காரியத்துடனே வந்திருக்கின்றன. முள் விதைகளை விதைத்தால் முள் செடிகள் வளருகின்றன. நெல் விதைகளை விதைத்தால் நெற் பயிர்கள் விளைகின்றன. இதுவே உண்மைத் தத்துவமாக உள்ளது.


ஒருவன் வங்கியில் 10 இலட்சம் ரூபாய் போட்டு வைக்கிறான். அவ்வப்போது அந்தப் பணத்தை எடுத்துத் தவறான செயல்களுக்குப் பயன்படுத்துகிறான். ஒரு கட்டத்தில் பணம் முழுவதும் முடிந்து விடுகிறது. அப்போது பணமின்றி நடுத்தெருவில் நிற்கிறான். அதே போல ஒருவன் செய்த புண்ணிய சேமிப்பு இருக்கும் வரை அவரைத் துன்பம் அணுகுவதில்லை. புண்ணியக் கணக்கு தீர்ந்து பாவக் கணக்கு மிகுதியானதும் துன்பங்கள் அவனைப் பற்றிக் கொள்கின்றன.

நிம்மதி பறி போகிறது. அவனுடைய முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போகின்றன. கைராசி என்று கூறுவது கூட இந்த அடிப் படையிலேயே வந்திருக்கின்றது. அந்த மனிதர் தொட்டதெல்லாம் பொன்னாகிறது என்று சொல்கிறோம். அதாவது புண்ணிய மனிதர் ஒருவர் எதைத் தொடங்கி வைத்தாலும் அது வெற்றியைத் தரும். ஆகவே எல்லாம் நம்முடைய செயல்களில் தான் அடங்கியிருக்கிறது.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# 191 ஆண்டு நிறைவைக் கொண்டாடிய பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை



**கர்ணன்**

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

1823 ஆம் ஆண்டு அருட்திரு தோமஸ் இந்தப் பாடசாலையோ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையாக மாற்றம் பெற்றது. இந்தப் பாடசாலையின் பெயர் மாற்றம் பெற்றது. எனினும் வடமராட்சி மக்களால் ஜீ.பி.எஸ் பாடசாலை என்று இன்றைய காலத்திலும் வடமராட்சி மக்களால் அழைக்கப்படுகின்றது.

1826 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த அருட்திரு பீற்றர் பேசிவல் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைக்கு திருப்பணியாளராக நியமிக்கப்பட்டார். அவர் தமிழ் மொழியில் மிகுந்த ஆற்றல் மிக்கவர். இவர் பருத்தித்துறையிலிருந்து 1829 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி எழுதியிருந்த கடிதம் ஒன்றில் பருத்தித்துறையைப் பற்றி புகழ்ந்து எழுதியுள்ளார்.

தமிழ் மொழியிலே அவருக்கு இருந்த திறமையையும், நற்செய்திப் பணியில் அவர் காட்டிய வாஞ்சையையும் கல்வியிலே அவர் காட்டிய ஆர்வத்தையும் அவரது கடிதங்கள் சுட்டிக் காட்டுபவையாக இருந்தன. தமிழிலே அவர் வரைந்த கடிதங்களுள் ஒன்றில் ''தமிழிலே போதிப்பது எனக்குக் கடினமாக இருக்கவில்லை. அதையிட்டு நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றேன். அதனை ஆண்டவர் எனக்குத் தந்துள்ள ஒரு வரமாகவே கருதுகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

> 1821 ஆம் ஆண்டு பருத்தித்துறை கடற்கரை ஓரப்பகுதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட வேளையில் கட்டைவேலிப் பகுதிகளில் இருந்து கொண்டே மெதடிஸ்த திருப் பணித் தூதுப் பணியாளர்கள் மெதடிஸ்த திருப்பணிகளை மேற் கொண்டனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்துக்கு அருகில் 1834 ஆம் ஆண்டு அருட்திரு பீற்றர் பேசிவல் வெஸ்கா மிஷன் ஆங்கிலப்பாடசாலை என்ற பெயரில் ஆண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். இந்தப் பாடசாலையே பின்னர் ஹாட்லிக் கல்லூரியாகப் பெயர் மாற்றம் பெற்று இப்போது முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

1821 ஆம் ஆண்டு பருத்தித்துறை கடற்கரை ஓரப்பகுதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட வேளையில் கட்டைவேலிப் பகுதிகளில் இருந்து கொண்டே மெதடிஸ்த திருப்பணித் தூதுப் பணியாளர்கள் மெதடிஸ்த திருப்பணிகளை மேற்கொண்டனர். இதனைப் போல அங்கும் ஒரு மெதடிஸ்த தேவாலயம் ஆரம்பிக்கப்பட்டது. பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயம் கட்டை வேலி மெதடிஸ்த தேவாலயம் ஆகிய இரண்டையும் இணைத்து பருத்தித்துறை கட்டை வேலி சேகரம் உருவானது. இந்த சேகரத்தின் தலைமையகமாகக் கட்டை வேலி மெதடிஸ்த தேவாலயம் விளங்கிய போதிலும் பருத்தித்துறையிலேயே மெதடிஸ்த திருப்பணி விஸ்தரிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் இருந்த கட்டை வேலி பருத்தித்துறை உடுப்பிட்டி ஆகிய மூன்று வடமராட்சிப்பிரிவு கோயில் பற்றுக்களில் பருத்தித்துறை கட்டை வேலிப் பிரிவுகளிலேயே மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. உடுப்பிட்டி கோவில்பற்றில் மெதடிஸ்த திருப்பணிகளை முன்னெடுப்பதில் மெதடிஸ்த திருச்சபை ஆர்வம் காட்டாதது ஏனோ என்று தெரியவில்லை.

1834 ஆம் ஆண்டில் அருட்திரு ஜோசப் பொட் என்பவர் பருத்தித்துறை மிஷனுக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு தர்மகர்த்தாவாக மெதடிஸ்த திருச்சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் திருச்சபையின் முதலாவது குருவாக அருட்திரு றொபேட் காவர் 1821 ஆம் ஆண்டு தொடக்கம் 1812 ஆம் ஆண்டு வரையும் அருட்பணியாற்றினார். இதனைத் தொடர்ந்து 1873 ஆம் ஆண்டு தொடக்கம் 1825 ஆம் ஆண்டு வரைஅருட்திரு ஜோசப்பொட்டும் 1826 ஆம் ஆண்டு தொடக்கம் 1830 ஆம் ஆண்டு வரை அருட்திரு பீட்டர் பெர்சிவலும் 1830 தொடக்கம் 1834 ஆம் ஆண்டு வரை அருட்திரு ரால்ப் ஸ்ருட்டும் 1835 ஆண்டு தொடக்கம் 1841 ஆம் ஆண்டு வரை அருட்திரு ஜோன் ஜோர்ஜும் 1842 ஆம் ஆண்டு தொடக்கம் 1847 ஆம் ஆண்டு வரை அருட்திரு ஜே.பி.சண்முகம் ஆகியோரும் குருவானவர்களாகப் பணியாற்றி மெதடிஸ்த மிஷனை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி மிஷன் திருச்சபையை வளர்க்கத் தொடங் கினார்கள்.

1836 ஆம் ஆண்டு பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையில் தமிழ் கிறிஸ்தவர்கள் 27 பேரும், ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் கிறிஸ்தவர்கள் 44 பேரும், ஆங்கிலேயக் கிறிஸ்தவர்கள் 12 பேருமாக மொத்தம் 83 அங்கத்தவர்கள் மட்டுமே இருந்து வந்தார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## ஐ.தே.க.பொதுச் செயலர் சொல்கிறார்



கொழும்பு,ஜன.30

ஐக்கிய தேசிய கட்சி எடுக்கும் முடிவுகள், தீர்மானங்களுக்கு கட்சியின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால செயற்றிட்டங்கள் குறித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறிகொத்தாவில் பேச்சு இடம் பெற்றது.

இந்தப் பேச்சில் ஐ.தே.க. முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்து கொண்டார்.

ஐ.தே.க. எடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஏக மனதாக சம்மதித்தனர்.

இதேவேளை, குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு கருத்து வெளியிட மேலும் இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இந்த நடவடிக்கை குறித்த உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமையவே எடுக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# 52,000 பட்டதாரிகளுக்கு பெப்ரவரியில் நியமனம்

## பொய்ப் பிரசாரம் பயனற்றது என்கிறார் ஜோன் செனவிரத்ன



கொழும்பு,ஜன.30

அரசு வாக்குறுதி அளித்தபடி 52,000 பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் பெப்ரவரியில் வழங்கப்படும்.

இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

அண்மையில் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிகழ்வை பல்வேறு தரப்பினர் விமர்சித்து வருகின்றமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ. தே. க. மற்றும் ஜே. வி.பியினரின் பொய்ப் பிரசாரங்கள் பயனற்றவை. கடந்த பெப்ரவரியில் ஆரம்பித்த பட்டதாரிகள் நிரந்தர நியமனத்துக்கான நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முழுமையாக நிறைவுபெறும்.

பயிலுநர் பட்டதாரிகளான 52,000 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் உறுதியான வேலைத் திட்டம் அரசிடம் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே. வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

அண்மையில் சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற பட்டதாரிகள் சங்க நிகழ்வில் ஜனாதிபதியால் மூவருக்கு மட்டுமே நிரந்தர நியமனங்களுக்கான கடிதங்கள் வழங்கப்பட்டன. அது ஒரு அடையாளமாகவே வழங்கப்பட்டது. அது நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தின் ஆரம்பம். ஏனையோருக்கு எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதிக்குள் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

52,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிந்தனையில் உதித்த திட்டமாகும். யார் எத்தகைய பிரசாரங்களை முன்னெடுத்தாலும் அரசு அதனை நிறைவேற்றும்.-என்றார். (ச)

## மாவட்டங்களில் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள்

கொழும்பு,ஜன.30

நாடு தழுவிய அளவில் மாவட்டங்கள் தோறும் 25 தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்கான அவசர நடவடிக்கையை இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும எடுத்துள்ளார்.

இந்தத் திட்டம் சீன அரசின் உதவியுடன் முன்னகர்த்தப்படவுள்ளது.

சீன அரசு இதற்கென 560 பில்லியன் ரூபாவை முதற் கட்டமாக ஒப்பந்தத்தின் கீழ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு நகரத்தை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், பஸ்ரியன் மாவத்தை பகுதியிலுள்ள கடைகள் மற்றும் அவற்றோடு இணைந்த வீடுகள் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அகற்றப்பட்டன.

# கொம்பனி வீதி மக்கள் வெளியேற வேண்டும்

## கோத்தபாய உத்தரவு



கொழும்பு,ஜன.30

கொழும்பு கொம்பனி வீதி மக்கள் அரசின் அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைய வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்படுவர்.

இவ்வாறு பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் அந்தப் பிரதேசமக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம் பெற்ற சந்திப்பின் போது இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொம்பனி வீதி மக்கள் தமது யோசனைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால், சட்டவிரோத குடியிருப்புகள் என்ற அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோத்தபாய எச்சரித்துள்ளார்.

கொழும்பு நகரை அலங்கரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கொம்பனி வீதியில் உள்ள 500 குடும்பங்களை வேறு இடங்களுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

வீடுகளை விட்டு வெளியேறுவதற்காக அரசு அளித்த நான்கு யோசனைகளை தாம் நிராகரித்தமையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கொம்பனி வீதி மக்கள் தெரிவித்தனர். (ச)

# இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே அரசினுடைய நோக்கம்

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்



கொழும்பு,ஜன.30

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும் என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர்இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் கலந்து பாடுவதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையில் சகோதரத்துவம் மலரும். கனடா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பல மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது.

தேசிய இனப் பிரச்சினை ஏற்படுவதற்கான முக்கிய பிரச்சினைகளில் மொழிப் பிரச்சினையும் ஒன்றாகும்.

நாட்டு மக்களிடையே நிலவிவரும் வகுப்புவாத இடைவெளியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டின் சகல இன மக்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமானது.

தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் கலந்து இசைக்கப்பட வேண்டும் என்ற யோசனைக்கு பௌத்த பிக்குகளில் ஒரு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எந்தவொரு தரப்பினரும் கடும்போக்குடன் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.-என்றார். (ச)

## இரு மீனவர் குழுக்களுக்கு இடையே மோதல்

கொழும்பு,ஜன.30

கற்பிட்டி, முகத்துவாரம் மீனவர் கிராமத்தில் கடலில் மீன்பிடிப்பதற்கு எல்லைகளை வரையறுப்பதில் இரு மீனவக் குழுக்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலை மோதலாக வெடித்துள்ளது.

பொல்லு, கத்திகள் சகிதம் இரு குழுவினரும் மோதிக் கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஏனையவர்கள் தலை மறைவாகிவிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# வைத்தியர்களின் கவனவீனத்தாலேயே சட்டபீட மாணவியின் கை பறிபோனது

## முதற்கட்ட விசாரணைகளின்போது அம்பலம்

கொழும்பு,ஜன.30

வீட்டுப் படிக்கட்டில் தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட யுவதிக்குச் சிகிச்சையின் பின்னர் கை அகற்றப்பட்டமைக்கு மாத்தறை பொது வைத்தியசாலை வைத்தியர்களின் கவனயீனமே காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீட இறுதியாண்டில் கல்வி பயிலும் குறித்த மாணவி, வீட்டுப் படிக்கட்டில் தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவரது கை வெட்டி அகற்றப்பட்டுள்ளது. மாணவிக்கு நேர்ந்த இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு விசேட குழு ஒன்றை சுகாதார அமைச்சு அமைத்தது.

மாத்தறை வைத்தியசாலையில் நீண்ட நாள்களாக மாணவி தங்கவைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று அக்குழு தெரிவித்துள்ளது. இந்தநிலையில், கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மாணவிக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியர்கள் அவரது கையை அகற்றுவதைத் தவிர, வேறு வழியில்லை எனத் தீர்மானித்ததாக அந்த விசாரணையில் தெரியவந்துள்ளது. இதேவேளை, பாதிக்கப்பட்ட மாணவியைப் பார்ப்பதற்காகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார்.

அங்கு மாணவிக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த சகல விடயங்களையும் கேட்டறிந்துகொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

# காட்டுவாசிகளின் மொழியிலும் தேசிய கீதத்தைப் பாட நேரிடும்

## எவரும் நினைத்த மாதிரி மாற்ற முடியாது என்கிறார் மேதானந்ததேரர்

கொழும்பு,ஜன.30

எதிர்காலத்தில் காட்டுவாசிகளின் மொழியிலும் தேசிய கீதம் பாட நேரிடும் என்று எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நினைத்த மாதிரி தேசிய கீதத்தில் புதிய மொழிகளை இணைக்கக் கூடாது.

தேசிய கீதத்தில் தமிழ் மொழியை இணைக்க வேண்டும் என்ற யோசனையை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டாலும் ஒரே மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்றது.

எந்தவொரு நாட்டிலும் தேசிய கீதம் பிரதான மொழியில் பாடப்படுவது வழமையாகும். பல இன மக்கள் வாழ்கின்றார்கள் என்பதற்காக தேசிய கீதத்தை பல மொழிகளில் பாடினால் அது குழப்பமாகிவிடும். தமிழ் மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கவும் இல்லை.

இவ்வாறு தமிழ்மொழி தேசிய கீதத்தில் இணைக்கப்பட்டால், எதிர்காலத்தில் காட்டு மொழிகளையும் இணைக்க நேரிடும். வடக்கு, கிழக்கில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில், சிங்கள மொழி இணைக்கப்பட வேண்டும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதிற்குப்பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மிதுனம்:** நீங்கள் முன்புசெய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப் படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**கடகம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**சிங்கம்:** இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படுங்கள். தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியை கலந்தாலோசித்து முடிவெடுங்கள்.

**கன்னி:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போங்கள்.

**நாளை**

தை -18 வியாழக்கிழமை 31.01.2013
திதி: சதுர்த்தி மு.ப 11.06 வரை
நட்சத்திரம்: உத்தரம் மரண மு.இ 07.11 வரை
சுபநேரம்: 08.06- 09.36 வரை
ராகுகாலம்: 02.06- 03.36 வரை

**துலாம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தினருடன் இருந்துவந்த கசப்புணர்வு நீங்கும். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**தனுசு:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**மகரம்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும். விருந்தினர்களின் வருகையுண்டு.

**மீனம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 8 | | |
| | 5 | 3 | 6 | 2 | | | | |
| | | | 3 | | 8 | | 6 | 2 |
| 2 | | | 1 | 7 | | | | |
| 9 | 6 | 5 | | | | 1 | 7 | 8 |
| | | | | 8 | 6 | | | 3 |
| 3 | 1 | | 8 | | 2 | | | 5 |
| | | | | 9 | 3 | 7 | 2 | |
| | | 9 | 7 | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 6 | 3 | 5 | 8 | 7 | 1 | 2 |
| 3 | 2 | 5 | 7 | 1 | 4 | 9 | 8 | 6 |
| 1 | 8 | 7 | 2 | 6 | 9 | 3 | 4 | 5 |
| 7 | 1 | 3 | 5 | 4 | 6 | 2 | 9 | 8 |
| 9 | 5 | 8 | 1 | 7 | 2 | 4 | 6 | 3 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 3 | 1 | 5 | 7 |
| 8 | 7 | 1 | 4 | 2 | 5 | 6 | 3 | 9 |
| 2 | 6 | 9 | 8 | 3 | 1 | 5 | 7 | 4 |
| 5 | 3 | 4 | 6 | 9 | 7 | 8 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.05.1980

ஆண்டவன் அடியில்
17.12.2012

**அமரர் யோகராசா டிலாகரன்**

திதி: 30.01.2013

நித்திய புன்னகை அழகனாய் இருந்து எம்மோடு இன்முகம் காட்டி இன்சொல் பேசி எம் குடும்பத்தில் மூத்த ஆசானாய் இருந்து எம் உயிராய் இருந்தாய் அண்ணா என்றும் எம்முடனே நீ இருப்பாய்.

அன்னாரின் 45 ஆம் நாள் நினைவையொட்டி அன்னாரது வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

300, வீட்டுத்திட்டம், நாவற்குழி. (28874)(6.11) குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**தம்பியப்பா சிவகுமார்**



மலர்வு
31.06.1976

உதிர்வு
12.02.2009

சிவா ஐயா நான்காண்டுகள் கடந்தாலும்
நாற்பதாண்டுகள் கடந்தாலும் உன் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டகலாது ஐயா.
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.
உன் பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா, பிள்ளைகள், அத்தான்மார், அக்காமார், அண்ணன்மார், அண்ணிமார், மைத்துனன்மார், தங்கைமார், தம்பிமார், மச்சாள்மார், மருமக்கள்மார், உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும்.
ஓம் சாந்தி!

154 ஆம் கட்டை, இந்துபுரம்,
முறிகண்டி.

குடும்பத்தினர்.

## வான் விற்பனைக்கு

Town Ace 250 - xxxx தொடர் இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779473891 (27719)(2.6)

## ஒக்ட பாட் விற்பனைக்கு PAD

நல்ல நிலையில் உள்ள ROLAND SPD 20 ஒக்டபாட் விற்பனைக்குள்ளது. (ஒரிஜினல் ஜப்பான்) உடன் தொடர்பு கொள்ளவும்.

விலை ரூபா 1,05,000/=

T.P:0776980573. (28593)(6.7.4)

## விற்பனைக்கு

இலகுவழி ஆங்கில இலக்கணம் பிரபல ஆசிரியர் K.கரன் என்பவரால் வெளியிடப்பட்டு இன்று முதல் சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். (கையிருப்பில் உள்ளவரை மட்டும்)

தொடர்பு: 077 1372280 (28813)(5-6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978, புனர்பூசம் 2ஆம் பாதம், 8 இல் செவ்வாய், மொத்த கிரகபாவம் 61, பிரான்ஸ் PR உள்ள அழகிய மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.:4436
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (28815)(5-6)

## வேலையாள்கள்

தாவடியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சமையல், பரிமாறல் உட்பட அனைத்து வேலைகளுக்கும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

நேரில் சந்திக்கவும்

இடம் 325, K.K.S வீதி, தாவடிச்சந்தி
(CB கொம்பியூட்டர் கட்டடம்)
காலம் 01.02.2013
மு.ப 10.00 மணிக்கு
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 0779790899 (28777)(6.11)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**இரத்தினம் ஸ்ரீதரன்**



தோற்றம்
1968.04.14

மறைவு
2011.01.23

திதி:- சங்கடகரசதுர்த்தி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்
மதிவதனி – அக்கா
நிஷாந்தன் – பெறாமகன்.
செட்டியார்வளவு,
சுன்னாகம்.

Ministry of Culture and the Arts Sri Lanka

सत्यमेव जयते

Indian Council for Cultural Relations New Delhi

இந்திய அரசின் 64ஆவது குடியரசுதினத்தை முன்னிட்டு
இந்திய துணைத்தூதரகம், யாழ்ப்பாணம்,
இலங்கை கலை, கலாசார அமைச்சின்
அனுசரணையுடன் நடத்தும்

திரு. R. இராமச்சந்திரன் நாயர் அவர்கள்
மாதயமடம் C.V.N. களரிச்சங்கத்துடன்
இணைந்து வழங்கும்

## களரிப் பயற்று

(தற்காப்புக்கலை, கேரளா)

நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம் : வீரசிங்கம் மண்டபம்
காலம் : 31/01/2013 , வியாழக்கிழமை
மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை
அனுமதி : இலவசம்

மேலதிக தொடர்புகளுக்கு: 0212220604/5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும்

## ஹற்றன் கல்வி வலய ஆசிரியர்கள் வேண்டுகோள்

ஹற்றன்,ஜன.30

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்னோயா கணேஷா வித்தியாலய ஆசிரியர்கள் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதற்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு அவர்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு சுமார் 15 ஆசிரியர்கள் ஹற்றன் பகுதியில் இருந்து பயணம் செய்து கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பாடசாலைக்குச் செல்வதற்கு போக்குவரத்து பிரச்சினை காணப்படுவதால் ஆசிரியர்கள் தாமதித்தே பாடசாலைக்கு செல்லும் நிலைமை ஏற்படுகிறது.

இந்த வீதியில் பயணிக்கும் தனியார் போக்குவரத்து பஸ் 9 மணிக்குப் பின்பே குறித்த பாடசாலை பிரதேசத்தை அடைவதால் தினமும் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருகின்றன என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.


எனவே போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு ஆசிரியர்கள் இணைந்து தனியார் வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி குறித்த நேரத்துக்கு பாடசாலைக்கு சமுகமளிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். அதனால் கல்வி நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் தற்போது அந்த வீதியில் சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் வாகனத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறித்த நேரத்துக்கு பாடசாலைக்கு செல்ல முடியாத நிலையை எதிர் கொண்டுள்ளனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

எனவே உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு சமுகமளிப்பதற்கு ஏற்றவாறு போக்குவரத்து வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருமாறு கணேஷா வித்தியாலயத்தின் அதிபர் வட்டவளை பொலிஸ் நிலையத்துக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## 'இடம்பெயர்ந்த' நினைவு நிகழ்வு...



கொக்கட்டிச்சோலை படுகொலை தினம் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றபோது உயிரிழந்தவர்களின் உறவுகள் கண்ணீர் வடிக்கின்றனர். இந்த நினைவுதினம் கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இறுதித் தருணத்தில் குறித்த மண்டபத்தில் நினைவுதினத்தைக் கொண்டாட முடியாதெனத் தெரிவித்து பொலிஸார் மண்டபத்தைப் பூட்டித் திறப்பையும் எடுத்துச் சென்றனர். அரசுக்குச் சொந்தமான இந்த மண்டபத்தில் நிகழ்வை நடத்தமுடியாதென மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (31)

# ஜனாதிபதியின் வருகை குறித்து ஆராய்ந்தார் உயர்கல்வி அமைச்சர்



அம்பாறை,ஜன.30

கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்று ஜனாதிபதியின் பயணம் குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விஞ்ஞான பீடத்துக்கான கட்டடம், மற்றும் பார்வையாளர் மண்டபம் என்பன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் 5 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காகவே உயர்கல்வி அமைச்சர் கிழக்கு பல்கலைக்குச் சென்றுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கிட்ணன் கோவிந்தராஜா, கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதிகள், பல்கலைக்கழக அதிகாரிகள், பாதுகாப்புப்படை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# அம்பாறை மாவட்டத்தில் இன்றும் படுகொலைகள்

## நினைவுதினத்தைக்கூட கொண்டாட முடியாத நிலை என்கிறார் இராஜேஸ்வரன்



எருவில்,ஜன.30

அம்பாறை மாவட்டத்தில் இன்றும் படுகொலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். அதனால் தமிழ் மக்கள் மிகுந்த அச்ச உணர்வுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கொக்கட்டிச்சோலை படுகொலை தினம் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றிலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்களின் படுகொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

தமிழ் மக்களுக்குத்தான் இந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை நினைத்து பிரார்த்தனை செய்யக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. ஆனாலும் நாம் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றிலில் படுகொலை தினத்தை அனுஷ்டிக்கிறோம்.

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடத்துவதற்கு எமக்கு அனுக்கிரகம் கிடைத்திருக்கின்றதென்றால் அது ஆண்டவனின் கொடையே ஆகும்.

எமக்கு எதிராக இருக்கின்ற சக்திகளுக்கு இறைவனே தண்டனை கொடுக்க வேண்டிய காலகட்டத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சூழலில் பெண்கள் வெளியே வர அஞ்சுகின்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

26 வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற படுகொலைகளைக் கூட நினைவு கூர முடியாத நிலையை இன்றைய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இறந்தவர்களுக்கான கடமைகளைச் செய்யுங்கள் என்று சகல சமயங்களும் சொல்கின்றன. ஆனால் அதைக் கூட அரசு தடுக்கின்றது. அது அரசுக்கான ஒரு பின்னடைவையே காட்டுகிறது.

அந்தவகையில் அகிம்சை வழியில் வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலத்தைப் பெற்றுக் கொள்ள ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.- என்றார். (ச-31)

# முஸ்லிம் மக்கள் தொடர்ந்து பொறுமை காக்க முடியாது

## அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கருத்து

அட்டாளைச்சேனை, ஜன.30

இன்று நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், இஸ்லாத்தை நையாண்டி செய்யும் நடவடிக்கைகளும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. எந்த இஸ்லாமியராலும் அதனைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேசசபை உறுப்பினர் எஸ்.எல்.முனாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்கள் இன்று அனைவரையும் அரவணைத்து ஒற்றுமையாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ் வாறான நிலையில் திடீரென நாட்டில் ஏற்பட்டிருக்கும் விஷமப் பிரசாரமும், நடவடிக்கைகளும் அனைத்து முஸ்லிம் களையும் மெய்சிலிர்க்க வைத்திருக்கின்றன.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடக்கு மானால் பொறுத்துக் கொண்டு இருப்பதற்கு முஸ்லிம்கள் கோழைகள் அல்லர்.

அன்புக்கு அடிமையாக இருக்கும் அவர்கள் அராஜகத்துக்கு பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளனர். எனவே, இந்த நாட்டில் பொதுபல சேனா என்னும் அமைப்புக்கு வந்திருக்கும் சீற்றத்துக்கு முஸ்லிம்கள் பலியாக முடியாது. அவர்களின் சீற்றத்தை யாரிடமாவது காட்டட்டும். முஸ்லிம்களின் வியாபார நிலையங்களுக்குள் புகுந்து காடைத்தனம் புரிவதற்கும், பள்ளிவாசல்களைத் தாக்குவதற்கும் அவர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்?

அந்த அமைப்பினர் எங்கிருந்து வந்தார்கள்? திடீரென முளைத்த விஷச் செடியாக இயங்கிக்கொண்டிருக்கும் அவர்களின் செயலை முஸ்லிம்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.-என்றார்.

# மாத்தளை மாவட்டத்தில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகள்

மாத்தளை,ஜன.30

மாத்தளை, இரத்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்டு குடியிருப்புகளை இழந்த குடும்பங்களுக்கு புதிதாக வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்.

இவ்வாறு காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

இவர்களுக்கான காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மாத்தளை மாவட்டத்தில் மண் சரிவு, வெள்ளப் பெருக்கு, மண்திட்டு சரிந்து விழுதல் போன்ற பல்வேறு இடர்களால் குடியிருப்புகளை இழந்து பல குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து அமைச்சர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடலின்போது அமைச்சர் இந்த வாக்குறுதியை அளித்துள்ளார். (ச)

# இந்தியப் பிரஜைக்கு 5000 ரூபா அபராதம்

மட்டக்களப்பு,ஜன.30

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து தொழில் புரிந்த இந்தியப் பிரஜை ஒருவர் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல் இயந்திரம் ஒன்றை இயக்கிக் கொண்டிருந்த வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவருக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொது நூலகர் இ.தர்மலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி இளையதம்பி இலட்சுமி**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், உத்தியோகத்தர்கள்.
சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரிசங்கம்.

(தி/28893)(5-6)

## கல்வி ஆண்டு 2013

### விண்ணப்பம் கோரல்

சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்

(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS –U.K (சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம்)இன் கற்கை நெறியை யாழ்நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

K-AIMS ஆனது 2012ம் ஆண்டு தனது யாழ்நகர கிளையை ஆரம்பித்தது முதல் தனது இரண்டாவது பிரிவு மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்துள்ளது. இவ்விண்ணப்பக் கோரலானது மூன்றாம் பிரிவுக்கானது. வகுப்புக்கள் FEBRUARY 5ம் திகதி முதல் ஆரம்பமாகும்.

ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளை கொண்டது.

1. DIPLOMA - 6 மாதம்
2. DEGREE - ஒருவருடம்
3. ACCA - ஒருவருடம்.

* O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்

* HNDA, யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 31 JANUARY 2013

மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும்
**0772 555 814**

| Colombo | JAFFNA |
|---|---|
| Level 4 | 3 -1/2 |
| Access Towers | Sirambiyadi Lane |
| 278, Union Place | [ Off Stanly Road] |
| Colombo 02 | Jaffna |

முறைப்பாடுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் 0771065363

(28779)(2.6)

## 3 ஆம் ஆண்டு நினைவுத்தூவல்



தோற்றம் 05.11.1948

மறைவு 03.02.2010

அமரர் **கார்த்திகேசு, சிவபாலன்**

திதி: சதுர்த்தி (30.01.2013)

அன்பினிலே தெய்வமாக, அறிவதனில் ஆசானாகப்
பண்புடனே எமை வளர்த்துப்பாசப் பிணைப்புடனே
பார் புகழ நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இன்பமாக வாழ்க்கையில் இறையடி சேர்ந்தாயே
என்றும் நாம் மறவோம் – நெஞ்சிருக்கும் வரை
உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.

கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு. (28784)(6.11) குடும்பத்தினர்.

## விபத்தில் முதியவர் காயம்

வலி வடக்கு, ஜன.30

புன்னாலைக்கட்டுவன் சுன்னாகம் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் சைக்கிளில் சென்ற ஒருவர் படுகாயமுற்றதுடன் வாகனமும் மின் கம்பத்துடன் மோதி சேதத்துக்குள்ளாகியது.

நேற்றுமுன்தினம் நண்பகல் சுன்னாகம் றொட்டியாலடி மயானத்துக்கு அண்மையாக வடி வாகனமும் சைக்கிளும் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு தைப் பூச உற்சவத்துக்குச் சென்ற அடியவர்களை ஏற்றிச் சென்ற வடி வாகனத்துக்கு முன்பாக சையிக்கிளில் சென்று கொண்டு இருந்தவர் திடீரென சைக்கிளை திருப்ப முற்பட்டதால் குறித்த விபத்து இடம் பெற்றது.

காயப்பட்ட முதியவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். விபத்துக் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

## வாடகைக்கு வீடு தேவை

இரு வெளிநாட்டவர்கள் (Foreign Professinals)
யாழ்ப்பாணத்தில் நீண்ட கால திட்டம் ஒன்றை
யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு
வசதியாக இரண்டு அறைகளுடன், வீட்டுத்தோட்ட
வசதியும் கொண்ட வீடு ஒன்றை நல்லூர் அல்லது
யாழ்ப்பாணத்தில் நீண்டகால வாடகைக்குத் தேடுகின்றனர்.
தயவு செய்து ஆங்கிலத்தில் மட்டும் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 2271 389

(28878)(45.6)

## பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் வட்டுக்கோட்டை
## வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் பொதுக்கூட்டம் 08.02.2013 வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் து.வாமதேவன் அவர்கள் தலைமையில் வைத்தியசாலையில் நடைபெறும். எனவே சகல நலன்விரும்பிகளையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தலைவர், (28788)(5-6) செயலாளர்.

## தவறிவிட்டது

பத்மநாதன் பிரதாப் என்பவருடைய தே.அ.அட்டை (930501883V) 19.01.2013 அன்று கோப்பாய்க்கும் மருதனார் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0771317800

(28781)(2.6)

## வீடு விற்பனைக்கு

வேலணை மேற்கில் 20 பரப்பு காணியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :077 194 3054

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 175/4 இலக்க கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 3225

(28783)(5-6)

## லொறி விற்பனைக்கு

LE-xxxx தொடர் இலக்கமுடைய Ten weel லேலன் லொறி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 953 0929

(28789)(5-6)

## ICT வகுப்புக்கள்

(தனிப்பட்ட அல்லது குழு வகுப்புக்கள்)

தரம் 10, O/L (ICT) மற்றும் A/L மாணவர்களுக்கான GIT வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த கணனிப் பட்டதாரி ஆசிரியர்களால் உங்கள் வீடுகளில் வந்து குழுவாகவோ, தனிப்பட்ட ரீதியிலோ கற்பிக்கப்படும்.

**0711543192, 0772543989**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவைபரீட்சையில் சித்தி பெற்று பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக பதவியேற்றுள்ள,


**சிவசம்பு மதியழகன்**
(B.com.Hons,Dip.in.Edu (merit),SLEASIII)

அவர்களை மேன்மேலும் பதவிஉயர்சிகள்பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

முல்லைமாறன் குடும்பம்
குகதாஸ் குடும்பம்
அன்பழகன் குடும்பம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## இதய அஞ்சலி



எமது கல்லூரியின் மாணவன்

**தவராசா டினோசன்**

28.01.2013 அன்று மரணம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு எமது கல்லூரிச் சமூகத்தவர்கள் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.

(ம/6096)(6.11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1936.07.20

மறைவு 2012.12.31


அமரர்
**செல்லம்மா சண்முகநாதன்**

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உடன் நேரில் வந் தோர்க்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் நினைவில்
பிள்ளைகள்.மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

களபூமி, காரைநகர்.




பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வாராந்த டெங்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.30

வாராந்த டெங்கு முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும். இதில் கிராம அலுவலர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு டெங்கு நோய் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஆராயவுள்ளனர். (3-7)

## மீள் நடுகையாகிறது வெங்காயப் பயிர்

வடமராட்சி, ஜன.30

புலோலி மேற்கு, புலோலி மத்தி ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டங்களில் வெங்காயப் பயிர் மீள் நடுகை செய்யப்பட்டு வருகின்றது

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து இந்தப் பகுதியில் உள்ள பல ஏக்கர் தோட்டங்களில் விளைந்து வந்த வெங்காயப் பயிர் முற்றாக அழிந்து நாசமாகி இருந்தது.

நாசமடைந்த பயிர்களை அப்புறப்படுத்தி மீளவும் வெங்காயப் பயிரை விவசாயிகள் நடுகை செய்யத் தொடங்கியுள்ளனர். (3-8)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன.30

நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழுள்ள நாற்பது மாணவர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படும்எனத் தெரிவிக்கப்பட்டது. (3-7)

# குப்பைகள் கொட்ட இடமில்லை கடற்கரையில் அவை எரிப்பு

### துன்னாலைக் காணியை பயன்படுத்த அனுமதி கேட்கிறது பருத்தித்துறை நகரசபை

வடமராட்சி, ஜன.30

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் கடற்கரை ஓரங்களில் கொட்டப்பட்டு உடனுக்குடன் எரிக்கப்பட்டு வருகின்றன.

குப்பை கூளங்களை கொட்டுவதற்குப் போதிய இடமின்மையால் இவ்வாறான நடவடிக்கையை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையினால் குப்பை கூளங்களைக் கொட்டி எரிப்பதற்கென குத்தகைக்குப் பெறப்பட்ட துன்னாலையில் உள்ள காணியைப் பயன்படுத்த பருத்தித்துறைப் பிரதேச சபை அனுமதி வழங்க மறுத்துள்ளது. அந்த நிலையில், மீண்டும் ஒருமுறை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அனுமதியைப் பெற்றுக்கொள்ள பருத்தித்துறை நகர சபை தொடர்ந்தும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. (3-8)

## மீண்டும் தாக்கப்படும் தமிழக மீனவர்கள்

சென்னை, ஜன.30

கச்சதீவுக்கு அருகே மீன் பிடித்த தமிழக மீனவர்கள் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளதாக மீனவர்கள் முறையிட்டுள்ளனர் என்று தமிழக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொண்டி அருகே நம்புதாளை மீனவர்கள், தொண்டி கடலில் மீன்பாடு குறைவாக இருப்பதால், கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் சென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கை கடற்படையினர் மீனவர்களைத் தாக்கி, மீன்களை கடலில் வீசி எறிந்தனர்.

சம்பவம் தொடர்பாகத் தொண்டி மீனவர்கள் கூறியதாவது:

இந்தியக் கடல் எல்லைக்குள், இலங்கைக் கடற்படையினர் அத்துமீறி நுழைந்து அடாவடிச் செயலில் ஈடுபடுகின்றனர். நாங்கள் பிடிக்கும் பல லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்களைப் பறித்து கடலில் வீசி நஷ்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

டீசல் செலவும் வீணாகி, வெறுங்கையுடன் திரும்புவதால், எமது அன்றாட செலவுகளுக்கு மேலும் கடன் வாங்கி தத்தளித்து வருகிறோம். இலங்கை கடற்படையினர் தாக்குவதை தடுக்க, மத்திய அரசு, நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர். (3)

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் மாலுசந்தி முதல் மடத்தடி வரையான பிரதேசம், கம்பர்மலைப் பிரதேசம், வடமராட்சி கிழக்கு, நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டியின் ஒரு பகுதி, தொண்டமானாறு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும்-

நாளை வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர் கடைப் பிரதேசம், நயினா தீவுப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களிலும்-

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் நயினாதீவுப் பிரதேசம் முழுவதும், அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேசங்கள், அராலி மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உரும்பிராய், ஊரெழுப் பிரதேசத்தின் இரு பகுதி, ஆகிய இடங்களிலும்-

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

## மெய்வன்மைப் போட்டி

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் சு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.


நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா நகரக் கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி. நடராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.எம்.சுபைர், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஜெகநாதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் இ.யூட் பரதமாறன், நெளுக்குளம் கிராம அலுவலர் க.அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(3-402)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, ஜன.30

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (3-9)


## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையின் தமிழ் ஆசிரியை
திருமதி சாரதா ஜீவானந்தம் அவர்களின் அன்புத் தந்தை
சின்னையா துரைராசா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ குளமங்கால் றோ.க.வி. மல்லாகம்.
(28782)(45.6)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கில்
றோ.க.த.க.பாடசாலைக்கு அருகில்
6 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0778297262, 021 205 6029
(சி/6095)(2.8)

## FULL BODY BRAND NEW LORRIES FOR SALE



Brand New full Alum Body
Make: TATA 713S Agent Maintained
Lease can be arranged
Inspection by appointment
SAM Mob: 0773 879378
Email: lorrysale@gmail.com
(சி/6350)(2.8)

## சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி கிழக்கு, முற்போக்கு இளைஞர் சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | CD Player | 1217 |
| 2 ஆம் பரிசு | மின் விசிறி | 0740 |
| 3 ஆம் பரிசு | மின் கேற்றில் | 1567 |

நிர்வாகத்தினர்
(28780)(6.11)

## ஆண்டுகள் பத்தாகியும் ஆறாத நினைவுகளுடன்



நெஞ்சம் மகிழ
27.07.1937

நெஞ்சம் நெகிழ
21.01.2003

அமரர் துரையப்பா துரைரத்தினம்

ஐயிரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் – உங்கள்
புன்னகை பூத்த முகமும் நினைவுகளும் அழிந்துவிடுமா?
வந்த நோய் மறைந்து இறுதி வரை துணையிருப்பீர்கள் – என்று
எண்ணியிருந்த எம் இதயங்களில்
இடியென இறங்கியது உங்கள் இறுதி மூச்சு
அன்பால் அனைவரையும் கவர்ந்தவரே
அவனியில் எமை தனியே விட்டு சென்றதேனோ? நீங்கள் தடம் பதித்த
இடமெல்லாம் – உங்கள் பண்பான கதை பேசி நிற்கிறது.
ஓம் சாந்தி !

கஜமுகவாசா, வட்லியடைப்பு. (28817)(6.11) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் வர்த்தக ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி ரதீஸ்வரி லிங்கேஸ்வரன்
அவர்களின் தந்தை
கந்தையா சொர்ணலிங்கம்
அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
(சி/6091)(2.8)

## 31 ஆம் நாள் நினைவு கூரலும், நன்றி நவிலலும்



அன்னை மடியில்
13.06.1948

ஆண்டவன் அடியில்
02.01.2013

அமரர் தங்கவேலாயுதம் (நல்லூர் அடியான்)

அன்போடு ஆதரவாய் வாழ்ந்தீர்
நெஞ்சோடு உம் நினைவு உறவாட வைத்து சென்றீர்

கடந்த 02.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.01.2013) புதன்கிழமை பருத்தித்துறை தாமரைகுளத்தடி அந்தியேட்டி மடத்தில் காலை 6.30 மணிக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (01.02.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் மேற்படி கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் தந்தி மூலம், தொலைபேசி மூலமும் அஞ்சலி செலுத்திய கத்தோலிக்க திருச்சபைக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்திய வாணி கல்வி நிலையம், அறிவொளி கல்வி நிலையம்,முல்லைத்தீவு மீள் எழுச்சித்திட்ட அனைத்து ஊழியர்களுக்கும், ஸ்ரீபேச்சி அம்மன் தேவஸ்தானம், தொல்புரம் மத்தி கண்டாமை வாழ் அனைத்து உறவுகளுக்கும் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடக்கரை, பருத்தித்துறை. (28746)(6.11) த-சுகந்தன் (மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன.30

பருத்தித்துறை கல்லூரி வீதி பேச்சி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக மணவாளக்கோல விழா நாளை வியா ழக்கிழமை நடை பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு கிருஸ்ண பட்ச சதுர்த்தி திதியும் அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் இடம்பெறும்.

சங்காபிஷேக பிரதம குருவாக உடுப்பிட்டி வீரபத்திரர் தேவஸ்தானத்தின் சிவஸ்ரீ க.கேதீஸ்வர சிவாச்சாரியார் கலந்து கொள்ளவுள்ளார். (வ-78)

★ ★ ★

பருத்தித்துறை சிந்தாயாத்திரை சித்தி விநாயகர் ஆலயத்தில் (சின்னப்பிள்ளையார் ஆலயம்) வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

மறுநாள் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேக நிகழ்வும் அன்று மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(வ-78)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மத்திய கல்லூரியின் கணித,விஞ்ஞானப்பிரிவு பகுதித்தலைவர் சோ.லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா சோமலிங்கம்** அவர்கள்

கடந்த 28.01.2013 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம். (28784)(6) ஆசிரியர் வட்டம்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23.04.1960



இறப்பு 30.01.2008

### அமரர் ரேவதி சிவஞானம்

சரி பாதி இடம் தந்தாய் உன் வாழ்விலே
காலன் அவன் கொண்டு சென்றான் உன் உயிரை கதறுகின்றோம்
புரியவில்லை உனது அன்புக் கடலில் நீந்த வைத்தாயே!
கண்ணீர் மல்கக் கதறுகின்றோம் எம்மைத் தூக்கி வளர்த்த
உன்கைகளால் ஒருமுறை அணைக்க மாட்டாயா தாயே!
ஐந்தாண்டு போனதென்ன என்தாயே! மீண்டும் அம்மாவாக
வருவாயா என் தாயே! தாய்ப் பாசம் தெரியாமல் தவிக்கின்றோம்
கூடி இருந்த உங்கள் உறவுகளும் எம்மை விட்டு சென்று விட்டார்கள்.
நீ மட்டும் எம்மோடு இருக்கின்றாய்? என்ற உணர்வுகளுடன்
வாழ்கின்றோம் உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போம்.

123, கண்டி வீதி,யாழ்ப்பாணம். அகிலன். லக்ஷ்மன். டினோஜன். (28872)(6)

## TOSHIBA es 233 தற்போது கொழும்பு விலையில்

புதிய கையிருப்புடன்



TOSHIBA,CANON, SHARP, KEOCERA MITA, KONICA MINOLTA, OLIVETI, XEROX
ஆகிய சகல விதமான போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கும் உரிய
**TONER, DRUM, CLEANING BLADE, DEVELOPER** மற்றும்
சகல விதமான உதிரிப் பாகங்களும் தொழில்நுட்ப சேவைகளுடன்
மிக மலிவான விலையில்பெற்றுக்கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு 5-15% கழிவு உண்டு.

விசேட புதிய விலையில் 86,500/-

வெகு விரைவில்
TOSHIBA es455 - 1,85,000/-

புதிய விலையில் *TOSHIBA, CANON ,SHARP*
***DRUM - 2200/-***

புதிய மொடல் கலர்
KONICA MINOLTA c253 - 1,90,000/-

**NORTHERN OFFICE AUTOMATION**
738A Hospital Road, Jaffna.
CALL : 021 222 0512 Mobile - 0773475220, 0777358346 .

## நீங்கா நினைவில்

11 ஆம் ஆண்டு

மலர்வு 27 . 04 . 1938



உதிர்வு 01 . 02 . 2002

அமரர் வெ. வேலு (கந்தையா)
(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)
திதி:- 30.01.2013

17 ஆம் ஆண்டு

அன்னை மடியில் 21 . 02 . 1977



அமரன் மடியில் 13 . 06 . 1996

செல்வன் வேலு சனகன்
(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள்
இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்

அம்பலவாணர் வீதி,உடுவில் கிழக்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.

## அமரர் கந்தையா சரவணபவன் ஞாபகார்த்த நற்பணி மன்றத்தால் கலைஞர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களை அமரரின் 2 ஆவது ஞாபகார்த்த நாளில் கௌரவிக்க உள்ளோம்.

- ★ காத்தவராயன் கூத்து
- ★ கோவலன் கூத்து
- ★ கிறிஸ்தவ நாட்டுக் கூத்து

என்பனவற்றின் அண்ணாவிமார்கள்.

பின்வரும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்

1. பெயர் : ..........................................
2. முகவரி : ..........................................
3. கூத்து வகை : ..........................................
4. தொலைபேசி இலக்கம் : ..........................................

என்பன அடங்கிய விண்ணப்பத்தை "செயலாளர்", நற்பணி மன்றம், மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு 2013.02.15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். (27636)(6.11)

செயற்பாட்டுக்குழு
அமரர் க. சரவணபவன்
நற்பணி மன்றம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 04.05.1950

மறைவு 11.02.2012



### அமரர் கந்தையா தபேந்திரன்

" தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருக்கச் செயல் "
என்ற பொய்யாமொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே.....
எங்கே போய்த் தேடுவோம் ஐயா..... உங்கள்
கனிந்த முகத்தையும், மென் சிரிப்பையும்.....
உங்கள் கொள்கைகளை மனத்திருத்தி....
உங்கள் வழியில் வாழும்....

சபா இல்லம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி

- உங்கள் பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கோபாலராசா உதயசீலன் (சீலன்)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலராசா உதயசீலன் நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா-சரஸ்வதி மற்றும் சின்னையா -மரகதம் தம்பதியினரதும் அன்புப் பேரனும், கோபாலராசா (உதயன்)-சாந்தி தம்பதியர்களின் பாசமிகு மகனும், உதயசந்திரிகா, உதயசந்துரு (பிரான்ஸ்),உதயஜெகன் (பொலிஸ் கொன்ஸ்ரபிள்), உதயரூபினி, உதயசுபேசன்(யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்)ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்னேஸ்வரனின் அன்பு மைத்துனரும், கம்சியாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் (30.01.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

244/12, கண்டி றோட்,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை கிருஷ்ணபாஸ்கரன்

(முன்னாள் உரிமையாளர், எஸ்.கே. சுப்பர் மார்க்கட்)

ஊர்காவற்றுறை கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபுரோவை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கிருஷ்ணபாஸ்கரன், நேற்றுமுன்தினம்(28.01.2013) திங்கட்கிழமை கனடா ரொறன்டோவில் காலமானார்..

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கமலாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சந்திரசேகரம் ஜெகநாதபிள்ளை(வேலணை மேற்கு) மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயமதியின் ஆருயிர்க் கணவரும், மதுசா, சஞ்சீவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாம்பாள், கிருபானந்தன்(ஜேர்மனி, கரிகரன் டிரஸ்), கிருஷ்ணவேணி, தனபாலசிங்கம், காலஞ்சென்ற கிருஷ்ணராணி, மற்றும் கிருஷ்ணரதி, கிருஷ்ணகோபால்(சென்ஜேம்ஸ் ரவுண் வரைட்டி ஸ்டோர்), கிருஷ்ணநாதன், கிருணஷ்ணவீசன்(குவாலிடி கன்வீனியன்ஸ்), கிருஷ்ணமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா, சரஸ்வதி(ஜேர்மனி), காலஞ்சென்ற சம்பூரணன் மற்றும் தனலட்சுமி, கலைச்செல்வன், பாலரஞ்சினி, திருநயனி, தேவகாந்தினி, தவராஜா, வளர்மதி, ஜெகதீசன்(ரூபி கேஸ்&கேரி, லண்டன்), சுமதி, கேதீஸ்வரன்(கிருஷ்ணா கேஸ்&கேரி, லண்டன்), சதீஸ்வரன், சுபா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆனந்தராசா(கனடா), சுபாஜினி(லண்டன்), சதானந்தன்(கனடா), பவித்திரா(லண்டன்), லோயினி(லண்டன்), சதீஸ்குமார்(லண்டன்), ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.01.2013) வியாழக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் 11.00மணிவரை Ogden Funeral Homes, 4164 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3 எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக St James CemeteryCrematorium 635 Parliament Toronto ON M4X 1R1 எனும் இடத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெயமதி(மனைவி)-கனடா
தொலைபேசி:-+14162879159
பாலன்(சகோதரன்)-கனடா
செல்லிடப்பேசி:-+16476486721
ஈசன்- பிரித்தானியா
செல்லிடப்பேசி:-+447760838688

தகவல்:
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இரத்தினசபாபதி சிவகாமசுந்தரி

(நயினாதீவு)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவிம் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி சிவகாமசுந்தரி நேற்று முன்தினம் (28.01. 20 13) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வே.க.கனகசபை -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கா. பொன்னம்பலம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கா.பொ. இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் நாகேஸ்வரி, கோகிலாம்பாள், குலசிங்கம்(கிராம அலுவலர் வேலணை தெற்கு, கிழக்கு), கனகசபை (ஹொலன்ட்), மகேஸ்வரன்(கல்விவலயம், தீவகம்), தங்கராணி(ஜேர்மனி), பொன்னம்பலம்(மனித வளஅபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயும், உதயபாரதிலிங்கம் (சுவிசுலாந்து), வசந்த குணநாதன் (நில அளவைத்திணைக்களம், யாழ்), இரத்தினதேவி (ஆசிரியை, யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), லோகேஸ்வரி (கொலன்ட்), நந்தினி, சிவனேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம், இலட்சுமணன், சரவணமுத்து மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோமசுந்தரம், Dr.காசிலிங்கம், புவனேஸ்வரி, லாடாதேவி, காலஞ்சென்றவர்களான தனலெட்சுமி, இராமச்சந்திரன் மற்றும் தங்கரத் தினம், உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரஸ்வதி, அற்புதராணி, நடேசபிள்ளை, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், தமிழ்மாறன், நாகரூபன்(மென்பொருள் வடிவமைப்பாளர் வவுனியா), சாருஜன், இரத்தினேஸ், அமுதீசன், அர்ச்சனா, அட்சரன், அயிலவன், அருள்நேசன், நவரூபினி, லாவண்ஜா, சரண்ஜா,குணாளன், சயன், ஹர்சனா, லருஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 48/3B, பள்ளி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# JAFFNA COLLEGE

Inter - House Athletic Meet 2013

**Chief Guests:**

**Mr. Selvaratnam Santhirarajah**
(M.A., M.Phil., LL.B., P.G.D.HR., P.G.D.Ed., SLEAS)
Zonal Director, Valigamam

**&**

**Mrs. Uthayakumari Santhirarajah**

Venue: Bicknell Grounds
Date: Friday 1st February, 2013
Time: 2.00 p.m

Alumni, Parents, Friends and well wishers are cordially invited.

Jaffna College,
Vaddukoddai.

**Principal.**

## கண்ணீர்க் காணிக்கை



அருட்திரு ஆ.ஜஸ்ரின்
அடிகளாரின் பாசமிகு தந்தையார்

*தோமஸ் ஆதர்பூத்துரை*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அன் னாரின் ஆத்மா சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர்.
யாழ். தூய மரியன்னை பேராலயம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கிருஷ்ணபிள்ளை



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கல்வளை வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கிருஸ்ண பிள்ளை (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவர்- செல்வி தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணபிள்ளையின் (ஓய்வு பெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர், மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்), அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வியாளி, அன்னப்பிள்ளை, மீனாட்சிப்பிள்ளை, கந்தையா, சின்னம்மா மற்றும் சிவக்கொழுந்து, தங்கச்சிப்பிளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகிதேவி, தயாபரதேவி, ஜெயகுமார்(பிரான்ஸ்), பொய் யாமொழி(பிரான்ஸ்), தமயந்தி, மலர்விழி (முகாமைத்துவ உதவியாளர், வலி கிழக்குப் பிரதேச சபை), வளர்மதி ஆகியோரின் அன்புத் தாயும், சற்குணம்(ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர், கோண்டாவில் சாலை), தயாளகுமார் (முன்னாள் ஊழியர், லங்கா சிமெண்ட் லிமிட்டெட், காங்கேசன்துறை), சகாயதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற லலிஸ்லாலினி மற்றும் தர்மராஜா, குகநேசராஜா, புஸ்பராஜா, கவிதா ஆகியோரின் அன்பு மாமியும், முகுந்தன், அகல்யா, கஜீபன், டொறின், ஏஞ்சலின், கிருஸ்ஷா (பிரான்ஸ்), ஜெயநிஷா (பிரான்ஸ்), சகாயினி (பிரான்ஸ்), ரஸ்மியா(பிரான்ஸ்), அருஷாந்(பிரான்ஸ்), அனுபிகா, அபினுஜா, தனுக்சன், தனோஜன், துசானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2013) வியாழக்கிழமை மு.ப.10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை வீதி, சண்டிப்பாய்.
021 491 0461

தகவல்:
குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும், 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

பிறப்பு
26.04.1942



இறப்பு
24.01.2012

பிறப்பு
06.07.1960



இறப்பு
30.01.2011

அமரர் வின்சன் பிலோமினா
(நாகம்மா)

அமரர் யேசுதாசன் சகாயநாயகி
(அமுதா)

ஆண்டுகள் பல ஆனாலும் நீங்கள்
எம்மை விட்டு பிரிந்து துயரம்
ஆறாது என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

120/5, சொலமன் லேன்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நடேஸ்வரக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்.நடேஸ்வரக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(16)

## பொலிஸ் கான்ஸ்டபிள் கஞ்சாவுடன் மாட்டினார்

கல்முனை,ஜன.30

கல்முனை பொலில் நிலையத்தில் பரிசோதனையின்போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அவரது பெட்டியில் கஞ்சா போதை பொருள் வைத்திருந்தமை தெரியவந்தது.

அதனையடுத்து மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவரைக் கைது செய்துள்ளார் என்று கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை பொலிஸ் நிலையப் பரிசோதனை நேற்று அம்பாறை மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ஹோகண தலைமையில் நடைபெற்றது.

அதன்போது பொலிஸ்கான்ஸ்ட பிள் ஒருவரின் பெட்டியில் 250 கிராம் கஞ்சா போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைப் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ஹோகண கண்டு பிடித்ததையடுத்து, அவரை உடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப் பட்ட பொலிஸ் கான்ஸ் டபிளை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் டெங்கு நோயால் 8 பேர் பாதிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் வேகமாக பரவி வருவதுடன், இது வரை 8 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப் பட்டுள்ளனர் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

அருணகிரி கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு வேகமாகப் பரவி வருவதாக பொது சுகாதார வைத்திய அதிகாரி து. தவக்கொடிராசா தெரிவித்தார். டெங்கு ஒழிப்பு நடவடிக் கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-40)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 08.11.1954



மறைவு : 23.01.2011

திதி : 30.01.2013 சங்கட ஹரசதுர்த்தி

அமரர் *இரத்தினம் பிறேமரட்ணம்*
*[மல்லி அண்ணா]*

அமைதியான புன்சிரிப்பும் ஆழ்ந்த
அறிவும்கொண்டு கனிவு மொழி பேசும்
கள்ளமில்லா வெள்ளைமனமும்
அந்தரித்துவருவோருக்கு அள்ளிவழங்கும்
குணமும் எமக்குவரும் சோதனைகளை
சாதனைகளாகமாற்றி எம்முடனே இருந்து
நாம் மேன்மேலும் அகிலத்தில் உயர ஆசிர்
வதிக்கும் அப்பாவே! ஆறாது எம்துயர்
உங்கள்நினைவில் !

வி.மு.வீதி,
பருத்தித்துறை.

மனைவி,
பிள்ளைகள்ள,
மருமகன்,பேர்த்தி

[சி/6102][14.6]

## கேள்வி அறிவித்தல்

கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம்,வேலணை.

மேற்குறிப்பிட்ட வேலைகள் உலக வங்கியின் Transforming General Education as the Foundation of a Knowledge Hub Grant Project (TESP) நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் நிர்மாண வேலைகளைச் செய்ய வலயக் கல்விப்பணிப்பாளரும் கேள்விச்சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.

ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும், பதிவுப்புத்தகம் 2012/2013 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 01.02.2013 ஆம் திகதியிலிருந்து 14.02.2013 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 19.02.2013 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப்பணங்களை தீவக கல்வி வலய அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திர படிவங்களை பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும் மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | மீளளிக்ககூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1)யா/அனலைதீவுசதாசிவ மகா வித்தியாலயம் (கட்டட நிர்மாண வேலை 80' x 25') | 2500.00 | 46000.00 | M7/C8 |

கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை இணைபிரதியாகவும் கொள்ள வேண்டும்.

கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர் கேள்விச்சபை, வலயக் கல்விப்பணிமனை, தீவகம் என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் தீவக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 19.02.2013 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்பட வேண்டும்.

மேற்படி வேலைகளுக்கான கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப் புத்தகத்தினை யாழ்ப்பாணம், பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து பங்கெடுப்பதற்கான சிபார்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

[illegible]
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தீவகம்,வேலணை.

(C6101)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பல்கலை மாணவரை விடுவிக்கக்கோரி

# சென்னை இலங்கைத் தூதரகம் முன்பாக முற்றுகைப் போராட்டம்

## இனப் படுகொலைக்கு எதிரான இளைஞர் அமைப்பு நடத்துகிறது

சென்னை, ஜன.30

யாழ். பல்கலை மாணவர்களை விடுவிக்கக்கோரி இன்று புதன்கிழமை சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் இடம்பெறவுள்ளது. போர்க்குற்றங்கள்- இனப் படுகொலைக்கு எதிரான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் மேற்படி முற்றுகைப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால் படுகொலையை செய்து முடித்த இலங்கை அரசு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களையும் கொலை செய்ய முயற்சி செய்கிறது. முள்ளிவாய்க்கால் போரின் முடிவில் கைது செய்யப்பட்ட 11 ஆயிரம் பேரின் கதி என்ன என்று தெரியவில்லை. அதேபோல் கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழர்களுக்கு உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய யாழ். பல்கலைக்கழக தமிழ் மாணவர்களைக் கைது செய்தனர். இதனைக் கண்டித்து சிங்கள மாணவர் அமைப்புகளும், பேராசிரியர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும். இதனை வலியுறுத்தி இன்று சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெறும்.

இந்தநிலையில் சிலரை மட்டும் சித்திரவதைக்குப் பின் விடுதலை செய்துள்ள அரசு மீதமுள்ள மாணவர்களை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இலங்கை அரசிடம் இருந்து மாணவர்களை உயிருடன் மீட்பது தமிழக அரசின் கடமையாகும். இலங்கையில் நடைபெறும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும். இதனை வலியுறுத்தி இன்று சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போர்க்குற்றம்- இனப் படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பின் சார்பில், சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், பேசிய தமிழ் ஈழ பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் -

''இலங்கை தூதரக முற்றுகைப் போராட்டத்தில் இன உணர்வோடு அனைவரும் பங்கு பெறவேண்டும்'' என்று அழைப்பு விடுத்துள்ளார். (வ)

### உள்நாட்டு அரசியலை விடவும்

## தேசிய நலனுக்கே இந்தியா முக்கியத்துவம் கொடுக்கிறது

### பிரி. டெய்லி மெயில் தகவல்

உள்நாட்டு அரசியலை விடவும் தேசிய நலனுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது இந்தியா என்று பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'டெய்லி மெயில்' நாளேடு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவிடம் இருந்து எதிர்ப்பு ஏற்பட்டாலும் கூட, இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை இந்தியா வலுப்படுத்தி வருகின்றது.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம்சிங் இலங்கைக்கு கடந்த மாதம் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அதன் பின்னர், இலங்கையின் கூட்டுப்படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் றொசான் குணதிலக தலைமையிலான 10 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவுடன், இந்தியாவின் தலைமை தளபதிகளின் குழுவின் தலைவர் எயர் சீவ் மார்ஷல் பிறவுண் அண்மையில் பேச்சு நடத்தியுள்ளார்.

குறைந்தபட்சம் இந்த ஒரு விவகாரத்தைக் கொண்டேனும், உள்நாட்டு அரசியலை விட தேசிய நலன்களுக்கே இந்தியா முன்னுரிமை கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் டெய்லி மெயில் மேலும் தெரிவித்துள்ளது. (வ)

## இந்தோனேஷிய கடற்பரப்பில் படகு பாறையில் மோதியதால் விபத்து

### இலங்கைச் சிறுவர்கள் சாவு

இந்தோனேஷிய கடற்பரப்பில் படகு பாறையில் மோதி விபத்துக்குள்ளானதில் இலங்கைச் சிறுவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற இலங்கையைச் சேர்ந்த ஒரு குழுவினரின் படகு, இந்தோனேஷியாவின்ஜாவாகடற்பகுதியில் உள்ள கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த படகு விபத்தில் 4 வயதுடைய சிறுவனும், 10 வயதுடைய சிறுமியொருவரும் உயிரிழந்துள்ளனர். அந்தப்படகில் இருந்த 20 பேர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், அந்தக் குழுவிலிருந்த ஒருவர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படகு விபத்திலிருந்து மீட்கப்பட்ட அனைவரும் ஜாவாவின் சிலகெப் என்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. படகின் எஞ்சின் பழுதடைந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 இலங்கை அகதி கோரிக்கையாளர்கள் இந்தப் படகில் பயணித்துள்ளதாக இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## செங்கல்பட்டு சிறைமுகாம் அகதிகள் காவல் ஆய்வாளரை தடுத்து வைத்தனர்

செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் காவல் ஆய்வாளரை அகதிகள் சேர்ந்து தடுத்து வைத்தனர்.

செங்கல்பட்டில், இலங்கை அகதிகள் சிறப்பு முகாம் உள்ளது. இலங்கையிலிருந்து முறையான கடவுச்சீட்டு மற்றும் விசா ஆகியவைகளின்றி தமிழகத்துக்கு வந்தது, குற்றச் செயல்களில் ஈடுபட்டது, ஆயுதம் கடத்தியது ஆகியவை தொடர்பாக கியூ பிரிவுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். அதன்பேரில் கைது செய்த 36 பேர் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அவர்களைப் பார்க்க வந்த உறவினர்களிடம் பொலிஸார் சோதனையிட்டபோது, தொலைபேசி, சிம் அட்டை மற்றும் வெளிநாட்டுப் பணம் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. மேற்படி தகவல் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு தெரிந்தவுடன், உள்ளே பணியாற்றிய ஆயுதப்படை காவல் ஆய்வாளர் ராஜப்பிரகாசத்தை தடுத்து வைத்தனர். தகவலறிந்த வருவாய்த்துறையினர் அகதிகளிடம் பேச்சு நடத்தி காவல் ஆய்வாளரை மீட்டனர். (வ)

## பொலிஸாருக்கு விவரங்களை வழங்காமையால் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியாத நிலை

### யாழ். மாவட்ட பொலிஸ் மா அதிபர் கவலை

வலி வடக்கு, ஜன. 30

குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றபோது அது குறித்து அயலவர்கள் தமக்குத் தெரிந்த விடயங்களைப் பொலிஸாருக்கு வழங்க மறுப்பதனால் குற்றவாளிகளை இலகுவில் கைது செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், பொது மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் குற்றச்செயல்கள் சம்பந்தமான விவரங்களைப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு பயப்படத் தேவையில்லை. பொலிஸார் அதனை யாருக்கும் கூறப் போவதில்லை.

எந்தச் சந்தர்ப்பத்திலும் குற்றச்செயல்கள் சம்பந்தமான விவரங்களைப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு பயப்படத் தேவையில்லை.

இந்த வகையிலேயே கொக்குவில் பகுதியில் உள்ள ஆயுள் வேத வைத்தியரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களையும் இனம்காண முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பொது மக்கள் தமக்கு தெரிந்த அல்லது சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடியவர்கள் சம்பந்தமான விவரங்களைப் பொலிஸாருக்கு வழங்கினால் கூட சந்தேக நபர்களை விரைவில் கைது செய்து குற்றச்செயல்களை முழுமையாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும்.

இதற்கு குற்றச்செயல்கள் இடம்பெறும் பகுதியில் உள்ளவர்களும், அயலவர்களும் பொலிஸாருக்கு உதவி செய்யவேண்டும் - என்றார். (வ-36)

## இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்ற இலங்கையர் கைது

இந்தியாவுக்கு தங்கக் கட்டிகளை கடத்த முயன்ற இலங்கையர் ஒருவரை சுங்கப் பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

36 இலட்சம் ரூபா பெறுமதியான ஆறு தங்கக் கட்டிகளை உடலுக்குள் மறைத்து வைத்தே குறித்த சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கு கடத்த முயன்றுள்ளார்.

குறித்த நபரின் நடவடிக்கைகள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சுங்க அதிகாரிகள் அவரை விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போதே உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. (வ)

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை நிலுவையுடன் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

தேசிய முதியோர் செயலகத்தால் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்க வேண்டிய ,ஐந்து மாதங்களுக்குரிய ஆயிரம் ரூபா கொடுப்பனவு நிலுவைத் தொகையான 5 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு இந்தத் திட்டத்துக்கு தெரிவான முதியோர்கள் கோரியுள்ளனர்.

நாட்டில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றவர்களில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் வெளியிடப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் கடந்த ஜூன் மாதத்துக்குரிய கொடுப்பனவு ஜூலை மாதம் வங்கிப் புத்தகத்துடன் வழங்கப்பட்டது.

பின்னர் டிசெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இடைப்பட்ட காலத்துக்குரிய ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் , ஒக்ரோபர், நவம்பர் ஆகிய 5 மாதங்களுக்குரிய கொடுப் பனவுகள் நிலுவையாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இது வரை வழங்கப்படவில்லை.

2013 ஜனவரிக்குரிய கொடுப்பனவுடன் நிலுவைத் தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்ட ஜனவரி மாதக் கொடுப்பனவுடன் நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைத் தொகையை 2013 பெப்ரவரி மாதக் கொடுப்பனவுடன் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை முதியோர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக உரிய திணைக்கள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவு நிலுவைத் தொகையை அனுப்பி வைக்குமாறு கோரிக்கைகள் அனுப்பியபோதிலும் இது வரை உரிய கொடுப்பனவுத் தொகை வரவில்லை.

தேசிய முதியோர் செயலகத்திடமிருந்த நிலுவைத் தொகை கிடைத்ததும் முதியோர்களுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தேசிய முதியோர் செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது 2012 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் முடிவுறுத்தப் [illegible] என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## இடர் பாதுகாப்புக் கல்வி வினாவிடை; போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தின் (ஜீரிஸட்) ஈஎஸ்சி திட்டத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கோட்ட, வலய மட்ட இடர் பாதுகாப்பு கல்வி வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர், நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்குமான பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பின்வரும் பாடசாலைகளின் அதிபர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, கச்சாய் அ.த.க பாடசாலை, மட்டு வில் சந்திர மௌலீச வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரஸ்கந்த வரோதய ம.வி, நாவற்குழி ம.வி. கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்

தென்மராட்சி கல்வி வலய மட்டத்தில் பெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

முதலாம் இடம் க.கவீனா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 2 ஆம் இடம்- எஸ்.அஜந்தன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி,3 ஆம் இடம்- எஸ். வினுஜா- கொடிகாமம் திரு நாவுக்கரசு

அலகு 2

முதலாம் இடம்- கே.ரஜீதா- கச்சாய் அ.த.க. பாடசாலை

2ம் இடம்-எஸ்.சர்மிலன்- மட்டுவில் சந்திரமௌலி வித்தி, 3ஆம் இடம்- எஸ்- கஜானன்-மட்டுவில் சந்திர மௌலி வித்தி

அலகு 3

முதலாம் இடம்- எஸ். தயாகரன்-மட்டுவில் சந்திரமௌலி வித்தி, 2ம் இடம்- பீ.அனுஷா-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 3ம் இடம்- கே. சயந்தன்- கச்சாய் அ.த.க பாடசாலை. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வீதி ஓட்டப் போட்டியில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். (த-86)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது பாடும்மீன்

யாழ்ப்பாணம்,ஜன.30

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெறும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாடும்மீன் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. பாடும்மீன் அணியினரால் உதைக்கப்பட்ட பந்துகள் மின்னல் வேகத்தில் பறந்தன. இதனால் முதலாவது நிமிடத்தில் பாடும்மீன் அணி வீரர் தினேஸ்குமார் மிகச் சிறப்பான ஒருகோலைப் போட்டார்.

அதன்பின்னர் தம்மைத் தயார்படுத்திய ஆதிசக்தி அணியினர் ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தனர். இதனால் அணி வீரர் யோகசந்திரன் பாடும்மீன் அணியின் பின் தடுப்பு வீரர்களைத் தாண்டி பந்தைக் கொண்டு செல்ல முற்பட்ட போது பாடும்மீன் அணி வீரர் அதனை முறையற்ற வகையில் தடுக்க நடுவரால் ஆதிசக்தி அணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதனால் 15 இடத்தில் உதைக்கப்பட்ட தண்டனை உதையைச் சரியாகப் பயன்படுத்திய குகராசாவினால் அடிக்கப்பட்ட பந்து கோல் கம்பத்தில் பட்டு கோலாக மாற இரு அணிகளும் சம மான கோலைப் பெற ஆட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இரு அணிகளும் ஆட்டத்தில் சளைத்தவர்கள் அல்ல என்பதனை வெளிப்படுத்த பந்து இருகோல் கம்பங்களுக்குமிடையில் பந்தாடப்பட்டது.

2 ஆவது நிமிடத்தில் ஆதி சக்தி வீரர் யோகசந்திரன் கொண்டு சென்ற பந்தைப் பாடும்மீன் அணி வீரர் ஞானபிரகாசம் முறையற்ற வகையில் தடுக்க தண்டனை உதை வழங்கப்பட்டது. இந்தத் தண்டனை உதையும் ஆதிசக்தி வீரர் குகராசா உதைக்க அப்பந்து கம்பத்துக்கு வெளியே சென்றமையால் வாய்ப்பு நழுவிப்போனது .

அதன்பின்னர் ஆதிசக்தி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த 7 ஆவது நிமிடத்தில் சிறிராஜ்க்கு மஞ்சல் அட்டை காட்டப்பட்டது. அதன் பின்னர் இரு அணிக்கும் பலமாக மோதிய போதும் கோல் எதனையும் பெற முடியவில்லை. இதனால் இடைவேளையின் போது ஆட்டம் 1:1 எனச் சமநிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளின் ஆட்டமும் மிகப் பரபரப்பான ஆட்டத்தை எட்டியது. இதில் 27 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி வீரர் டினேசுதனுக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. பல வாய்ப்புகள் ஆதி சக்தி அணிக்கு கிடைத்த போதும் எந்த வாய்ப்புக்களையும் அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை.

31 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணிவீரர் அமுதன் கோல் போடும் வாய்ப்பை தவறவிட்டாலும் 43 ஆவது நிமிடத்தில் தமக்குகிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி பாடும்மீன் அணி வீரர் ஞானபிரகாஸ் தனியாக ஆதி சக்தி வீரர்களை ஏமாற்றி கோல் ஒன்றை போட ஆட்டம் நிறைவுக்கு வந்தது

இதனால் பாடும்மீன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அன்றையதினம் மற்றும் ஒருபோட்டியில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் மோதின.

இதில் இரு அணிகளும் பலமாக மோதியதால் இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் போடமுடியவில்லை .

இடைவேளையின் பின்னரும் இரு அணிகளும் சரிசமமாகமோதிக் கொண்டிருந்த போது சென்.லூட்ஸ் அணி வீரர் பெனான்டோ 40ஆவது நிமிடத்தில் ஒரு கோலை போட்டார். இறுதிவரை இரு அணிகளும் மிக வேகமாக மோதினர். இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். லூட்ஸ் அணி வெற்றி பெற்றது. (த-422-8)

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★பாசையூர் சென் அன்ரனிஸ் வி.க. அணி எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் பின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

மாலை 6 மணி

சன்சயான் வி.க. எதிர் அல்ஜிஜுரா வி.க.

★ ★ ★

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சி போட்டி இன்று புதன்கிழமை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மோதவுள்ள அணிகள் வருமாறு

பிற்பகல் 3மணி

கதுமலை ஜங்கரன் வி.க. எதிர் புதூர வைகறை வி.க.

★ ★ ★

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி ஹாட்லி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை கனகபுரம் வி.க. மைதானம், ஜெயந்திநகர் வி.க. மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23-288)

## ஆண்,பெண் பிரிவுகளில் அளவெட்டி பாரதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.30

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்களில் ஆண்கள், பெண்கள் இரு பிரிவுகளிலும் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனது.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை இளம் சுடர் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இதில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23-86)

## வலைப்பந்தாட்ட சம்மேளன உபதலைவியாக றூபசிங்கம்



யாழ்ப்பாணம், ஜன.30

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவியாக ஓய்வு பெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.றூபசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் உப தலைவியாக திருமதி ஏ.எப். ஜே.றூபசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2001 ஆம் ஆண்டு இலங்கை வலைபந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவியாக கடமையாற்றியுள்ளார்.

12 வருடங்களின் பின்னர் இவ்வாண்டு மீண்டும் அவர் உப தலைவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் உபதலைவியாகவும், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவியாகவும் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது. (த-23)

## உதைபந்தாட்ட போட்டிகள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அங்கத்துவக் கழகங்களுக்கிடையிலான 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன என யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக் குழுவினர் அறிவித்துள்ளனர். (த-23)

# தேசிய ரீதியான நீச்சல் போட்டியில் மத்திய கல்லூரி மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் அன்ரனி நியூற்றன் தேசிய ரீதியில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். நீர்கொழும்பு ரைகர் சார்க் சுவிமிங்கிளப்பினால் நடத்தப்பட்ட 2 ஆவது தேசியரீதியிலான 2 கிலோ மீற்றர் கடல் நீச்சல் போட்டியில் மேற்படி மாணவன் 60 நிமிடங்களுக்குள் நீந்தி முடித்து வெற்றி பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புதிதாக நீச்சல் தடாகம் திறந்து வைக்கப்பட்டு ஒருவருடம் நிறைவடைவதற்குள் மத்திய கல்லூரி மாணவனினால் இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. அன்ரனி நியூற்றனுக்கான நீச்சல் பயிற்சியை லைவ் சேவிங் அலகின் பொறுப்பாளரும் நீச்சல் பயிற்சியாளருமாகிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.பி.ஆர். ஹேரத் வழங்கியிருந்தார். இவருடைய முயற்சியின் காரணமாக இந்த தேசிய ரீதியிலான நீச்சல் வெற்றியை மத்திய கல்லூரி மாணவன் பெற முடிந்துள்ளது.

மேற்படி தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவனுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த கல்லூரிச் சமூகத்திற்கு பெருமை தரும் இந்த நிகழ்வுக்கு பிர தம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு மாணவனுக்கான கேடயத்தை வழங்கி வைத்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.-இலங்கை வீரர்கள் சமரசம்


ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான இறுதி 20/20 சர்வதேசப் போட்டியின் இறுதியில் ஏற்பட்ட முறுகல் நிலையிலிருந்து இரு அணியினரும் சமரசத்துக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

**கிளென் மக்ஸ்வெல், போட்டியின் பின்னர் தான் இலங்கை வீரர்களின் அறைக்குள் சென்றதாகவும், தங்கள் அளவை மீறிச் சென்றமைக்காக இலங்கை வீரர்கள் தன்னிடம் மன்னிப்புக் கோரியதாகவும், தானும் மன்னிப்புக் கோரியதாகம் தெரிவித்துள் ளார்.**



இரண்டாவது போட்டியின் 20 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 5 ஆவது பந்தில் ஆஸ்திரேலிய அணியின் வீரர் கிளென் மக்ஸ்வெல் 4 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க, இறுதிப் பந்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்த நிலையில் இறுதிப் பந்தை வீசுவதற்கு இலங்கை வீரர்கள் தாமதித்த நிலையில், அதை விரும்பாத துடுப்பாட்ட வீரரான கிளென் மக்ஸ்வெல் இலங்கை வீரர்களுடன் தகராறில் ஈடுபட, இலங்கை வீரர்கள் அவருடன் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.



இதில் மஹேல ஜயவர்தன மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மக்ஸ்வெல்லைத் திட்டியிருந்தார்.

இலங்கை அணி வெற்றிபெற்ற பின்னர் கைகுலுக்கும்போது இரு தரப்பினருக்குமிடையே மீண்டும் வாய்த் தர்க்கங்கள் ஏற்பட்டிருந்தன. அதன்போது அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி, விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள கிளென் மக்ஸ்வெல், போட்டியின் பின்னர் தான் இலங்கை வீரர்களின் அறைக்குள் சென்றதாகவும், தாங்கள் அளவை மீறிச் சென்றமைக்காக இலங்கை வீரர்கள் தன்னிடம் மன்னிப்புக் கோரியதாகவும், தானும் மன்னிப்புக் கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.



மஹேல ஜயவர்தனவுடன் தான் சிறந்த உறவைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அந்த உறவு எப்போதும் அவ்வாறே இருக்கும் எனத் தெரிவித்தார்.

## இலங்கையில் திறமைக்குத் தட்டுப்பாடில்லை

இலங்கைக் கிரிக்கெட் அணியில் திறமைகளுக்குத் தட்டுப்பாடு கிடையாது என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நேற்றுமுன்தினம் இலங்கையின் பிரதம தேர்வாளராக நியமிக்கப்பட்டுள்ளவருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார். திறமைகளை இனங்கண்டு, சரியான முறையில் தயார்படுத்துவதே தற்போதைய தேவையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இலங்கை சார்பாக நீண்ட காலம் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிய சனத் ஜெயசூரிய, இலங்கையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இந்த நிலையிலேயே அவர் தற்போது பிரதம தேர்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்..

இளைய வீரர்கள் பலர் இலங்கையில் திறமையோடு காணப்படுகின்றமை குறித்து ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்வதாகத் தெரிவித்த சனத் ஜெயசூரிய, அவர்கள் தங்கள் திறமைகளையும் வெளிப்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

இளம் வீரர்கள் தங்கள் திறமைகளின் மூலம் தங்களுக்கு முன்னர் விளையாடிய சிரேஷ்ட வீரர்களின் இடங்களைத் தங்களால் நிரப்ப முடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இளம் வீரர்கள் தங்கள் திறமைகளின் மூலம் நாட்டினைப் பெருமைப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட சனத் ஜெயசூரிய, இலங்கையில் திறமைகளுக்குக் குறைவில்லை எனவும், அவற்றைச் சரியான முறையில் தயார்படுத்துவதே தேவையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

சனத் ஜெயசூரிய இலங்கையின் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகக் காணப்படுவதால், அவரது நியமனம் அரசியல் சம்பந்தப்பட்டது என்ற கருத்துக்களை நிராகரித்த சனத் ஜெயசூரிய, இரண்டு தசாப்தங்களுக்கு மேல் இலங்கைக்காகப் போட்டிகளில் பங்குபற்றியுள்ள நிலையில், தேர்வாளராகப் பதவி வகிக்கும் தகுதி தனக்குள்ளதாகத் தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிரடி மாற்றங்கள்

### பயிற்சியளிக்க வருகின்றனர் வாஸ், முரளி

இலங்கை கிரிக்கெட் அணி அதிரடியாக பல மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. தேர்வுக் குழுத் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்தடுத்து அதிரடியாக பல மாற்றங்களை அணி மேற்கொண்டுள்ளது.



ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜெயசூரிய, தேர்வுக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அணித் தெரிவில் அரசியல் காணப்படும் என்று பல தரப்பாலும் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

இதனைப் பொருட்படுத்தாத இலங்கை கிரிக்கெட் சபை, அதிரடியாக மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றது.

உலகில் அதிகூடிய இலக்குகளைக் கைப்பற்றிய இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், அணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பிராந்திய அணிகளுக்காக விளையாடி வந்தார். இந்த நிலையில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சுப் பயிற்சியாளராக முரளி நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை அணியின் மிகச் சிறந்த ஆரம்ப வேகப் பந்து வீச்சாளரான சமிந்த வாஸ், இலங்கையில் இடம்பெற்ற நியூஸிலாந்துத் தொடரில் நியூஸிலாந்து வீரர்களுக்கு வேகப் பந்துவீச்சுப் பயிற்சியினை வழங்கியிருந்தார். இதனால் நியூஸிலாந்து அணி அனுகூலம் அடைந்திருந்தது. இந்த நிலையில் இலங்கை அணி வேகப் பந்து வீச்சுப் பயிற்சியாளராக சமிந்த வாஸை நியமித்துள்ளது.

மேலும் மஹேல ஜயவர்தன ஒரு நாள், டெஸ்ட் அணித் தலைமைப் பதவியிலிருந்து விலகியுள்ளதால், அணித்தலைவராக 'ரி-20' அணித் தலைவராகச் செயற்பட்டு வரும் மத்தியூஸே நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

SPECIAL OFFER
**COMPUTER COURSES**



| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

SPECIAL OFFER
INTERNATIONAL COURSES.
**IELTS**
ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Course Fee : 12,000/-



UK VISA பெறுவதற்கான பாடநெறி
100% SUCCESS!
Full Time & Part Time

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
> ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
> இரண்டு மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
> பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Duration: 20 hrs Course Fee : 6,000/-

City & Guilds
**A1, A2, B1, B2**
City & Guilds International English for Speakers of Other Languages (ESOL) Diploma
Duration: 48 hrs Course Fee: 12,000/-
LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
0212227230 | 0217538395

**To Become as a PHP Programmer**
php பார்க்க...
http://gendernetwork.org/phpnatives

## இடமாற்ற அறிவித்தல்

STP

149, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த STP கணினி நிறுவனம் இப்போது 49, முதலாம் குறுக்குத்தெரு எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.

**SPOKEN ENGLISH**
யாருக்காக ?
- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதுக்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-02.02.2013
1) காலை 8.00 10.00 2) மு.ப 10.00 12.00
3) பி.ப 1.00 3.00 4) மாலை 3.00 5.00
வார நாள் வகுப்புக்கள் (திங்கள், புதன்)
காலை - 09- 11 மாலை - 03- 05
மு.ப- 11- 01 மாலை - 05- 06
அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்
SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
TEL.0776214567

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
விசேட கட்டணக் கழிவில்
சர்வதேசத் தரம் கொண்ட பின்வரும் கற்கை நெறிகள்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Starts on
02-02-2013
07-02-2013
9.00am & 3.00pm

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..

# மரண அறிவித்தல்

## தோமஸ் ஆதர் பூத்துரை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நாவல்நகர் கல்மடுவை வசிப்பிடமாகவும் கொண்ட தோமஸ் ஆதர் பூத்துரை நேற்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோமஸ் -அல்வீனம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபஸ்த்தி-எலிசபத் தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், மேரி ஸ்ரெலா (ஆசிரியர் கிளி/ இராமநாதபுரம் ம.வி), மேரி அனற்றி (பொது சுகாதார மருத்துவ மாது கல்மடு ந்கர்) அன்ரனிஸ் ரனிஸ்லாஸ் (பிறன்ரோ நிறுவன ஊழியர்), அருட்தந்தை ஜஸ்ரின் அடிகளார் (தாழையடி உதவிப் பங்குத் தந்தை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோஜ்சின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் ஸ்ராலின், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், லெலின் ஆகியோரின் சகோதரனும், பகீரதன், லோறன்ஸ் போல், றெஜீபா (ஆசிரியர், விசுவமடு பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், ஜோயல் (கிளி. இராமநாதபுரம் ம.வி மாணவன்), கிஷானிக்கா, ஆன்ரெப்சிக்கா, யுவான்போல், லிகான்போல், அன்றியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30.01.2013) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, கல்மடுநகர் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P 0771168164

# மரண அறிவித்தல்

## கந்தசாமி நாகேஸ்வரி (பவளம்)



30/16, மல்லிகா ஒழுங்கை, வெள்ளவத்தை.
தொ.இல- 0112500067.

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும், இல.30/16 மல்லிகா ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நாகேஸ்வரி (பவளம்) நேற்று (29.01.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணம் புன்னியா பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனச் சஞ்சலமா ?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

காலகளை பராமரியுங்கள்
லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
Lava Hospitals
LH
No 75,temple road,Jaffna

ENGLISH LECTURER WANTED (MALE/ FEMALE)
We are recruiting lectures with excellent teaching skills to conduct English lessons.
Salary Negotiable.
Send you CV to: nimal@expogroup.lk
LONDON METROPOLITAN COLLEGE
No 197, Arasady Road, Jaffna

SKY இல் கணினி மலிவு விற்பனை
INTEL D/core 2.8 GHZ CPU
INTEL G41 DDR III M/B
KINGSTONE DDR III 1333
250GB HDD SATA
DVD WR 24X
K/B, Mouse + PAD
SPEAKER
19" LED HP MONITOR
3 Years WARRANTY
39,500/=
FREE- HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM
162, MAIN STREET, JAFFNA.
0212221417, 0777271645
(14 ஆவது வருட சேவையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திட்டமிடுவோர்
இன்னொருவராக
இருந்தால்
காரியம்
நடக்காது.
-வினோபாஜி-

# புதன் பொய்கை

A

உதயன் | ஜனவரி 30 2013 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு

# ஜெனிவா கூட்டத்தொடர் எதனை எதிர்பார்க்கிறது?



துன்னாலைச் செல்வம்

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெற விருக்கும் ஐ.நா மனித உரிமை சபையின் கூட்டத் தொடர் இலங்கைக்கு மரணப் பொறியாக அமையும் அபாயம் அதிகமாகவே உள்ளது.

சர்வதேச நாடுகளின் கடுமையான அழுத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரின்போது இலங்கை அரசுக்கு எதிராக பிரயோகிக்கப்படும். இதைத் தீர்மானிக்கும் சக்தி இந்தியாவின் கைகளிலேயே தங்கியிருப்பது துலாம்பரமாகிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உள்ளார்ந்த எண்ணம் இந்தியாவிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த ஜெனிவா கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கடுமையான அழுத்தங்களை பிரயோகித்த அமெரிக்கா மார்ச் மாதக் கூட்டத் தொடரிலும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளது உறுதியாக உள்ளது.

இந்த நிலையில் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான அதிருப்தி வெளியிட்டு வருகின்றன. இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் நடக்க இருக்கின்ற ஜெனிவா சமர் இலங்கைக்கு எவ்வாறு அமையும் என்பது பரபரப்பான விடயமாக எதிர்பார்க்கப்படுகிறது.

நடக்க விருக்கும் ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் அமெரிக்காவிடம் மிகக் குறைவாகவே இருப்பதாக அறியப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரின் போது தமக்கு எதுவும் தெரியாதது போல மௌனம் காத்த இந்தியா, தற்பொழுதும் இவ்வாறான போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது. ஆகவே இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்தியா தமிழர்களுக்கு உதவும் என நினைப்பது ஐயத்துக்குரியதே எனலாம்.

அமெரிக்கா இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தாலும் அது தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் நம்பகத் தன்மையுடையதாக இல்லை. அது அமெரிக்க நலன் சார்ந்த விடயமாகவே இருக்கும்.

அதாவது இலங்கை பிரச்சினை தொடர்பில் மிக காட்டமான அறிக்கை ஒன்றை தயார் செய்திருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதனை ஜெனிவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு என்பன இதுவரைக்கும் விவாதங்களை நடத்தி வந்த போதும் இறுக்கமான அறிக்கை எதனையும் வெளியிடவில்லை.

இந்த அறிக்கை எந்த விதத்தில் இலங்கையை கட்டிப்போடும் என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதுவரைக்கும் இறுக்கமான அறிக்கையை வெளியிடாத போது எப்படி இந்த அறிக்கையை இறுக்கமான அறிக்கை என்று எதிர்பார்க்க முடியும்? காலத்துக்கு காலம் காய் நகர்த்தி துரும்புச் சீட்டாக இலங்கைப் பிரச்சினையைக் கையில் வைத்துக்கொண்டு அமெரிக்கா எதிர்பார்ப்பது என்ன என்பதுதான் இது வரைக்கும் இலங்கைக்கு தெரிய வராத விடயமாக உள்ளது.

அமெரிக்காவின் கொள்கையில் எந்த மாற்றத்தையும் மேற்கொள்ளாமல் இலங்கைப் பிரச்சினையில் தலைபோடும் செயலர்களால் ஈழத்தமிழர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

அந்த வகையில் ஜான் [illegible] தான் அடுத்த அமெரிக்க அரச செயலர் என்று தெரிய வருகிறது. வொஷிங்டன் வட்டாரத்தில் பல ஆண்டுகளாக வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் முன்னணிக் குரல் என்றால் அது கெர்ரியுடையதுதான்.

27 ஆண்டு காலமாக அவர் செனட் வெளியுறவுகள் குழுவின் உறுப்பினராக இருந்து வருகிறார். உலகெங்கும் அவருக்கு பரவலான தொடர்புகள் உள்ளன.

மத்திய கிழக்கு அரசியல் அவருக்கு அத்துப்படி. ஒபாமா அரசுக்காக அவர் உலகம் சுற்றி வருகிறார். செனட் அவையின் இருபுறங்களிலும் உள்ள உறுப்பினர்களும் ஜான் கெர்ரியை மதிக்கிறார்கள்; நேசிக்கிறார்கள்; இவரைத் தேர்வு செய்ததில் ஒபாமாவுக்கு எந்த ஆபத்தும் வரப்போவதில்லை. கச்சிதமாக ஒபாமாவுடன் இசைந்து செல்வார் கெர்ரி.

[illegible]யின் வெளியுறவுக் கொள்கை என்ன? அமெரிக்க - இலங்கை உறவுகளில் என்ன தாக்கம் இருக்கக்கூடும் என்று மேலோட்டமாகக் கூற இயலாது.

வெளியுறவுக் கொள்கை என்று வந்துவிட்டால் பராக் ஒபாமா ஒரு கட்டுப்பாட்டு சீலர். அவரே எல்லாவற்றையும் தீர்மானிப்பார். வெள்ளை மாளிகையில் ஒபாமாவின் குழு ஒன்றுதான் எல்லா முடிவுகளையும் எடுக்கிறது.

ஹிலாரி கிளிண்டன் மிகச் சிறந்த அரச செயலர். ஆனால் பெரும்பாலும் அவர் கொள்கையை நடைமுறைப்படுத்துபவராக இருந்தாரே தவிர வியூக வகுப்பாளராக இருக்க வில்லை. பராக் ஒபாமா ஜான் கெர்ரியை நம்புகிறார்.

சில விஷயங்களைக் கெர்ரியே கவனித்துக் கொள்ளட்டும் என ஒபாமா விட்டுக் கொடுக்க வாய்ப்புண்டு.

இலங்கை தொடர்பான முடிவுகளை கெர்ரி தான் எடுக்கப்போகிறார் என்றால் அங்கே மனித உரிமைகளுக்கு அல்ல மாறாக இராணுவ பாதுகாப்பு உறவுகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கக்கூடும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் அவரது அக்கறை பெரிதாக இருக்க வாய்ப்பில்லை. வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போர் எவ்வாறு முடிவடைந்தது என்பதை கெர்ரி அறிவார்.

> “நடக்க விருக்கும் ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் அமெரிக்காவிடம் மிகக் குறைவாகவே இருக்கிறது என்று ஒரு சாரர் கருதுகின்றனர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.”

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இலங்கை அரசுக்கு அமெரிக்கா துணை நின்றது ஏன் என்பதை அவர் முழுமையாக அறிவார். ஆனாலும் அமெரிக்க கொள்கையில் இருந்து விலகி அவரால் இலங்கை பிரச்சினை தொடர்பில் எதுவும் செய்ய முடியாது என்று கொள்ளலாம்.

கெர்ரி தான் கொள்கையை வகுப்பார் என்றால் ஈழத் தமிழர் மட்டில் தற்போதைய அமெரிக்க நிலைப்பாட்டையே அது பிரதிபலிக்கும் என கருதப்படுகிறது.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக அமெரிக்க உத்தேசித்துள்ளது.

இதற்கான இராஜதந்திர முன்னேற்பாடுகளை இப்போதே அமெரிக்கா முடுக்கிவிட்டிருக்கிறது. இதன் படி மார்ச் மாதக் கூட்டத் தொடரில் பங்கேற்கும் நாடுகளின் தூதுவர்களுக்கு இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாக கூறப்படுகின்றது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் மார்ச் மாதம் மாநாட்டில் அது தொடர்பில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படும் சாத்தியம் தொடர்பிலும் ஜெனிவாவில் உள்ள அமெரிக்க தூதரகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இராஜதந்திர மட்டத்தில் முன்னறிவித்தலை கொடுத்திருப்பதாகவும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


இலங்கை தொடர்பில் இந்த முறை ஜெனிவா மாநாட்டில் மூன்று நாள்கள் தனித்தனி ஆய்வுகள் இடம்பெறவுள்ளன. இறுதி நாள் விவாதம் மார்ச் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆகையால் மார்ச் 15 ஆம் திகதியிலேயே அமெரிக்கா தனது பிரேரணையை முன்மொழியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் போது சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் பிரேரணைக்கு தற்போது இறுதிவடிவம் கொடுக்கும் முயற்சிகள் முடிவடைந்துவிட்டதாக அமெரிக்க இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு இந்த விடயம் நெருக்கடியைக் கொடுத்தாலும் இலங்கை பிரச்சினை தொடர்பில் தமிழர்களுக்கு எந்த வகையில் தீர்வு கிடைக்கும் என்று இப்போது துல்லியமாகக் கூறமுடியாது. ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடூர விலங்குடன் பழகும் சிறுவன்

ஆஸ்திரேலியாவில் மூன்று வயதுச் சிறுவன் தனது ஒரு வயதிலிருந்தே விலங்குகளுடன் பழக ஆரம்பித்து விட்டான்.
அதனால் கொடூரமான விலங்குகளை கூட கையாள்வது என்ற திறமையும் அவனுக்கு தானாகவே வந்துவிட்டது.
முதலை கூட அவனின் அரவணைப்பில் வாய் திறக்காமல் இருப்பது பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியை வழங்கி வருகிறது.

# சிறுநீரகத்தில் கற்கள் உருவாகாமல் தடுக்க தண்ணீரை அருந்துங்கள்



சிறுநீரகத்தில் கற்கள் உருவாதல் என்னும் நோய் இலங்கையில் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இளம்பராயத்தினர் இடுப்பு வலி, அடிவயிற்று வலி போன்ற பல பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

இந்த நோய் ஏற்பட மூலக் காரணம் சரியாக நீர் அருந்தாமையே ஆகும். மனிதன் சராசரியாக ஒரு நாளைக்கு 3 தொடக்கம் 4 லீற்றர் வரைக்குமான நீரை அருந்த வேண்டும்.

தொடர்ச்சியாக குளிர் காய்ச்சல், சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனே வைத்தியரை நாட வேண்டும். காரணம் அது பெரும்பாலும் சிறுநீரகத்தில் கல் உருவாகி இருப்பதற்கான அறிகுறிகளாக இருக்கலாம். அவ்வாறு இந்தக் கல் உருவாகியிருந்தால் அதற்கேற்ப சிகிச்சை அல்லது சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு சிறுநீரகக் கல்லை வைத்தியர்கள் அகற்றுவார்கள்.

இதற்காகப் பயப்படத் தேவையில்லை. ஆனால் அலட்சியமாக இருக்கக் கூடாது. தொடர்ச்சியாக அதனை கவனிக்காமல் இருந்தால் அது சிறுநீரில் பக்றீரியா தொற்றை ஏற்படுத்தலாம். அதனால் சிறுநீரகம் சார்ந்த பல விளைவுகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

எனவே இந்த நோயை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமானால் ஒரு நாளைக்கு 3-4 லீற்றர் சுத்தமான நீரை அருந்துங்கள். அதனால் சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதை மாத்திரமன்றி உடம்பில் ஏற்படும் பல நோய்களுக்கும் இலகுவான தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

# கண் பார்வையைப் பாதிக்கும் அஸ்பிரின் மாத்திரை





**அஸ்பிரின் மாத்திரை சாப்பிட்டால் கண் பார்வை பாதிக்கும். இதயநோய்கள், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உலகம் முழுவதும் அஸ்பிரின் மாத்திரைகள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றை தொடர்ந்து சாப்பிடுவதால் முதியவர்களுக்கு கண் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.**

# உடற்பயிற்சி செய்தால் இதயத்துக்கு நல்லது



சாப்பிட்ட பின்னர் உடற் பயிற்சி செய்தால் இதயத்துக்கு நல்லது என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அதிக கொழுப்பு மிக்க உணவுப் பொருள்களை சாப்பிடுவதன் மூலம் உடல் நலத்துக்குத் தீங்கு ஏற்படும். அதனால் இதயம் பாதிக் கப்படும்.

ஆனால் அவற்றைச் சீரமைக்க சாப் பிட்ட பின்னர் உடற்பயிற்சி செய்தால் நல்லது என்று தெரிய வந்துள்ளது.

கொழுப்புச் சத்துமிக்க உண வுப் பொருள்களை சாப்பிடுவதன் மூலம் குருதியில் உள்ள கொழுப் புச் சத்துக்கள் அதிகரிக் கின்றன என்று ஆய்வை மேற்கொண்ட ஜப்பான் விஞ்ஞானிகள் கூறுகின்ற னர்.

அதுவே இதயநோய் கள் உட்பட பல்வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்பட வழிவகுக்கிறது என்று அவர்கள் தெரிவித் தனர்.

எனவே சாப்பிட்டவு டன் சுமார் ஒருமணி நேரம் உடற் பயிற்சி செய்வதன் மூலம் குருதியில் ஏற்படும் கொழுப் பின் அளவைக் குறைக்க முடிகி றது. அதன் மூலம் இதயப் பாதிப் பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள லாம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் பிள்ளைகளின் மீது கொண்டுள்ள நல்லுறவு



விநோதா கலைச்செல்வன்,
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம், தெல்லிப்பழை


18 வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்களாக கணிக்கப்படுவர். அவர்கள் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுவனும் அடிப்படைத் தேவைகளைப் பெற உரிமை உள்ளவன். எனவே அவற்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதில் பெற்றோரின் பங்கு முக்கியமானது.

மனித வாழ்வின் அர்த்தம் முழுவதும் ஒருவன் தன் வாழ்வில் எத்தனை பேருடன் நல் உறவு கொண்டிருக்கிறான் என்பதைப் பொறுத்தது. ஒருவனுடைய வாழ்க்கையில் வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம் போன்றவை அவன் பிறருடன் வைத்துள்ள உறவு முறை மூலம் அறிந்து கொள்ளலாம்.

அந்த வகையிலேயே ''உன் நண்பனைச் சொல் உன்னைச் சொல்கின்றேன்'' என்ற பழமொழி அன்று தொட்டு இன்று வரை நிலைத்திருக்கின்றது. குழந்தையானது தனது ஆரம்பப் பருவத்தில் தன்னை வளர்த்த பெற்றோரிடம் இருந்து அனுபவங்களைப் பெறுகின்றது.

அத்துடன் நடத்தை, மனப்பாங்கு பெறுமதிகள் போன்றவற்றை உணர்கின்றது. பிற்காலத்தில் அவற்றைத் தன்னுடைய செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துகின்றது. ஒருவருடைய வாழ்க்கையில் பெற்றோருடன் கழிக்கும் முதல் 5 ஆண்டுகளும் வாழ்வின் அடித்தளத்திற்கு காரணமாகின்றது.

இப்பருவ காலத்தில் தான் குழந்தைகளின் கண்களில் தெரிபவைகளும், காதுகளால் கேட்கப்படுபவைகளும், உணர்வு ரீதியாக அனுபவிக்கப்படுபவைகளும் குழந்தையின் மூளையில் நிழற்படம் போல் பதிவு செய்யப்படுகின்றன. அந்த வகையிலே ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகள் மீது உண்மையான அன்பு கொண்டிருத்தல் வேண்டும்.



அதே வேளை குழந்தைகள் மீது அதிக அக்கறை கொண்டவர்களாகவும், பிள்ளைகளைச் சிறப்பாகப் பராமரிப்பவர்களாகவும் விளங்க வேண்டும்.

இல்லையேல் பிள்ளைகள் சிறந்த உணர்வு மிக்கவர்களாகவோ, அன்பு செலுத்துபவர்களாகவோ, மற்றவர்களை மதிக்கும் தன்மை உடைய பண்புகளைக் கொண்டவர்களாகவோ பிற்காலத்தில் வளர்வதற்கான சந்தர்ப்பத்தை இல்லாது செய்துவிடும்.

அதுமட்டுமன்றி பிள்ளை வளர் பருவத்தில் குடும்பத்தில் காணப்படும் ஏனைய உறவுகளும் செல்வாக்கு செலுத்துவதாகக் காணப்படுகின்றன.

எனவே குழந்தைகளின் மனநிலை வளர்ச்சிக்கு நாம் குழந்தைகளோடு கொண்டுள்ள உறவு நிலை எதிர்காலத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனிதனுடைய ஆளுமை வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிப்பது தன்னம்பிக்கை ஆகும். இதனைப் பிள்ளைப் பராயத்திலிருந்தே பெற்றோரால் வளர்த்து வலுவூட்டப்படுதல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே நீதிநெறிக் கொள்கைகள், உயர் எண்ணங்கள், ஆன்மிக விடயங்கள் தொடர்பாகவும் அறிவூட்டப்படுதல் வேண்டும்.

இவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் குடும்ப வாழ்க்கையில் சமூகத்துடன் நல்ல உறவுகளைப் பேணுபவர்களாகவும் காணப்படுவார்கள். பிள்ளைகள் 5 வயதின் பின்னர் வீட்டுச் சூழலில் இருந்து வெளியேறி பாடசாலைச் சூழலுக்குள் நுழைகின்றனர்.

அங்கே ஆசிரியர்களுடனும் ஏனைய பிள்ளைகளுடனும் இணைந்து செயற்படுகின்ற பிள்ளைகள் வீட்டுச் சூழலில் தாம் பெற்ற நல்ல முறைமைகளை பாடசாலைகளிலும் ஏனைய பிள்ளைகளிடம் அளவு கடந்த அன்பு காட்டுவதையும் விட்டுக் கொடுத்துச் செயற்படும் பண்பினையும் வெளிப்படுத்தும்.

இது குடும்பத்தில் பெற்றோரிடம் நல்ல பண்பினை வெளிப்படுத்துவதாக அமையும். இத்துடன் அன்பு, ஆதரவு பெற்றிராத பிள்ளைகள் பாடசாலைகளில் ஒதுங்கியிருப்பவர்களாகவும் மற்றவர்களோடு இணைந்து செயற்படாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

எனவே பிள்ளைகளிடம் பெற்றோர் கொண்டுள்ள நல்லுறவு பாடசாலையில் பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளிடம் கொண்டுள்ள உறவினைப் பொறுத்து அமையும். ஒவ்வொரு பிள்ளைக்கும் அன்பும், பராமரிப்பும், பாதுகாப்பும் மிகமிக அவசியமாகும். அவற்றை வழங்கும் பொறுப்பு பெற்றோருடையதே. ★

# படம் காட்டியினம்

படம் காட்டுறதுக்கு சில பேர் யாழ்ப்பாணத்தில இப்ப அலையினம். அவையளுக்கு வேலை தங்களாலதான் யாழ்ப்பாணத்தில எல்லாம் நடக்குது எண்டு காட்ட வேண்டும். நடக்க வேண்டியது தானா நடக்க அதுக்கு தங்கட பெயர் பொறிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

எங்கட தியேட்டர்காரரும் மேல் சொன்ன ரகம்தான். அவரும் எல்லோருக்கும் படம் காட்டுகின்றார்.

போன கிழமை யாழ்ப்பாணத்தில த.தே.கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேச சபைகளின்ர 'பஸ் ஸ்ராண்ட்' இரண்டு திறந்து வைக்கப்பட்டது. இதற்கு முதல் பிரதேச சபைக் கட்டடம் திறக்க ரி.என்.ஏ.காரர் வேற ஒருத்தரையும் விடாததால் கட்டடத்துக்கு கழிவு ஒயில் அபிஷேகம் நடந்தது நினைவிருந்ததால், இந்த முறை அவர்கள் அடம் பிடிக்கவில்லை.




இருந்தாலும் அவை தாங்கள்தான் செய்வம் என்று மென்போக்கிலதான் சொன்னார்கள். இதால தியேட்டர் காரருக்கு வசதியாய் போச்சு.

குறித்த திறப்பு விழா அன்று காலையில் யாழ். நகரில சமுர்த்தி விழாவில் தியேட்டர்காரர் பங்குபற்றி அந்த நிகழ்வு முடிய, 'பஸ் ஸ்ராண்ட்' திறப்பு விழாவுக்கு செல்லவிருந்ததால். சமுர்த்தி நிகழ்வை வேகமாக நடத்தினார். இந்த நிகழ்வில் தியேட்டர்காரர் பரிசு கொடுத்தவர். அவசர அவசரமாக கொடுத்ததால, பேப்பர்காரர் படம் எடுக்கேலாம திணறி, கொஞ்சம் ஆறுதலாய் குடுங்கோ என்று சொல்ல, நான் படத்துக்கு 'போஸ்ட்' கொடுக்க மாட்டன் என்றார் தியேட்டர்காரர்.

அவற்ர அவசரம் எல்லாம், 'பஸ் ஸ்ராண்ட்' திறப்பு விழாவுக்கு பிந்திப் போனா அதுக்குள்ள ரி.என்.ஏ.காரர் திறந்தால், எல்லாம் நான்தான் செய்தனான் என்று சொல்லேலாமல் போயிடும். இதுக்காக அவர் பேப்பர்காரருக்கு விட்ட 'நீலைப்' பார்த்தியளே!

நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

உதயன் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கிறேன். உதயனை விமர்சிப்பதில் எனக்கும் கடமை உண்டு என்ற வகையில் சிலவற்றை எனது விருப்புக்கு மட்டுமல்ல பலரது விருப்புக்குமாக கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது உதயன் பத்திரிகையில் வெளிவரும் நிழற்படங்களில் செய்திப் படங்கள் கூடுதலாக வெளிவருவதில்லை என்றே கூற வேண்டும். நிகழ்வுப் படங்கள் தான் கூடுதலாக வெளிவருகின்றன. இந்த நடைமுறையை மாற்ற வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் ஒரு செய்திப்படம் அவர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் என்ற ரீதியில் ஒவ்வொருநாளும் ஒரு செய்திப் படம் உதயனில் வெளிவருமா, அதுவும் முன்பக்கத்தில் வெளிவருமா? வெளிவரும் போது அந்த செய்திப்படங்கள் ஊடாக அந்த மக்களின் வாழ்வுப் போராட்டங்களை வெளிக்கொணர முடியும் என்ற நம்பிக்கை எமக்குள் இருக்கின்றது.

பல பக்கங்களை பல விடயங்களுக்காக ஒதுக்கும் உதயன். ஒவ்வொரு நாளும் ஒரு செய்திப் படத்துக்காக ஒரு பக்கத்தை ஒதுக்க முடியாதா? எதிர் வரும் காலங்களில் எனது கோரிக்கையை ஏற்று உதயன் செயற்படுவான் என நம்புகிறேன்.

சு.மாணிக்கவாசகர், கிளிநொச்சி.

★ ★ ★

காலங்கள் கடந்தாலும், மாற்றங்கள் ஏற்பட்டாலும் தனது கொள்கையில் இருந்து மாற்றம் கொள்ளாது அன்றில் இருந்து இன்று வரை செய்திகளை வெளியிடும் துணிவு உதயனுக்கு மட்டுமே உண்டு என்பதில் வியப்பேதுமில்லை.

எங்கே குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றதோ அங்கே மூலைமுடுக்கெல்லாம் அலசி ஆராய்ந்து தேடித் தெளிவாக செய்திகளை வெளியிடுவதில் உனக்கு நீயே நிகரானவன்.

உதயன் வளர்ச்சிக்காக மட்டுமன்றி தமிழர்களின் விடிவுக்காகவும், ஒவ்வொரு முறை தாக்குதலுக்கு உள்ளாகும்போதும் குனிந்து விடாது மேலே மேலே நிமிர்ந்து வருகிறாய்.

உனது வளர்ச்சியைக் கண்டு தமிழர் விரோத சக்திகள் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் கடந்த கால அனுபவங்களில் இருந்து உன்னை ஒன்றுமே செய்ய முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது.


உனது பக்கங்களில் தான் தமிழர்களுடைய பிரச்சினைகள் செய்தியாக, கட்டுரையாக வெளிவர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே எந்தச் செய்திகளையும் புறந்தள்ளாது பாகுபாடு பார்க்காமல் பிரசுரிப்பாயா? உதயன் தமிழர்களுடைய பத்திரிகை என்பதை மேலும் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உதயன் கையில் இருக்கிறது. அதனை முடியுமான வரை செய்ய முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமலன், கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல எண்ணங்கள் மிகவும் வலிமையானவை

■ இறையன்பு



எப்போதும் நல்ல எண்ணங்களையே எண்ணுங்கள். நல்ல எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அவை உங்களுக்கு நல்லவற்றையே கொண்டு வந்து சேர்க்கும். விவேகானந்தர் சொல்கிறார், "நீங்கள் உங்களை வலிமையானவராக நினைத்தால் வலிமையானவர்களாக மாறுவீர்கள். பலவீனராக நினைத்தால் பலவீனராகி விடுவீர்கள்.

உங்கள் எண்ணங்களுக்கு அவ்வளவு வலிமை உண்டு. எனவே எப்பொழுதும் எதிர்மறையான எண்ணங்களை தவிர்த்து, ஆரோக்கியமான நல்ல எண்ணங்களுக்கு மட்டுமே மனதில் இடம் கொடுங்கள்."

கற்பக மரத்தைப் பற்றிய கதை உங்களுக்குத் தெரியும் அல்லவா? காலம் காலமாக அந்தக் கதை சொல்லப்பட்டு வருகிறது. இருந்தாலும் அதில் பொதிந்து இருக்கின்ற உண்மையின் ஒளி எமது இருட்டான வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆற்றல் வாய்ந்தது.

காட்டு வழியே செல்கிறான் ஒரு மனிதன். கோடைக்காலத்து உச்சி வெயில் மண்டையைப் பிளக்கிறது. தாகம் தொண்டையை வறட்டுகிறது. பசி வயிற்றை இழுத்துப் பிடித்து மேலே நடக்க விடாமல் தடுக்கிறது. கால்கள் தள்ளாடுகின்றன, கண்கள் பஞ்சடைகின்றன. அந்த மனிதன் ஒரு மர நிழலில் வந்து படுத்துக்கொள்கிறான். குளுகுளுவென காற்று வீசுகிறது. வெயிலில் அல்லல்பட்டு வந்த எனக்கு குளிர்ச்சியான நிழல் கிடைத்தது,

அப்படியே கொஞ்சம் குளிர்ந்த நீரும் கிடைத்தால் தாகம் தணித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான் அவன். அவன் முன்னால் ஒரு மண்ஜாடியில் குளிர்ந்த நீர் தோன்றியது. ஆச்சரியம் தாங்க முடியவில்லை அவனுக்கு, உடனே அந்தத் தண்ணீரை எடுத்து மடக் மடக்கென்று குடித்தான். பிறகு சுற்று முற்றும் பார்த்தான் யாருமே இல்லை.. தாகம் தீர்ந்து விட்டது. பசி எடுக்கிறதே, சுவையான பலகாரங்கள் கிடைத்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்தான். உடனே அவன் எதிரே சுவையான சூடான பலகாரங்கள் பல தட்டுக்களில் தோன்றின.

மகிழ்ச்சியின் எல்லையில் மிதந்த அவன், தன் பசி அடங்கும் வரையில் அந்தப் பலகாரங்களை வயிறு புடைக்கச் சாப்பிட்டான். இப்படியாக அவன் தனக்குத் தேவையான கட்டில், பஞ்சுமெத்தை, ஆகியவற்றை மனதில் நினைத்த மாத்திரத்தில் பெற்றுவிட்டான். இதற்கு காரணம் அவன் தங்கியிருந்தது நினைத்ததைக் கொடுக்க வல்ல கற்பக மரத்தின் நிழலில் ஆகும்.

இப்போது அந்த மனிதனுக்கு பயம் வந்து விட்டது, இது என்ன? மந்திர மாயமாக இருக்கிறதே. நான் கேட்டது அத்தனையும் கிடைத்து விட்டதே, இந்தக் காட்டில் ஒரு புலி வந்து என்னை அடித்து விடுமோ என்று பயந்தான். அவ்வளவு தான் அடுத்த நொடியில் அவன் முன்னால் ஒரு வேங்கைப்புலி



தோன்றியது. கண் இமைக்கும் நேரத்தில் உறுமிக் கொண்டே அவன் மீது பாய்ந்து அடித்துக் கொன்றது.

இந்தக் கதையின் மூலமாக நாம் அறிவது என்ன? கற்பக மரம் என்று குறிக்கப்படுவது ஒரு மனிதனின் மனம்தான். மனதுக்கு மனிதன் விரும்புகின்றவற்றை கொடுக்கும் ஆற்றல் இருக்கிறது. நாம் நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும். கெட்டதை நினைத்தால் கெட்டது நடக்கும்.

எனவே எப்போதும் நல்ல எண்ணங்களையே உங்கள் மனதில் வளர விடுங்கள். நீங்கள் வாழ்வில் உயர்வது நிச்சயம். எந்த ஒரு விஷயத்தையும் நல்லதாகப் பார்த்தால் நன்மை வரும். தீயதாகப் பார்த்தால் தீமை ஏற்படும். வெற்றி நோக்கோடு ஒரு செயலை அணுகினால் வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகம் உருவாகும். தோல்விக் கண்ணோட்டு அந்தச் செயலைச் செய்தால் தோல்வி ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது.

ஆபிரிக்காவின் கிராமம் ஒன்றில் காலணிக் கம்பனி ஒன்று தனது பொருள்களை விற்பனை செய்வதற்காக ஓர் ஆளை அனுப்பியது. அவர் அந்த ஊருக்குச் சென்று சில நாள்கள் தங்கினார். தெருவில் நடப்பவர்களின் கால்களை ஆர்வத்தோடு கவனித்தார்.

தங்கள் கம்பெனியின் காலணிகளை அங்கே விற்க முடியுமா என்று நோட்டம் விட்டார். அந்த கிராமத்தில் வசித்தவர்கள் எவருமே கால்களில் காலணிகளை அணியாமல் நடந்து சென்றனர்.

இதைப் பார்த்த விற்பனையாளருக்கு சலிப்பு ஏற்பட்டது. இந்த மக்களுக்கு காலணியின் உபயோகமே தெரியவில்லை. ஏற்கெனவே காலணி அணிந்து அதன் உபயோகம் தெரிந்தவர்கள் என்றால் எமது சரக்குகளை விற்பனை செய்வது எளிது.

இங்கே ஒரு சோடி காலணிகளைக் கூட விற்பனை செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்தார். எனவே தனது கம்பெனிக்குத் திரும்பி சென்றார். தனது முதலாளியிடம் நடந்தவைகளை தெரிவித்தார்.

கம்பனி அவருக்குப் பதிலாக மற்றொரு விற்பனையாளரை

> " உங்கள் எண்ணங்களுக்கு அவ்வளவு வலிமை உண்டு. எனவே எப்பொழுதும் எதிர்மறையான எண்ணங்களைத் தவிர்த்து ஆரோக்கியமான நல்ல எண்ணங்களுக்கு மட்டுமே மனதில் இடம் கொடுங்கள். "

அதே கிராமத்திற்கு அனுப்பியது. அவர் காலணி அணியாத மக்களைப் பார்த்தார். அடடா எமது சரக்குகளை விற்பதற்கு இதுதான் சரியான இடம். இவர்களுக்கு காலணிகளை அணிவதால் என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதை விளக்கி விட்டால் போதும். விற்பனை சூடு பிடித்து விடும் என்று எண்ணினார். தனது எண்ணத்தை செயற்படுத்தினார். மக்களை ஒரு மரத்தின் நிழலில் கூட்டினார். காலணிகளின் பயன்களை அவர்களுக்கும் புரியும் விதத்தில் எடுத்துச் சொன்னார்.

கல்லிலும் முள்ளிலும் நடந்து செல்லும் நீங்கள், காலில் அடிபட்டால் இரண்டு நாள்கள் வீட்டில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டி வரும். இதனால் உங்கள் வேலை தடைப்படும். கூலி குறையும். இதை தடுப்பதற்காக கால்களுக்குப் பாதுகாப்பாக காலணிகளை அணிந்து செல்லுங்கள் என்றார்.

விவசாயிகளுக்கு அவர் சொல்வதில் உள்ள உண்மை புரிந்தது. அந்த ஊரில் விவசாயத்தில் ஈடுபட்ட பலர், இருட்டு நேரத்தில் காட்டு வழியில் நடந்து வரும்போது பாம்பு கடித்து இறந்து போயிருக்கின்றனர். கால்களில் காலணி இருக்குமானால் பாம்பு விஷத்தில் இருந்து தப்பி உயிர் பிழைக்கலாம் என்று அறிந்து கொண்டனர்.

எனவே போட்டி போட்டுக் கொண்டு காலணிகளை வாங்கி அணிந்தனர். விற்பனையாளருக்கு நல்ல இலாபம் கிடைத்தது.

காலணிகளை விற்பனை செய்ய வந்த ஒருவர் எதைத் தடையாக நினைத்துப் பின்வாங்கினாரோ அதே விஷயத்தை மற்றொருவர் சாதகமாக நினைத்து வெற்றி கண்டார். எனவே நாம் ஒரு விஷயத்தை எப்படி நினைக்கிறோமோ அப்படியே அது மாறி விடும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி மிகச் சிறந்த உதாரணமாகும்.

எனவே உங்கள் எண்ணம் உயர்ந்ததாக இருக்கட்டும். சுயநலம் அற்றதாக இருக்கட்டும். நல்லதாக மற்றவர்களுக்குப் பயன்படுவதாக இருக்கட்டும். இப்படிப்பட்ட எண்ணங்கள் உங்களை உயர்த்தும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org